எழிலார் இலங்கை

ப. மீ. சுந்தரம்



497

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 MAY 1956

497
2.56

V8.4498'N51
N56
108173

...ன்ட் லாங்மன்ஸ்

எழிலார் இலங்கை

இயற்றியவர்
பேராசிரியர் **ப. மீ. சுந்தரம்,** எம். ஏ.,
தமிழ்த் துறைத் தலைவர்
உஸ்மானியா சர்வகலாசாலை
ஹைதராபாத்

ஓரியன்ட் லாங்மன்ஸ்
பம்பாய் கல்கத்தா மதராஸ்

ஓரியன்ட் லாங்மன்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
17 சித்தரஞ்சன் அவென்யூ, கல்கத்தா 13
நிகல் ரோட், பலார்ட் எஸ்டேட், பம்பாய் 1
36–A மௌன்ட் ரோட், மதராஸ் 2
24/1 கான்ஸன் ஹௌஸ், அஸப் அலி ரோட், புது டில்லி 1
17/60 ஸன்யாசிராஜு வீதி, விஜயவாடா 2
17 நாஜிமுதீன் ரோட், டாக்கா
லாங்மன்ஸ் கிரீன் அண்ட் கம்பெனி
6–7 கிளிப்போர்ட் வீதி, லண்டன் W. 1
நியூயார்க், டொரான்டோ, கேப்டவுன், மெல்போர்ன்

இந்நூல் பதிப்புரிமை கொண்டது. பதிப்பாளர்களிடமிருந்து எழுத்து மூலமாக உத்தரவின்றி இந்நூலிலிருந்து எந்தப் பாகமும் எம்முறையிலேனும் பிரசுரிப்பது கூடாது.

விலை ரூ. 1—10—0

PRINTED IN INDIA
BY THE JUPITER PRESS PRIVATE LTD., MADRAS-18
FOR ORIENT LONGMANS PRIVATE LTD., MADRAS-2.

அணிந்துரை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணத்தில் சென்ற 1951-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடந்த தமிழ் விழாவிற்குச் சென்ற யான் இலங்கைத் தீவைச் சுற்றிப் பார்க்க நேர்ந்தது. அந்நாட்டின்கண் அமைந்துள்ள இயற்கை எழிலினையும், காட்சி மிகுந்த நகரங்களையும், வளமார் துறைமுகப்பட்டினங்களையும், கலை கனிந்து விளங்கும் திருப்பதிகளையும் யான் கண்டு இன்புற்றேன். "யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற மூதுரைக் கிணங்க, இலங்கையைப் பற்றிய ஓர் சுருங்கிய நூலை எழுதி வெளியிடின், நம் செந்தமிழ்ச் சிறார்க்கு மிக்க உதவியாக இருக்குமென்று எண்ணினேன். அது போலவே, யான் கண்டனவற்றையும், கேட்டனவற்றையும் ஆதாரமாகக் கொண்டே இந்நூல் எழுதப்பட்டிருத்தலின், குற்றங்குறைகள் இருப்பினும் இருக்கும். அறிஞர் மனங் கொள்வாராக. இந்நற்பணியில் என்னைப் புகுத்திய எல்லாம் வல்ல அருட்சக்தியை மன மொழி மெய்களால் வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

24–12–53
ஹைதராபாத்

ப. மீ. சுந்தரம்.

உள்ளுறை

1.	தாய்நாடும் சேய்நாடும்	...	1
2.	யாழ்ப்பாணமும் தமிழ் விழாவும்	...	6
3.	தமிழ் விழா	...	9
4.	அநுராதபுரமும் ஆலயங்களும்	...	13
5.	திருக்கோணமலை	...	19
6.	கண்டிமா நகர்	...	23
7.	பரதேனியாவும் சர்வகலாசாலையும்	...	32
8.	தொப்பித் தோட்டமும்—சிவனடிபாதமும்		45
9.	ஏழு கன்னிகைகள்	...	49
10.	நுவரயேலியா—மலையரசி	...	51
11.	அசோக வனம்	...	55
12.	பொலனருவா கலைச் செல்வம்	...	58
13.	திருக்கேதீச்சரத் தேவாரம்	...	63
14.	சிகிரியாவில்—அஜந்தா ஒளி	...	68
15.	மகிந்தலை, அப்புத்தளை, பண்டாரவேளை	...	73
16.	மாணிக்க நிலம்	...	77
17.	காலே துறைமுகம்	...	80
18.	கொழும்பு தலைநகர்	...	83
19.	இயற்கை எழிலும் தோட்டத் தொழிலும்		89
20.	கல்வி நிலை	...	95
21.	அன்புநெறியும் அறநெறியும்	...	99

1. தாய்நாடும் சேய்நாடும்

பல்லாயிரமாண்டுகளாகப் பாரத ராணியின் அருந் தவச் செல்வியாக விளங்கும் இலங்கைத் தீவின் இயற்கை வனப்பையும், செல்வங் கொழிக்கும் திருநகரங்களையும், எழில் தவழ்ந்து செல்லும் இன்பமார் சோலைகளையும், மலை வளங்களையும் கண்டு களிக்காதார் இல்லையென்றே கூறலாம். ஏறக்குறைய 24,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள; இச்சிறு நிலப்பரப்பானது, இந்திய நாட்டில் அநேக இடங்களில் காணப்படும் இன்பக் காட்சிச்சாலைகளை ஒருங்கே திரட்டித் தன்னகத்தே பெற்றுள்ளதுபோலும்! தாயின் அழகை அவள் சேயின் முகத்தில் காணுவதுபோல், பாரதத் தாயின் இன்ப வடிவத்தையும், அழகிய திருமேனியையும், இலங்கைத் தீவில் வடித்தெடுத்தாற்போற் காணலாகும். கண்ணிற்கினிய காட்சியளிக்கும் இமிழ்திரைக்கடல் நாப்பண் விளங்கும் இச்சிறிய தீவு இந்தியத் தாயின் கதிர்மணி முத்துக்களினின்றும் சிந்திய, ஓர் நன்முத்தோ என்றும், மாணிக்கச் சுடர் எரிக்கும் இரத்தினமோ என்றும், நினைக்கத் தக்கதாயுள்ளது. தாய் தன் மகவை ஈன்ற காலத்தில் தன் துன்பநிலையையும் கவனியாது, தன் பேரெழில் விளங்கும் தவக் குழந்தையை அன்பு கூர்ந்து கவனித்து உவப்படைதல்போல், பாரத ராணி தன் தாளின் அருகே கிடந்து விளங்கும் இலங்கைத் தீவாகிய பச்சை மாமணியை, பன்முறைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றாள் என்று கூறுவது மிகையாகாது. "சான்றோனெனக் கேட்ட" தாயின் மகிழ்ச்சிக்கு உவமை இலதானாற்போல இலங்கைச் செல்வியின் இறைமைச் சிறப்பைக் காணுங்கால் இந்தியத் தாய்க்கு ஏற்படும் மகிழ்ச்சிக்கு அளவும் உண்டோ?

தாயினின்றும் சேய் சில சமயங்களில் மனம் வேறுபடி னும், அன்பு குறையா அருளுடைமையால் தன் மகவினிடம் தாய் காட்டும் நட்புரிமை தொன்று தொட்டே நடந்து வந்ததொன்றாகும். இவ்வுண்மையைத் தமிழ் நூல்களின் வாயிலாக நாம் அறிந்திருப்பதோடு, இந்திய நாட்டுச் சரித் திரங்களைப் படிக்கின்ற காலத்தும் தெரிகின்றோம். இந்திய நாட்டின் பண்டைக்கால நன்மக்கள் பல தேயங்களுக்கும் சென்று வந்தனரென்றும், அங்ஙனம் சென்றவிடங்களி லெல்லாம் தங்களது கலைச் செல்வத்தையும் நிலச் செல்வத் தையும், அங்குள்ளார்க்கு வழங்கி வந்தனரென்றும் நன்கு புலனாகின்றது. வாணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த தமிழ் நாட்டவர்கள் பண்டைக் காலங்களில் சீனம், சோனகம், யவனம், கடாரம், சால்டியா, ஈழம், காழகம் முதலான நாடுகளோடு உறவாடி வந்தனரென்றும், சிறப்பாக ஈழத் துணவையும், காழகத்து ஆக்கத்தையும், பெரிதும் போற்றி வந்தனரென்றும், தமிழ் நூல்கள் கூறுகின்றன. தொல் காப்பிய நூலின் காலத்திற்கு முன்னரே தமிழ் நாட்டிற்கும், ஈழ நாட்டிற்கும் அன்புகெழுமிய நட்புரிமை உண்டென்றும் இரு நாட்டாரும் தங்கள் தங்கள் வளத்தைப் பெருக்கி வாழ்ந்தனர் என்பதும் வெளிப்படை. இராவணன் அகத் திய முனிவரால் கந்தருவத்தால் பிணிக்கப்பட்ட பின்னர் தென்னாடு துறந்து இலங்கையை அடைந்த செய்தி தொல் காப்பிய நூலின் உரையினின்றும் வெளியாகின்றது. எனவே, இராவணனுக்குத் தென்னவன் என்ற பெயர்க் காரணமும் பெற்றாம். சிலவிடங்களில் ஞானசம்பந்தப் பெருமானும், இராவணனைத் தென்னவன் என்று அழைத் துள்ளதைத் தேவாரங்கள் காட்டுகின்றன. ஆகவே, தமிழ் நாடும் ஈழ நாடும் அகத்தியனார் காலந்தொட்டே கேண்மை பூண்டு விளங்கியது என்பதும், முதற் சங்க காலத்தி

லிருந்தே தமிழ்வாணர்கள் இலங்கைக்குச் செல்வதும் வருவதுமாக இருந்து வந்தனரென்பதும், நன்கு அறியக் கிடக்கின்றது.

இரண்டாவதாகத் தண்ணளிமிகுந்த தசரத ராமன் இலங்கைவேந்தனை இமையவர் களிக்கப்பொருது அழித்துக் கற்பினுக்கணியாகிய பிராட்டியாரைச் சிறையினின்றும் மீட்டுக்கொணர்தற்கு, இலங்கைக்குச் சென்றகாலை கட்டிய சேதுவின் பெருமை நம் நாட்டுச் சரித்திரத்தில் மேன்மையுற்று விளங்குகின்றது. எனவே, இராமாயண காலத்திலிருந்தே நம் தாய்நாடாகிய இந்தியாவும் சேய் நாடாகிய இலங்கையும், நட்புரிமை பூண்டிருந்தன என்பதும் அறியக்கிடக்கின்றது. மேலும் ஐம்பெருங்காப்பியங்களாகிய தமிழ்க் காப்பியங்களில் ஒன்றாகிய நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தின் கதாநாயகியான கற்பின் செல்வியும், நாணின் பாவையுமான கண்ணகிதேவிக்கு, சோர் குலத்திலகமாகிய செங்குட்டுவன் கோயில் சமைத்து விழாவெடுத்தகாலை, இலங்கை வேந்தனாகிய கயவாகு என்பான் இப்பொற்றொடி நங்கையின் விழாவைக் காணவேண்டி கடல் சூழிலங்கையைவிட்டு வந்தனன். கண்ணகியின் ஆற்றலையும் அவளது அருங் கற்புடைமையையும், கயவாகு மன்னன் நன்கு போற்றிப் புகழ்ந்ததுமன்றி, தன் எழிலார் இலங்கையிலும் இந்நங்கையைக் கொண்டாடி விழா வெடுத்தான் என்றும் அறிகின்றோம். இலங்கை நாட்டின் சரித்திரங்களாகிய மகாவம்சம், தீபவம்சம் என்பவைகளினின்றும் நம் நாடாகிய பாரத நாட்டிற்கும், அதிலும் சிறப்பாகத் தமிழ் நாட்டிற்கும், இலங்கைத் தீவிற்கும் பல்லாயிரமாண்டுகளாக நட்புரிமை உண்டென்பதும், வாணிக முன்னேற்றமும், கலை வளர்ச்சியும், செழித்தோங்கி வந்தன என்பதும் நாம் அறியும் உண்மைச் செய்திகளாம்.

இத்துடன் நில்லாது நம் பாரதத் தாயின் மணிவயிற்றில் அருங்கருணைத் தடங்கடலாக அவதரித்த புத்ததேவன் காட்டிய வீட்டின்ப மார்க்கத்தை, சோகந்தீர்ந்த அசோக மன்னர் தன் அருமைப் புதல்வன் மகீந்தன் என்பானை இலங்கைக்கு அனுப்பி ஆன்மநேய உணர்ச்சிகளை அங்குள்ளார் மகிழும் வண்ணம் போதித்தார். பல நாடுகளுக்கும் பரவிச் சென்ற புத்ததேவனின் அறபோதனை பிற்காலத்தில் உலக மதங்களுள் முதன்மையான இடத்தைப் பெற்றுத் திகழ்கின்றது. இலங்கைத் தீவினுக்குச் சென்ற அசோகனின் புத்திரனைப் பற்றிய செய்திகள், அநேக இடங்களில் ஆங்குக் காணப்படுகின்றன. மீந்தலை என்று இலங்கையில் இக்காலத்தார் மரூஉமொழியாக வழங்கும் இடம் மகீந்தனைப் பற்றியதாகும். அப்பெரியார் இருந்து வாழ்ந்துவந்த மலையும் அவர் போதித்த இடங்களும் இன்றும் இருக்கின்றன. அவருடைய முயற்சியே இலங்கையில் புத்தமதம் நன்கு பரவுவதற்கும், வேரூன்றி நிலைத்து நிற்பதற்கும் காரணம் என்பதாகச் சரித்திரம் கூறுகின்றது.

ஆத்ம சக்தியை அகில நாடுகளுக்கும் அள்ளிக் கொடுக்கும் பாரததேவி தன் அருந்தவச் செல்வியாக விளங்கும் இலங்கைப் பெண்ணிற்கு எடுத்து வழங்கும் தன்மையில் குறையும் உண்டோ? வாணிபத்துறையில் வளங்கொழிக்கும் இலங்கை, தன் தாய்நாடாகிய பாரதத்திற்கு மிக்க மணமுள்ள தேயிலை, புகையிலை, தேங்காய், பாக்கு, வாசனைப் பொருள்களான இலவங்கம், மிளகு முதலானவற்றை நன்கு கொடுத்து உதவி வருகின்றது. உணவுப் பொருள்களில் இன்றியமையாதனவாகிய அரிசி, எண்ணை, வெங்காயம், மற்றுமுள்ள தானியங்கள் இலங்கைக்கு இந்தியாவினின்றும் அனுப்பப்படுகின்றன. வாணிபத்தின் வழியாகச் செல்லும் உணவுப் பொருள்களன்றி, கலைச் செல்வங்களும் அந்நாட்டி

னர்க்கு வழங்கப்படுகின்றன. முடியுடை வேந்தர்களாகிய தமிழரசர்கள் காலத்தில் பல அறிஞர்களும், இசைவாணர் களும், சிற்பமன்னர்களும் இலங்கையிற் சென்று குடியேறி னர். அங்ஙனம் சென்றோர் மக்கள் வாழ்வில் ஏற்படும் குறைபாடுகளைக் களைந்ததுமன்றி, அன்னோரின் தொழில் முறைகளில் ஒன்றி உழைத்து அங்குள்ள செல்வ நிலையைப் பெருக்கினர். உழைப்பும் உண்மையும் மிகுந்த தமிழ் மக்கள் இலங்கையின் நிலமகளிடம் நாளுது முயற்சி செய் கின்ற தன்மையால் அந்நாட்டின் வளம் வளர்ந்து வருகின்ற தென்றே சொல்லலாம். சிற்பக் கலையில் சதுரப்பாடுடைய சோழ மன்னர்கள் தந்துள்ள நிதித்திரள்களை பொலனருவா என்ற இடத்திலுள்ள கோயிற் பணிகளினின்றும் அறியலாம். தேவாரத் திருமுறைகளைப் பாடியருளிய திருஞானசம்பந் தரும், தம்பிரான் தோழருமான சுந்திரமூர்த்திகளும் தங்கள் பாடல்களில் பாடிப்போந்தத் திருக்கோணமலையும், திருக்கேதீச்சரமும், இலங்கைச் சைவர்களுக்கு இன்பம் பயப்பனவாம். கந்தரனுபூதிபெற்றுக் கந்தரனுபூதி சொற்ற கவிதாமணியாகிய அருணகிரியார் மனமுவந்து பாடிய கதிர் காமக் கோட்டத்தைப் பெற்றிருக்கும் இலங்கை நாட்டின் ஆத்மசக்தியை எவ்வாறு புகழ்ந்து கூறுவது? அஜந்தாவில் காணப்படும் அருங்கலையின் சுடர்க் கதிர்கள் சிகிரியா என்ற மலையின்மீதுள்ள சித்திரங்களில் ஒளிவிட்டுத் திகழ்கின்றன. புத்த பகவானின் புகழ்க்கதிர்கள் அநுராதபுரத்தில் அலைவீசி அமர்ந்துள்ளன. இத்துணைச் சீரும் சிறப்பும் பொருந்திய மங்கையாகிய இலங்கை நங்கையின் எழிலை மேலே விவரித் துக் கூறுவோம்.

2. யாழ்ப்பாணமும் தமிழ்விழாவும்

இலங்கைத் தீவின் முகப்பரப்பில் அழகிய திலகமாக விளங்கும் யாழ்ப்பாணத்தைப்பற்றிக்கூறுமிடத்து அங்நகரின் வரலாற்றைச் சிறிது அறிந்துகொள்ளுதல் ஏற்புடைத்தாம். தென்னுட்டுத் தமிழரில், பல்கலை வாணர்களாக விளங்கிய அநேகர் ஈழநாட்டு அரசர்களின் நன்கொடை ஆதரவால் அங்கு சென்று நிலைபெற்றனர் என்று முன்னரே சுட்டப்பட்டது. அருங்கலை விநோதர்களாக அரசர்கள் இருந்தாலன்றி கலைவளர்ச்சியும், மனவெழுச்சியும் அறிஞர்களிடையே தோன்றி விளங்கா. முத்தமிழ்ச் சிறப்பைப்பெற்ற நற்றமிழ் வாணர் அங்நாட்டிற் கலந்து வாழ்கின்ற காலத்து இசைக்கலை வல்லுனரான யாழ்ப்பாணர் ஆண்டு வதிந்த அரசர்பால் தங்கள் கலைத்திறனைக்காட்டி மகிழ்விக்கவே, அரசன் மனமுவந்து கண்ணிழந்தயாழ்ப்பாணர் ஒருவருக்கு அப்பகுதியான நிலப்பரப்பை நன்கொடையாக வழங்கிவிட்டான். யாழ்வல்லான் ஒருவன் பரிசாகப் பெற்றுக்கொண்டதின் காரணமாக, அவ்வூர் யாழ்ப்பாணமென்று பெயர் பெற்றது. பாணர்கள் யாழில் வல்லவர்கள். எனவே, பாணன் தமது யாழின் உதவியால் அரசரிடம் பெற்ற நன்கொடை நிலனே யாழ்ப்பாணமாம் என்று கொள்க.

யாழ்ப்பாணம் என்ற நகர் ஏறக்குறைய 4,30,000 மக்களைத் தன்னகத்தே உடையது. சுற்றுப்புறங்களில் அமைந்துள்ள சிற்றூர்களையும், அழகிய தோட்டங்களையும், தென்னைமரச் சோலைகளையும், நன்கு கட்டப்பட்டுள்ள கலாசாலைகளையும் உடையது. இந்துமதக் கோயில்கள் அநேகம் அங்கு அமைந்துள்ளன. அக்கோயில்களில் பூசாரிகள் வழிபாடியற்று முறையும், மணியடித்தல், பூசை செய்தல் முதலானவைகளும் பார்ப்பதற்கு உற்சாகமாக உள்ளன.

அழகிய தெருக்களில் பல வீடுகள் நன்முறையில் கட்டப்பட்டிருந்தபோதிலும், அநேக இல்லங்கள் சோலைகளின் மத்தியில் தனித்த முறையில் கட்டப்பட்டுள்ளன. பனை ஓலையால் நெருக்கமாக வேயப்பட்ட கூரைகளும், தென்னை ஓலையால் மூடப்பட்டுள்ள நாற்பக்கச் சுவர்களும், வனப்புடையனவாகத் தோற்றுகின்றன. யாழ்ப்பாணத்தில் அதிகமாக வசிப்பவர்கள் தமிழர்களே. ஒரு சிறிது ஜனத்தொகை கத்தோலிக்கக் கிருஸ்தவர்களாகக் காணப்பெறுகின்றது. அமெரிக்க நாட்டுப் பாதிரிகளில் சிலர் சுமார் நூறாண்டுகளாக அவ்வூரின்கண்ணே வாழ்ந்து வருகின்றனரென்றும், கல்விச்சாலைகளையும் மதக் கோயில்களையும் நன்கு அமைத்துத் தொண்டாற்றி வருகின்றனரென்றும் அறியக் கிடக்கின்றது. யாழ்ப்பாணத்திலிருந்து வட்டுக்கோட்டை என்ற 6 மைல் தூரத்திலுள்ள யாழ்ப்பாணக் கல்லூரி என்பது ஆங்கிலக் கல்வியை நன்கு போதித்து வருகின்றது. அக் கல்லூரி 1816-ஆம் ஆண்டு நிறுவப்பட்டதாம்.

இலங்கைத் தீவில் அமைந்துள்ள போர்ச்சுகீசியர் கோட்டைகளில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கோட்டையே மிகப்பழமையானதாகவும் நகரத்தின் மத்தியில் கட்டப்பட்டதாகவும் உள்ளது. 1680-ஆம் ஆண்டில் கட்டப்பட்ட இக் கோட்டைச் சுவர்கள் இன்றும் புதிதாகவே காணப்படுகின்றமையின் இதுவே அப்போர்ச்சுகல் தேசத்தாரின் தொழில் திறமையை நன்கு வெளிப்படுத்தும் சான்றாம். அக்கோட்டையில்தான் தற்கால அரசாங்கக் காரியாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகருக்கருகே 11 மைல் தூரத்தில் அமைந்துள்ள காங்கேசன் துறைமுகமே இந்தியாவிலிருந்து வரும் ஆகாய விமானங்கள் இறங்குவதற்கு இடமாக உள்ளது. இத்

துறைமுகத்தில் சிறிய கலங்கள் வந்து தங்குகின்றன. இதுவே இலங்கை இருப்புப்பாதை வடக்கே சென்று முடியும் இடமாம். சிமெண்டு தயார் செய்யும் அரசாங்க நிலையம் ஒன்று இங்கு அமைந்திருப்பதோடு புகையிலை உற்பத்தி செய்யும் பண்ணைகளும், குடிசைத் தொழில் தோட்டங்களும் அநேகம் உள்ளன. இதன் கடற்கரையில் சுமார் 3 கல் தொலைவில் கீரிமலை என்ற இடம் ஒன்று உண்டு. அங்குள்ள நீர்ச்சுனை ஒன்றில் பலமக்கள் நீராடுகின்றனர். உவர்ப்பு நீரினருகே நன்னீர் ஊற்று ஒன்று ஏற்பட்டிருப்பதின் வரலாற்றைக் குறித்து அநேக கதைகள் கதைக்கப்படுகின்றன. அவ்விடத்திலிருந்து 3 கல் தொலைவில் மாவட்டபுரம் என்ற இடத்தில் சிவபெருமானின் கற்றளி ஒன்று காணப்படுகின்றது. அத்தலத்திற்குப் புராணம் ஒன்று இருப்பதாகவும் கூறுகின்றனர்.

யாழ்ப்பாண வாசிகளில் அநேகர் நன்கு படித்தக் கல்விமான்களாகவும், அறிவாளிகளாகவும் காணப்படுகின்றனர். அரசாங்க அலுவல்களில் தேர்ச்சிப்பெற்றுத் திகழ்கின்றனர். சிக்கனமான முறையில் வாழ்க்கையை நடத்தத் தெரிந்துள்ளனர். ஆனால், எளிதில் யாவருடனும் உரையாடுதற்கு ஒருப்படார். உரையாடத் தொடங்கின் மனங்கொள்ளுமாறு பேசும் மனப்பான்மை உடையர். திசைச் சொற்கள் அவர்களுடைய உரைப்பகுதிகளில் மிகுதியாகக் காணப்படவில்லை. பண்டைத் தமிழர் நூல்களில் காணப்படும் அரிய பதங்களை அவர்கள் வாய்மொழி வழங்கக் காணலாம். பைந்தமிழ்ப் பயிலும் பாவலர்களோ இவர்கள் என்று புதிதாக அங்குச் சென்ற தமிழன் உண்மையாகவே வியப்படைவான். "யாழ்ப்பாணத்தமிழ்" என்பது எல்லோராலும் புகழப்படுவது பொருத்தமேயாம் என்க.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த யாழ்ப்பாணத்தில் "தோன்றிற் புகழொடு தோன்றுக" என்பதற்கிணங்க, பிறந்து புகழ் பெற்ற வித்துவசிரோன்மணிகளில் முதன்மையாக விளங்குபவர் உயர்திரு. ஆறுமுக நாவலரவர்கள். இலக்கண வித்துவானாகவும், சிவஞானச் செல்வராகவும் விளங்கிய இப்பெரியார் தமிழ்மொழிக்குச் செய்துள்ள தொண்டின் திறன் பெரிதும் போற்றத் தகுந்தது. தமிழறிஞர்களுள் இரண்டாவதாகக் கூறப்படவேண்டியவர்கள் இலக்கண வித்துவான் கதிர்வேல் பிள்ளையும் சுவாமி விபுலானந்த அடிகளும் ஆவர். இலங்கையில் முடிசூடாமன்னராக விளங்கிய சர். இராமநாதனும் யாழ்ப்பாணத்தாரேயாவர். திரு. அருணசலம், திரு. மகாதேவன் முதலான அருந்தமிழர்கள் நம் மொழியாகிய தமிழ் மொழிக்கும், ஆண்டுள்ள தமிழர்களுக்கும் பல நற்றொண்டுகள் செய்து புகழுடம்பைப் பெற்றுள்ளார்கள். தமிழ்ச் சர்வகலாசாலை ஒன்றை வருங்காலத்தில் இந்நகரத்தில் நிறுவுவதற்கான நன் முயற்சிகள் நடைபெற்று வருவதானது நம்மனோர்க்கு மிக்க ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கின்றது.

---

3. தமிழ் விழா

நற்றமிழன்பும் மக்கட்பண்பும் நிரம்பப் பெற்ற யாழ்ப்பாணத் தமிழர்கள் நான்காம் தமிழ் விழாவைத் தங்கள் நகரில் நடத்தி வைக்குமாறுச் சென்னைத் தமிழ்ச் சங்கத்தாரை வேண்டிக் கொண்டதின் பயனாக விழா நடைபெறுவதற்கான பெரு முயற்சிகள் செய்யப்பட்டன. பிரமுகர்களான சர். கந்தையா வைத்தியநாதன், கனம் கல்வி மந்திரி கனகரத்தினம், பரமேஸ்வரா கல்லூரித் தலைவர் திரு. நடேசபிள்ளை முதலாயினோர் இவ்விழாவின் முக்கிய காரிய

நிர்வாகிகளாகத் திகழ்ந்தனர். தமிழ் விழாவைச் சிறப்புற நடத்துவதற்கென மிகுந்த பொற்குவியல் திரட்டப்பட்டது. தென் தமிழ் நாட்டினின்றும் பல அறிஞர்களைச் சொற்பொழி வாற்றுமாறுத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். பத்திரிகை களில் தமிழ் விழா நடைபெறும் விபரங்களும், காலங்களும், சொற்பொழிவுகளும், சொற்பொழிவுகளின் தலையங்கங் களும் நன்கு பொறிக்கப்பட்டன. தமிழ் மொழியின் பண் டைப் பெருமையையும் சிறப்பையும் நன்குணர்ந்த பெரி யோர்கள் தங்கள் செந்தமிழ்ச் செல்வியின் பைந்தமிழ் நங்கையான யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்படும் திருவிழா வைக் காணவேண்டிப் பெருந்திரளாகக் குழுமினர். டில்லி, கல்கத்தா, பம்பாய், ஹைதராபாத், சென்னை முதலான இடங்களினின்றும், தமிழறிஞர்கள் திரள்திரளாக நிலமார்க்க மாயும், கடல் மார்க்கமாயும், ஆகாய மார்க்கமாயும் வந்து குவிந்தனர். மலேயா, பர்மா நாடுகளினின்றும் தமிழர்கள் விஜயம் செய்தனர். தென்னாப்பிரிக்காவிலுள்ள தமிழர் களும் இவ்விழாவைக் கேள்விப்பட்டு வாளாவிருந்தாரில்லை. அங்குள்ள சிலரும் தமது தாய்மொழியாகிய தமிழ் மொழியை மறந்தாரில்லையாதலால், விமானங்கள் மீதேறி யாழ்ப்பாண நகரில் வந்திறங்கினர். இஃது இங்ஙனமாக இலங்கையிலுள்ள திருச்செல்வர்களும், கல்விமான்களும், நூலாசிரியர்களும் ஆயிரக்கணக்கான தொகையில் வந்து கூடினர். யாழ்ப்பாண நகருக்குப் புறம்பேயுள்ள பல கிரா மங்களினின்றும், பல தமிழன்பர்கள் தங்கள் வாழ்க்கைத் துணைவியர்களோடும், மக்களோடும் மகிழ்ச்சியுடன் வந்து கலந்துகொண்டனர். இங்ஙனம், மாவிருஞ் சோலை சூழ்ந்த தும் அன்பு கெழுமிய மக்கள் நிரம்பியதும், கல்லூரிகளும் கலாசாலைகளும் நன்கு அமையப் பெற்றதும், இலக்கண வித்துவான்களைத் தமிழுலகத்திற்குத் தக்க முறையில் தந்து

புகழ் கொண்டதுமான யாழ்ப்பாணத்தில் தமிழ் விழா நடந்தது மிக்க மாண்புடைத்தன்றோ!

விழாவிற்கெனக் கூடிய மக்கள் தொகுதி 10,000 என்று கூறலாம். பெண்பாலார் 2,000க்குக் குறையாமல் இருந்தனர். மூன்று தினங்கள் விழா நடைபெற்றது. யாழ்ப்பாணத்தை அடுத்துள்ள திருநெல்வேலி என்ற இடமே விழா நடந்த இடமாகும். மேடைகளும் பந்தல்களும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டிருந்ததுடன், தாணுக்காரர்களும் தொண்டர்களும் செல்லும் மக்களுக்கு யாதும் இடையூறு நேராதபடி நன்கு கண்காணித்து வந்தனர். ஒலி பரப்பும் கருவிகள் பல அமைக்கப் பெற்றிருந்தன. தாய்மார்களுக்குத் தனியாக இடம் செப்பனிடப்பட்டிருந்தது. காலையில் துவங்கும் சொற்பொழிவானது மாலையில்தான் முடிவடையும். இடைகழி நேரத்தில் அவரவர் தங்கள் தங்களுக்குரிய விடுதிகளுக்குச் சென்று வயிற்றுக்குச் சிறிது ஈந்து வரலாம். இந்தியாவிலிருந்தும் மற்றை நாடுகளிலிருந்தும் வந்துள்ள தமிழன்பர்களுக்குத் தனி இடங்களும், உணவு, உறையுள் முதலான வசதிகளும் செம்மையாக அமைக்கப்பட்டிருந்தன. இராமநாதன் கல்லூரியிலும், பரமேஸ்வரா கல்லூரியிலும், பல பெரியார்கள் உற்சாகமாகத் தங்கினார்கள். விழாவின் முதல் நாளில் கலந்துகொண்ட மக்கட் திரளைக் கணக்கிட்டுக் கூறுதல் அரிதாம். மூன்று தினங்களிலும் பந்தற்கீழ் வீற்றிருந்து, மன, மொழி, மெய்களை, அடக்கிச் சொற்பொழிவுத் திறன்களில் ஈடுபட்டவரே பதினாயிரவர் என்று நாம் கொள்ளல்வேண்டும்.

விருந்தினரை உபசரிக்கும் முறைகளைத் திருக்குறளாசிரியர் நன்கு வகுத்துக் கூறினர். யாழ்ப்பாணத்துத் தமிழர்களும் தமிழ் மறையை நன்கு படித்துத் தெளிந்தோராதலின்

தங்கள் நகருக்கு விருந்தினராய் வந்துள்ளப் பிறநாட்டு அன்பர்களை மனமுவப்ப உபசரித்தனர். முகமன் கூறினர். பக்கலிலிருந்து உண்ணீர்! உண்ணீர்! என்று உற்சாகப்படுத்தினர். உண்டபின் வாய்பூசுதற்கு நீரளித்தனர்; உடை அளித்தனர். என்னே இவர்களது அன்புடைமை! தமிழ் மொழியின் இனிமையையும் பண்பாட்டையும் நன்குணர்ந்திருந்தமையாலன்றோ இங்ஙனம் செய்கின்றனர் என்றே எண்ண நேரிட்டது. இதுவன்றோ நற்றமிழன் நடத்தை!

சொற்பொழிவுகள் பலவகையான முறையில் ஆற்றப்பட்டன. இலங்கை வாசிகள் தங்கள் நாட்டுத் தமிழர்கள் இருக்கும் நிலைமையையும், தமிழ்மொழி வளர்ந்து வருகின்ற முறைமையையும், தெளிவாகவும், சுருக்கமாகவும் பேசிக் களித்தார்கள். அவ்வன்பர்கள் பேசும் உரைநடைத் தமிழ் சாதாரண நம்நாட்டுத் தமிழர்களுக்கு விளங்குமோ என்ற ஐயம் யார் மனதிலும் ஏற்படாமல் இராது. கவி இன்பம் பயப்பதுபோல் பேசும் ஆற்றல் அவர்களிடையே இயல்பாகவே அமைந்துள்ளது. மேலும், யாழ்ப்பாணத்தார் தமிழ் நாட்டினிடத்து வைத்திருக்கும் பற்றும், தமிழரிடத்துள்ள நட்புரிமையும், மரியாதையும், பெரிதும் சிந்தித்துப் பார்த்துப் போற்றுதற்குரியன. தமிழ் நாட்டின்கண் பிறந்துள்ள தமிழன் ஒருவன் தன் தாய்மொழியாகிய தமிழைப் பேசிய போதினும், படித்த போதினும், அத்துணைப் பேரன்பு தன் மொழியிடத்துக் கொள்வானோ என்ற ஆசங்கை இன்றும் தீர்ந்தபாடில்லை. பழைய தமிழ் நாட்டரசர்கள் புலவர் பெருமக்களுக்குக் காட்டிய மதிப்பும், உபசாரமும், சங்க நூல்களில் நாம் படிக்குங்காலையில் ஒருவாறு நம்புதற்குப் பின் வாங்குதலுமுண்டு. யாழ்ப்பாணத்தில் நடந்தேறிய தமிழ் விழாவின் சிறப்பைக்கண்ட பின்னர் அத்தகைய ஐயம் நம்மைவிட்டு அறவே அகன்று விடுமென்னலாம். சங்க

நூல்களில் காணப்படும் உயர்வுடை உபசாரம் புலவர்களிடையே வழங்கி வந்ததின் உண்மையை யாழ்ப்பாணத் தமிழர் நன்கு நிரூபித்துக் காட்டினர்.

மூன்று தினங்களும் "தவலருந்தொல் கேள்வித் தன்மையுடையார்" பால் செலவழிக்கப்பட்ட பின்னர் விழா வயர்ச்சியால் சிலர் இரண்டொருதினம் ஆண்டுத் தங்க நேர்ந்தது. பிறநாட்டு வாசிகள் நடுவூருள் பழுத்து நின்ற மரத்தை நாடி வந்துள்ள பறவைகள் இன்பந் துய்த்தபின் வேறு மரங்களை நோக்கிச் செல்லுமாறுபோல் சிறு சிறு குழுவினராய்ப் பிரிந்து நாற்றிசையிலும் செல்லவாரம்பித்தனர். சில தமிழன்பர்கள் இந்தியாவிற்குச் சென்று செய்யக்கூடிய தொண்டைக் காட்டிலும், யாழ்ப்பாணத்திலேயே இருந்துகொண்டு நன்முறையில் பணியாற்றலாமே என்றெல்லாம் பேசிக்கொண்டனர். குறிஞ்சி நிலத்தின் குறையாச் செல்வமும், தண்பணை மருதத் தளராச் செல்வமும், முல்லை நிலத்தின் முடியாச் செல்வமும், நெய்தல் நிலத்தின் நீங்காச் செல்வமும், தன்னிடத்தே கொழித்து விளையாடும் இலங்கைச் செல்வியின் எழிலன்றோ இங்ஙனம் எண்ண நேரிட்டது!

---

4. அநுராதபுரமும் ஆலயங்களும் (Anuradhapura)

யாழ்ப்பாணத்திலிருந்து இந்நகர் சுமார் 120 மைல் தூரத்திலுள்ளது. இலங்கைத் தீவிலுள்ள புராதன நகரங்களில் இது ஒன்றாகும். இதன் சிறப்பைத் தெரிந்து கொள்ளு முறையானே இந்நகரின் பூர்வ சரித்திரத்தையும் ஒருவாறு அறிந்துகொள்ளுதல் ஏற்புடைத்தாம். சிங்களவர் சரித்திரம் முக்கியமாக விஜயன் காலத்தில் ஏற்பட்டதாம். அதன் காலம் ஏசுநாதருக்கு ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்

என்று கூறலாம். விஜய மன்னனின் மருகன் ஒருவன் அநு ராதா என்ற அவன் மாமனிடம் அந்நகரைப் பெற்ருன். பின்னர் அந்நகரையே தனது தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தான். அதன் காரணமாகவே அந்நகர் அநுராதபுர மாயிற்று. மேலும், அநுராதா என்ற நாண்மீன் தினத் தன்று அந்நகர் நிறுமிக்கப்பட்டதனுல் அப்பெயர் உண்டா யிற்று என்பதாகவும் சொல்லப்படுகின்றது. சிங்களவர் அந்நாட்டை அரசாளுங் காலையில், மகிந்தன் என்ற அசோக மன்னன் புதல்வன் அவண்போந்து புத்த மதத்தில் சிங்கள வரைச் சேர்ப்பித்தான். அநுராதபுரத்தில் காணப்படும் பழைய சின்னங்களும், கோயில்களும், திருவுருவங்களும் பெரும்பாலும் மத சம்பந்தமானவையாகவே காணப்படுகின் றன. வழி வழி வந்த பௌத்தமத அரசர்கள் தங்கள் தங்கள் புகழுக்காகவே அநேக சங்கங்களையும் மடங்களையும் ஏற்படுத்தியுள்ளார்கள். ஏசுநாதருக்குப் பின் ஐந்தாவது நூற்ருண்டில் காசியப்பா என்ற அரசன் தனது தலைநகரை சிகிரியாவுக்கு மாற்றினுன். இந்நிகழ்ச்சி யொன்றைத் தவிர அநுராதபுரமானது சுமார் 12 நூற்ருண்டுகள் வரையில் இலங்கைத் தலைநகரமாக விளங்கியதென்பது சரித்திர உண் மையாகும். 8வது நூற்ருண்டில் இலங்கைத் தலைநகரமானது பொலனருவா என்ற இடத்திற்கு மாற்றப்பட்டது. 12வது நூற்ருண்டில் **பராக்கிரமபாகு** என்ற பெயர்போன அரசன் இலங்கையின் அரண்களை நன்கு அமைத்துத் திருத்திய துடன் வேறு நாடுகள் மீதும் படையெடுத்துச் சென்ருன். இவன் காலத்திற்ருன் சிங்கள வம்சத்தினரான சிங்களவர் களின் மேன்மை நன்கு விளக்கமுற்றது.

புராதன நகரமாகிய அநுராதபுரத்தைச் சுற்றிப் பார்க் குங்கால் விஜயநகர ஆட்சியின் புராதன சின்னமாகிய ஹம்பி நகரத்தின் அற்புதக் காட்சிகள் ஞாபகத்திற்கு வருகின்றன.

அநேக நூற்றாண்டுகளாகக் காடுகளின் மத்தியில் செழித்தோங்கிய பொலனருவா தனது பண்டைப் பெருமையைத் தற்பொழுதும் புலப்படுத்தாமலில்லை. சென்ற நூற்றாண்டிலிருந்துதான் இலங்கைப் புத்தர்களின் முயற்சியால் இந்நகரம் நவீன வாழ்க்கை முறையைப் பின்பற்றி விளங்குகின்றது. இடமகன்ற வாவிகள், கோயில்கள், நீர் விளையாட்டிடங்கள் முன்பு நன்முறையில் கற்களால் கட்டப்பட்டிருந்தனவென்பது சாதாரணமாகக் கண்ணிற்குத் தெரிகிறது. முதன் முதலாகக் கூறவேண்டியது போதிமரக் கோயில் (அரசமரக் கோயில்) ஞான சூரியனாக விளங்கிய சித்தார்த்தர் தான் தவமியற்றிய காலத்துத் தங்கியிருந்த அரச மரத்தின் ஓர் கிளையானது அசோகன் மகளான சங்கமித்திரை என்ற சன்னியாசியால் இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டது. இந்நிகழ்ச்சி ஏ.சுவிற்கு முன் 3-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகும். இக்கிளை, மூலமரத்தின் வலப்பக்கத்தினின்றும் எடுக்கப்பட்டதென்றும், இன்றும் அக்கிளையே அழியாது பெருகி நிற்பதென்றும், உலகத்தில் இம்மரமே மிகப் பழமையானதென்றும் பலர் கூறிவருகின்றனர். புத்தமதத் தந்தைக்கும் இக்கிளை மரத்துக்கும் உள்ள தொடர்பே, இக்காலத்தில் பல்லாயிரக் கணக்கான புத்தர்கள் இக்கிளையை வணங்கிப் பணிவதற்குக் காரணமாகும்.

இரண்டாவதாகக் கூறவேண்டியது அநுராதபுரத்து வீதியின் பின்புறம் காணப்பெறும் 1600 கற்றூண்கள். இவை ஓர் சிறந்த மண்டபத்தின் சின்னங்கள் என்று கூறுகின்றனர். ஒன்பது மாடங்களோடும் ஆயிரம் அறைகளோடும், 2200 ஆண்டுகளுக்கு முன் விளங்கிய ஓர் பெரிய மாளிகையாம் இது என்று கொள்ளவேண்டும்.

மூன்றாவதாகக் கூறுதற்கமைந்தது ஓர் பெரிய புத்தமதக் கோயில். அதைப் பழுது பார்க்கும் புத்தமதப் பாதிரி

களும், பொதுமக்களும், சுமார் 65 ஆண்டுகளாக இக்கோயில் பழுது பார்க்கப்பட்டு வருகின்றது என்கின்றனர். மிகப் பழைமையான இக்கோயிலைப் போன்று வேறொன்று கட்டுவ தென்றால் ஏறக்குறைய 20 லட்சம் செங்கற்கள் வேண்டு மாம். இக்கோயில் அநுராதபுரத்தின் கீழ்ப் பாகத்தில்



[Photo : M. D. Gunasena & Co., Ltd.

படம் 1. துபராமா, அநுராதபுரம்

அமைந்துள்ளது. இத்தன்மையான பௌத்த மதக் கோயில்கள் ஆங்கு ஐந்துக்குமேல் இருக்கின்றன.

சந்திரகாந்தக் கல் ஒன்று அங்கு புதைக்கப்பட்டுள்ளது. அதன் சிற்பத்தொழிலைச் சிற்பிகள் கண்டுதான் போற்றிசைத் தல்கூடும். சந்திரனின் நான்கு பகுதிகளுக்குக் குறிப்புரை யாக அக்கல்லின் நான்கு பக்கங்களிலும் நான்கு மிருகங்கள் செதுக்கப்பட்டுள்ளன. சந்திரகாந்தக் கல்லின் இயற்கைக் குணத்தை அழிவுறாதபடி காப்பாற்றிக் காட்டும் முறை யிலேயே இக்கல் அமைக்கப் பெற்றுள்ளது.

பல இடங்களில் புத்ததேவனின் திருவுருவம் சிதைந்தும் சிதையாமலும் காணப்படுகின்றது. சமீப காலத்தில் புதை பொருள் ஆராய்ச்சியால் ஓர் அரச மாளி கையே கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஈஸ்வரமுனி கோயில் என்ற கற்றளி ஒன்று அநுராத புரத்தின் தென்பாகத்தில் காணப்படுகின்றது. மலையின் சரிவில் நேர்த்தியான முறையில் இக்கோயில் கட்டப்பட்டுள் ளது. கல்லிற் செதுக்கப்பட்ட அழகிய பதுமைகள் இவ் விடத்தில் காணப்படுகின்றன.

பர்மா, சயாம், திபெத் முதலான இடங்களிலுள்ள குகைக் கோயில்களைப் போன்று இவ்வூரிலும் சில இடங் களில் குகைக் கோயில்கள் அமைந்துள்ளன. குகையிலிருந்து தவம் செய்தலையே புத்த சன்னியாசிகள் மெத்த விரும்பினர் என்பது நன்கு தெரிந்ததே. இம்முறையிலேயே இக் குகைகள் அமைக்கப்பட்டனபோலும். இவை இயேசுநாத ருக்கு முன் மூன்று நூற்றாண்டுகள் பழைமையுடையன என்று தெரிகின்றது.

தற்கால நாகரிக வாழ்க்கைக்கு ஏற்ற முறையில் நகரம் திருத்தி அமைக்கப்பட்டிருந்தபோதிலும் உலகத்தில் பிர சித்தி பெற்ற புராதன நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்று என்பது டால்மியின் படத்திலிருந்து தெரியக் கிடக்கின்றது.

அநுராதபுரம் என்ற பெயரை **அநுராகிராமன்** என்று அவர் தனது நிலப் படத்தில் வழங்கியுள்ளார்.

பௌத்தர்கள் மிகுதியாக உள்ள இந்நகரில் வேறு மதத்தினரும் வாழ்ந்து வருகின்றனர். மத பேதமின்றி எல்லோரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். போதி மரக்கோயிலிலுள்ள புத்த சன்னியாசிகள் யாருடனும் அன்பாகவே பழகுகின்றனர். ஆங்கிலம் தெரிந்தவர்களும் சிலர் இருந்து வருகிறார்கள். இந்து மதத்தினர்களும் பௌத்த ஆலயங்களுக்குச் சென்று வழிபாடியற்றுகின்றனர். தாய் மதமும் சேய் மதமும் ஆண்டு கலந்து தழுவி நிற்கின்ற காட்சி ஓர் நற்காட்சியேயாகும். பௌத்த ஆலயங்களுக்குச் செல்ல வேண்டுமெனில் கையுறையாகக்கொண்டு செல்லவேண்டியது தூய மலர்களேயாம். மணிமேகலையில் மலர்வனம்புக்க காதையில் புத்த பீடிகையைப் பற்றிக் கூறப்படும் அழகிய செந்தமிழடிகள் ஈண்டு நன்கு சிந்தித்து இன்புறற்பாலன. ஆண்டவன் தாமரைச் சேவடிகளே ஆன்மகோடிகளுக்குத் தண்ணிழலாவது என்ற சமய உண்மையைப் பௌத்த மதத்தினர் திட்டமான வழிபாடாகக் கொண்டுள்ளனர். கீழே கண்டுள்ள குறட்பாக்களும் இவ்வழிபாட்டின் பெருமையை நன்கு வலியுறுத்துகின்றன.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது —(திருக்குறள்)

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடு வாழ்வார் —(திருக்குறள்)

பிறவிப் பெருங்கடனீந்துவர் நீந்தா
ரிறைவனடி சேராதார் —(திருக்குறள்)

5. திருக்கோணமலை (Trincomalee)

திருக்கோணமலை என்பது பிறமொழியாளர்களால் சரியான முறையில் உச்சரிக்க முடியாத நிலையில் "திரின்கோமலி" என்று வழங்கப்படுகின்றது. இங்ஙனமுள்ள இடப்பெயர்கள் தன்னியல்பினின்றும் மருவி வழங்குதல் பல்வேறிடங்களில் காணப்படுகின்றன. இத்துறைமுகப் பட்டினம் இயற்கையாகவே அமைந்துள்ள பூம்புகாரைப் போன்றதாம். உலகப் பிரசித்தமான இக்கடற்றுறை பல நாடுகளுக்குச் செல்லுங் கலங்கள் வந்து தங்குமிடமாக அமைந்துள்ளது. இக்கடலோரங்களில் பாடும் மீன்கள் (Singing fishes) வாழ்ந்து வருவதாகவும் கூறுகின்றனர். இலங்கை அரசாங்கத்தார் கடற்படைக்குரிய தளவாடங்களை மிகுதியாக இங்கு அமைத்துள்ளனர். 12வது நூற்றாண்டில் பராக்கிரமபாகு என்ற பேரரசன் தனது தலைநகரமான பொலனருவாவை அரசியற் பணிகளுக்கு இருப்பிடமாகவும், திருக்கோணமலையை கப்பற்படை வீடாகவும் அமைத்திருந்தானென்பதும், பின்னர் அதுவே பர்மா தேசத்தைப் படையெடுத்துக் கைப்பற்றுவதற்கு அவனுக்கு அநுகூலமாக இருந்தது என்பதும் சரித்திரத்தினின்றும் அறியக் கிடக்கின்றது. இலங்கையிலுள்ள பல்வேறு துறைமுகங்களில், இத்துறைமுகத்தின் கடற்காட்சியே கண்ணைக் கவருகின்றது. குறிஞ்சியும், நெய்தலும் நெருங்கி உறவாடும் தோற்றப் பொலிவைப்பெற்றது. திருக்கோணமலையும் டச்சுக்காரர்களின் பழைய கோட்டை நகர்களில் ஒன்றாகும். ஆழ்ந்து அகன்ற மதிற் சுவர்களும், இடமகன்ற இடைகழிகளும், உயர்ந்து விளங்கும் மதிற் சிகரங்களும், இனிய காட்சியளிக்கின்றன. பிரயாணிகள் தங்குவதற்கென அமைந்துள்ள விடுதிகள் டச்சுக்காரர்கள் முன்னர் ஏற்படுத்தியதே. அந்

நகரத்தில் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதான ஓர் கதோலிக் கிருஸ்தவர் கோயிலும் உண்டு.

1676-ஆம் ஆண்டில் டச்சுக்காரர்களால் கட்டப்பட்ட கோட்டை ஒன்று (**Fort Frederic**) பிரடரிக் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. திருக்கோணமலைச் சரிவில் சுமார் 400 அடி உயரமுள்ள இக்கோட்டை, சரித்திரக்காரர்களால் வெகுவாகப் புகழ்ந்தெழுதப்பட்டுள்ளது என்னலாம்.

மலை உச்சியில் ஓர் கற்றூணில் எழுதப்பட்டுள்ள சிலா சாசனத்தால் சில குறிப்புக்கள் தெரிய வருகின்றன. டச்சுக்காரப் பிரான்சீனு வான் ரீடி என்ற நங்கை திருக்கோணமலையில் வசித்துவந்த படைவீரனொருவனுடன் காதல் கொண்டதாகவும், பலநாட் கழிந்தும் அவ்வீரன் அவள் வேண்டுகோட்கிணங்காது மறுத்து வந்தனனென்றும், பின்னர் அவன் ஓர் நாள் ஐரோப்பா செல்லும் கலத்தில் ஏறிச் சென்றதைக் கண்ணுற்ற பிரான்சீனு பிரிவாற்ருமையினுல் அவன் கலத்தைப் பார்த்தவண்ணமே மலைச் சிகரத்தினின்றும் கீழே விழுந்து உயிர் துறந்தாளென்றும் எழுதப்பட்டுள்ளது. உண்மைக் காதல் உடல், பொருள், ஆவி முதலிய எல்லாப் பொருள்களையும் தியாகம் செய்யும் என்ற உண்மை இம்மைக்கும் மறுமைக்கும் ஒப்பமுடிந்தது என்றமையான் இந்நங்கையின் காதலலைகளைக் கடலலைகளோடு காணுமாறு அத்தேயத்தினர் அவண் பொறித்துப் போந்தனர் போலும்!

குறிஞ்சித் திணையின் வளப்பத்தையும், மாவினங்களையும், பறவைக் கூட்டங்களையும், பன்முறைப் பார்த்துப் பார்த்துப் பயன் கொள்ளலாம். இம்மலையின் அற்புதக் காட்சிகளும், கடற்றுறை இன்பங்களும் கண்டுகளிக்கும் தரத்தனவே அன்றி எழுதிக்கூறும் இயல்புடைத்தன்று.

திருக்கோணமலை இம்மைப் பயனைத் தரத்தக்கக் கடல் வளனும் குறிஞ்சி வளனும் பெற்றிருப்பதோடு மறுமைப் பயனாகிய முத்தியின்பத்தையும் கொடுக்கக் கூடியதாக உள்ளது. சைவநெறியின் தத்துவத்தை உலகமக்கள் அறிந்துக் கரையேறும் வண்ணம் தேவாரத் திருமுறைகளைப் பாடியருளிய ஞானக் குழந்தையாகிய சம்பந்தப் பெருமான் இத்தலத்தைப்பற்றிப்பாடியருளிய பதிகம் ஒன்று உளது. அவர் தென்னாட்டிலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்த பின்னர் இராமேச்சுரம் சென்று பாடல்கள் பாடியருளியபின் இலங்கைத்தீவில் இன்புற்றமர்ந்த சிவபிரானின் திருக்கோயில்களாகிய திருக்கோணமலையையும், திருக்கேதீச்சரத்தையும், இருந்தபடி வணங்கிப் பாடியருளினர் என்பது. மறை ஞானசம்பந்தன் தன் தமிழ் ஞானப்பாடல்களில் இத்திருப்பதியைப் பற்றிக் கூறியுள்ள பகுதிகளைப் படிக்குங்கால், சென்று கண்டோரும் இங்ஙனம் பாடவல்லரோ! என்ற எண்ணம் எழுகின்றது.

திருக்கோண நாதரைப் புறநீர்மைப் பண்ணில் பாடியுள்ளார்கள். சம்பந்தன் பதிகம் 11 பாடல்கள் உடையன என்பது எல்லோருக்கும் தெரிந்தசெய்தொன்றும். தற்பொழுது அம்மலையின்மீது யாதொரு மூர்த்தியும் காணப்படாமைக்குக் காரணம், 17வது நூற்றாண்டில் டச்சுக்காரர்களால் ஏற்பட்ட செயலாற்று முறையேயாகும். உமைபாள்பங்கன் திருக்கோணமலையில் மிகப் பண்டைக்காலந் தொட்டு எழுந்தருளி இருந்தான் என்றும், தசக்கிரீவன் அம்மூர்த்தியைத் தரிசித்துவந்த பெருமையை அத்தலம் பெற்றுள்ளதென்றும் அங்குள்ளார் சில ஆதாரங்களை வைத்துக் கூறுகின்றனர். எது எத்தன்மைத்தாயினும் காழியர்கோன் காலத்திற்கு முன் அத்திருப்பதி சிறப்புற்று விளங்கியிருந்திருத்தல் கூடுமென்பதும் இலங்கைச் சைவர்கள் அப்பிரானை வழிபட்டு

ஆன்மபூதி பெற்றுய்ந்தனர் என்பதும் வெளிப்படை. இக் காலத்தும் பௌத்தர்கள் போதி மரத்தைத் தங்கள் புத்த தேவனுகக் கருதி வழிபடுதல் போன்று சைவச் செல்வர் களும் அத்திருக்கோணமலைக்கு ஆண்டுதோறும் ஒருமுறை சென்று "சுவாமிமலை" என்று அதனை அழைத்து வணங்கி வருகின்றனர். இம்மலை பல இடங்களில் ஒடுங்கியும், விரிந் தும், கடலுட் புகுந்தும், ஒரோ விடங்களில் உயர்ந்தும் நிமிர்ந்தும் விளங்கும் காரணமே கோணமலை என்ருயிற்றுப் போலும்!

"கரைகெழு சந்துங்காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்தியங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே" (சம்பந்தர் தேவாரம்)

குறிஞ்சியின் எழிலும் குரைகடல் எழிலும் சம்பந்தப் பெருமானுல் மிக அழகாகத் தீட்டப்பெற்றுள்ளதை ஈண்டு கண்டுள்ள அடிகள் நன்கு விளக்குவனவாம்.

"தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளம்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து,
கொழித்துவன் திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே" —(தேவாரம்)

"நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி நுழைதரு
நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே"

"விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை வேங்கைவின்
செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே" —(தேவாரம்)

கற்றுணர் கேள்விக் காழியர் கோனுகிய ஆளுடைய பிள்ளையார் கூறிப்போந்த அருட்பாக்கள் கோணமலையில்

வாழும் சைவ வேடனுக்கு உவகையளிப்பதோடு முத்தியின் பத்தையும் பயக்கின்றது. மணங்கமழ் மௌவல் பௌவத் தோடு கலந்து, மணம் வீசும் பைங்கானலில் பண்ணினேர் மொழியாளுடன் வீற்றிருக்கும் சிவபெருமான் தங்கிய திருக்கோணமலையின் மாதவத்தாலன்றோ இலங்கை எழி லுற்றது! நாடு நாடாயிற்று. தக்கோரால் புகழப்பெற்ற மூர்த்தி கீர்த்திபெற்று விளங்குமன்றோ! இயற்கை எழி லோடும் திரைச் செல்வங்களோடும், தேவார இன்பப் பெரு மிதத்தோடும் சுடர்விட்டு விளங்கும் திருக்கோணமலையே இலங்கை அரசியின் அழியாச் செல்வமென்க.

---

6. கண்டிமாநகர் (Kandy)

கண்டிமாநகர் கொழும்பிலிருந்து 72 மைல் தூரத்தி லுள்ளது. இந்நகரின் புராதன மேன்மையையும், செழிப்பை யும், வனப்பையும், எடுத்துக் கூறுவதன் முன்னர் அந்நகருக் குச் செல்லும் இருப்புப்பாதை, வண்டிப் பாதைகளில் காணப்படும் அரிய, இனிய காட்சிகளைச் சிறிது கூறிப்போ தல் ஏற்புடைத்தாம். இருப்புப்பாதையின் வழியாகச் செல் லுங்கால் இருமருங்குகளிற் காணப்படும் விசாலமான சம வெளிகளும், அடர்ந்து செழித்துள்ள காடுகளும், செடிகொடி களும், அழகிய நீர்விழ்ச்சிகளும், சேய்மையில் காணப்படும் வானோங்கி நிற்கும் சிகரங்களும் கண்களைக் கவருகின்றன. வண்டிப் பாதையின் வழியே செல்லுங்காலும் மனதிற்கினிய காட்சிகள் பல உள்ளன. நாட்டுப்புறத் தோற்றங்களும் மிக்க பசுமையாகக் காணப்படும் மருதப் பண்ணைகளும், தென்னைமரத் தோட்டங்களும் இருபுறமும் அமைந்துள் ளன. **கேகாலே** என்ற இடத்தைக் கடந்து செல்லுங்கால் மலை

யடர்ந்த காட்டின் வழியாகச் செல்ல நேரிடும். அங்குதான் முற்காலங்களில் **சார்டியல்** என்ற இலங்கை ராபின்ஹூட் இருந்து வந்ததாகத் தெரிகின்றது. ஆங்கில அரசியல் இலங்கையில் ஏற்பட்ட கால ஆரம்பத்தில் அப்பெரிய ஆறலை கள்வன் இருந்தனனெனச் சொல்கின்றனர். அவ்விடத்தைப் பற்றிய செய்திகளை இக்காலத்தார் சிறிது அச்சத்துடனேயே சொல்லுகின்றனர். அவ்விடத்திற்கு உதுவன் கண்டா **(Utuvan Kanda)** என்று பெயர்.

இங்ஙனம் கண் முன்னர்த் தோன்றும் இயற்கைக் காட்சிகள் மைலுக்கு மைல் அதிகரித்துக்கொண்டே வருகின்றன என்னலாம். பாதைகள் சிறிது வளைந்து செல்வதும், மலைமீது சிறிது ஏறிச் செல்வதும், பின்னர்ச் சிறிது தாழ்ந்து செல்வதும், மலைமீது செல்லச் செல்ல இனிய நற்காற்று வீசுதலுமாகிய அனுபவங்களைக் காணலாம். வருகின்ற வழியில் அழகிய பறவைக் கூட்டங்கள் அடுக்கடுக்காய்ப் பறந்து செல்வதும் களிறுகளும் பிடிகளும் தங்களது காதல் தோன்ற கழைகளின் தழைகளைப் பறித்துண்ணுதலும், மிருகங்களாகிய சிறுத்தை, முள்ளம் பன்றிகள் போன்றவை இடப் பக்கத்தினின்றும் வலப்பக்கத்தினின்றும் பரிந்து செல்லுதலும், மான், மரை, காட்டெருமை முதலானவைகள் யாதொரு பயமுமின்றிக் காட்டின் ஓரங்களில் களிப்புடன் விளையாடுதலுமாகிய இனிய காட்சிகள் இன்பக் காட்சிகளேயாம். இவைகளைக் கண்கொண்டு ஆனந்திக்கும் சமயத்திற்றான் குமரகுருபரர் தனது மதுரைக்கலம்பகத்திற் கூறிய குறிஞ்சி வருணனை நன்கு நினைவிற்கு எட்டுகிறது. குறத்தி கூறும் குறிஞ்சி நிலக்காட்சியையும், கண்டிமா நகருக்குச் செல்லும் சாலைக் கண் காட்சியையும் அறிஞர்கள் ஒப்பிட்டு நோக்கின் மட்டற்ற மனமகிழ்ச்சியைப் பெறுவர் என்பது திண்ணம்.

காட்சிகள் ஒருபுறமிருக்க இனி அம்மா நகரின் பெருமையைச் சிறிது அறிந்துகொள்வோம். சிங்களவரசர்களுக்குக் கடைசியாக ஏற்பட்டிருந்த தலைநகரம் அழகிய மலைமீதமர்ந்துள்ள இக் கண்டிமா நகரேயாம். "கண்டி" என்பது சிங்களவர் மொழியில் மலையைக் குறிக்கும் "கந்தா" (**kanda**) என்ற சொல்லின் பொருளே மலையாகும். 15-ஆம் நூற்றாண்டில் விக்கிரமபாகு என்பவரால் இந்நகரம் நிறுவப்பட்டது என்பர். சுமார் 2 லட்சம் ஜனத்தொகையைக் கொண்டுள்ள இந்நகரில் பலமதத்தினரும் வசித்து வருகின்றனர். பௌத்த மதத்தைத் தழுவியுள்ள சிங்களவர்கள் இங்கு அதிகமாக உள்



[Photo: M. D. Gunasena & Co., Ltd.

படம் 2. கண்டிமா நகரின் மணிவாவி

ளார்கள். தமிழ் மக்களும் அநேகமாக வசித்து வருகிறார்கள் என்னலாம். அழகாகக் கட்டப்பட்டுள்ள கலாசாலைகளும் கோயில்களும் இந்நகரத்திற்கு அதிக சிறப்பைக் கொடுக்கின்றன. சமூக வாழ்விலும், வாணிகத்துறையிலும் மக்கள் கலந்து உறவாடி வாழ்கின்ற ஒற்றுமையை இந்நகரில் நன்கு காணலாம். இந்நகரை அணிசெய்து நிற்பது ஓர் ஏரியாகும். நகரத்தின் மத்தியில் கிண்ணம் வைத்தாற்போன்று விளங்கும் இம்மணிவாவி நீலப்பட்டாடை விரித்தாற்போன்ற காட்சியை அளிக்கின்றது. இராக்காலங்களில் விண்ணொளி வான் மீன்கள் நீரிடையே ஒளிவிட்டு நிற்பதும், நிலாமண்டிலம் தனது குளிர்ந்த கதிர்களோடு இனிதுபெற விளங்குவதும், மின்சார விளக்குகள் தாங்கிய பற்பல அழகிய தூண்கள் தங்கள் எழிலை நீரிற்காட்டி அழகு செய்வதுமாகிய காட்சிகள் கண்டு இன்புறற்பாலன. கன்னியாகுமரியின் நீலத்திரைக்கடலில் காணும் காட்சி வேறு; கண்டிமாநகரின் கருநீர் வாவியின் காட்சிவேறு. இத்துணைச்சிறப்புவாய்ந்த ஏரியை உண்டு பண்ணியவர் திருவிக்கிரமராஜ சிங்கன் என்ற சிங்கள மன்னராவர். இவரே கண்டியில் கடைசியாக நீதி செலுத்திய வேந்தராவர். இவருக்குப்பின் ஆங்கிலேயரால் கண்டிமாநகர் கைப்பற்றப்பட்டது.

இயற்கையன்னை தன்னெழிலை நன்கு தெளிவித்துக் காட்டும் பல இடங்களில் கண்டிமாநகர் ஒன்று என்று தெரிந்தபின் அந்நகரத்தின் மற்றுமுள்ள சிறப்புக்களையும் ஆராய்வோம்.

பற்கோயில் : புத்தபகவானின் பல் ஒன்றை இக்கோயில் புத்தர்கள் பாதுகாத்து வருகின்றனர். அதன் பெருமையைக் காட்டக்கூடிய இடமே இப்பெரிய கோயிலாகும். மகமதியர்களுக்கு மெக்காபோன்றும், இந்துக்களுக்குக் காசிமாநகர்

போன்றும், உலகத்திலுள்ள பௌத்தர்களுக்கு இக்கோயில் உள்ளது. இக்கோயில் அஷ்டகோணத்தில் கட்டப்பட்டுள்ளது. வெள்ளியிலும், அரக்கிலும், மரத்திலும், பித்தளையிலும் தொழில் மேம்பாடுடைய கதவுகளும், தூண்களும் சுவர்

[*Photo : M. D. Gunasena & Co., Ltd.*

படம் 3. பற்கோயிலும் பரகேரா விழாவும்

களும் அமைந்துள்ளன. ஜுலை, ஆகஸ்டு மாதங்களில் **பரகேரா (Parahara)** என்று சொல்லப்படும் திருவிழாவைச் சிறப்பாகச் செய்கிறார்கள். அலங்கரிக்கப்பட்ட யானைகளும், இன்னிசைக்காரர்களும், நடனமாந்தர்களும் தங்கள் தலைவர்

களுடன் சிறந்த முறையில் அலங்கரித்துக்கொண்டு இவ் விழாவை நடத்துகின்றனர். கண்டி நடனம் என்பது உலகப் பிரசித்தமான செய்தியாகும். இலங்கையில் நடக்கும் முக்கிய மான விழாக்களில் கண்டி நடனத்தைக் காணலாம்.

பற்கோயிலை அங்குள்ளார் **பட்டிரிப்பூவா** என்று அழைக்கின்றனர். (Pattirippuva) கோயிலில் முதன் மையாகக் காணப்பெறுவது அழகிய சித்திரங்களாகும். புத்த தேவனின் திருவுருவம் பளிங்குக் கற்களாலும், விலை யுயர்ந்த உலோகங்களாலும், செதுக்கப்பட்டுள்ளது. மண மிக்க மலர்களால் சூழப்பெற்ற அப்புனிதக் கோயில் உள்ளே செல்லுகின்றவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டு கின்றது. மஞ்சளாடை அணிந்த குருமார்கள் பைய நடந்து செல்லுதலும், கோயில் மணிகள் அசைந்து இசைத் தலும், முரசங்கள் மாறி மாறி வீறுற்று எழுதலுமாகிய நிகழ்ச்சிகள் மனதை ஈர்த்துப் பக்திவலையில் படுத்துகின் றன. பற் கோயிலுக்காகச் செய்யப்படும் பல சடங்குகள் 4-வது நூற்றாண்டிலிருந்து ஏற்பட்டதென்றும், விக்கிரம ராஜ சிங்கன் காலத்தில் மிகச் சிறப்புடன் விளங்கியது என்றும் நாம் அறிகின்றோம்.

புத்த தேவனின் பல் வைக்கப்பட்டிருக்கும் இடம் கோயில் மணிபோன்ற கர்ப்பக்கிரகத்தில் உள்ள ஆறு கர்ப்பக்கிரகங்களின் மத்தியில் என்பதாம். எல்லாத் தினங் களிலும் அப் பல் வைத்திருக்கும் இடத்தைக் கண்டு தரிசிக்க இயலாது. ஆண்டில் சில தினங்களிற்றான் அப்பற் காட்சி காட்டப்படும் என்று கூறுகின்ற னர். பல் வைத்திருக்கும் உள்ளறையின் கதவுகள் வெள்ளி யாலும் பொன்னாலும் மணியாலும் இழைக்கப்பட்டவை. கதவுகளின் இரு மருங்கிலும் பெரிய யானைத் தந்தங்கள்

நிறுத்தப்பட்டுள்ளன. அறையினுள்ளே வேலைப்பாடமைந்த வெள்ளி மேஜை ஒன்று அமர்ந்துள்ளது. அறையின் மேல் மண்டபம் வெள்ளித் தகட்டால் வேயப்பட்டுள்ளது. விலை மதிக்கவொண்ணு கண் கவர் அணிகலன்களை ஏழு அடுக்குக ளோடு அமைந்த பெட்டியில் வைத்துப் பாதுகாத்து வரு கின்றனர். இக் கோயிலின் நித்திய நைமித்திக பூஜைகள், பௌத்த சன்னியாசிகளாலும் கோயிலுக்கெனத் தொண்டு செய்து வருபவர்களாலும் நடத்தப்பட்டு வருகின்றன.

வேறு கோயில்கள்:—1. மால்வட்டநாதர் கோயில் என்பது பழைய காலங்களில் பூங்காவனத்திலிருந்த பௌத்த சங்கமேயாகும். நகரின் நடு நாயகமாக விளங்கும் ஏரிக்கரையில் உள்ளது. இக்கோயில் பௌத்த சமயத்திற்குத் தொண்டியற்றும் அடியார்களுக்குத் தீக்ஷை செய்யும் இடமாம் என்க. அழகிய கற்றூண்களால் அமைந்துள்ள இம்மண்டபம் சுமார் 25 அடி உயரம் இருக்கின்றது.

2. கங்காராமர் கோயில்:—இக் கோயில் மலபார் வீதியினின்றும் இரண்டு மைல் தூரத்திலுள்ளது. ஓர் மலையின் மீது கட்டப்பெற்றுள்ள இக் கற்றளி நீண்ட சதுர வடிவத்தில் அமைந்துள்ளது. இதன் பின்புறத்தில் 27 அடி உயரத்தில் இருக்கும் புத்த தேவனின் நின்ற கோலத்தைக் காணலாம்.

3. இலங்கா திலகர் கோயில்:—இக் கோயில் 14-வது நூற்றூண்டில் கட்டப்பட்டதாம். கண்டிமா நகரத்தில் ஏற் பட்டுள்ள கோயில்களில் இதுவே மிக்க அழகு வாய்ந்தது. கர்ப்பக்கிரகத்திற்கு வாயிலாக அமைந்துள்ள கதவுகள் மிகவும் பெரியவை. உள்ளே வீற்றிருக்கும் புத்த தேவன் விக்கிரகம் அதிக வனப்பு வாய்ந்தது. குன்றின் மீதுள்ள இக் கோயிலைக் கட்டுவதற்கென உபயோகித்த கற்களின்

பருமனைக் காணுங்கால் மனதிற்கு வியப்பைத் தருகின்றது. கோயிலின் பக்கச் சுவரில் ஓர் பெரிய சாசனம் வரையப் பட்டுள்ளது.

கட்டராமா கோயில்:—இக் கோயில் கங்கா திலகர் கோயிலுக்குச் சிறிது சேண்மையிலுள்ளது என்னலாம். இக்கோயிலை சிங்களவர் **எம்பகிதேவுளா** என்கின்றனர். முல்லை நிலக் கடவுளான கட்டராசமா என்ற தேவனுக்கு ஏற்படுத்திய கோயில் என்பர். இக் கோயிலில் கண்டி நக ரத்தினரின் மரச்சிற்ப மேம்பாட்டை நன்கு காணலாம். இக் கோயிலின் மரச் சிற்பமே கண்டி அரசர்களின் நாளோலக்க மண்டபத்தின் அழகுக்கு அடிப்படை என்பர்.

புத்தகசாலையும் பொருட் காட்சிச்சாலையும்:—கண்டி நகரத்தில் அமைந்துள்ள புத்தகசாலை மிகவும் புராதன மானது. பனையோலையால் எழுதப்பெற்ற அநேக கிரந்தங் கள் நன்கு பாதுகாக்கப்பட்டுள்ளன. இவ்வோலைப் புத்தகங் களைப் பொன், வெள்ளி, நவமணிக் கற்கள் அழுத்தப்பெற்ற சந்தனக்கட்டை மூடிகளாலும் யானைத் தந்தத்தின் மூடிக ளாலும், அழகுபெறக் கட்டிவைத்துள்ளனர். இதுவன்றோ வாணியின் காதலை வளர்க்கும் முறையாகும்!

கண்டி அரசர்களின் நாளோலக்க மண்டபம் என்பது (Audience Hall) சரித்திர மேன்மையுடையது. 1784-ஆம் ஆண்டில் ராஜாதிராஜ சிங்கன் என்பவரால் இம் மணி மண்டபம் கட்ட ஆரம்பிக்கப்பட்டதென்றும் அவனுக்குப் பின் வந்த விக்கிரமராஜ சிங்கனால் முடிவடையப்பெற்ற தென்றும் கூறுகின்றனர். தூண்களின் மீதுள்ள மரச் சிற்ப வேலைத் திறம் போற்றற்குரியது. இம் மண்டபத்தில்தான் கண்டி அரசர்கள் நீதி செலுத்தி வந்தனராம். இங்குதான் 1948-ல் இலங்கைத் தீவின் சுதந்திரம் பிரகடனம் செய்யப்

பட்டது. இதன் அருகாமையில் உள்ள பழைய அரச மாளிகையின் சுவர்களில் பெண்கள் விசிறியேந்தி நிற்கின்ற தோற்றம் காணப்படுகின்றது. இம் மாளிகையின் மேல் விதானத்திலுள்ள ஓடுகள் அன்னப் பறவை வடிவுள்ளன வாகவும், அரி வடிவுள்ளனவாகவும் அமைக்கப்பெற்றுள்ளன. இப் பெரிய மாளிகையின் ஒரு பகுதியிலேயே கண்டிப் பொருட் காட்சிச் சாலை காணப்படுகின்றது.

வெள்ளிக்கிழமை நீங்கலான வார நாட்களில் இப் பொருட்காட்சிச் சாலைக்குப் பல தேயத்தினரும் வருகின்றனர். 17-ஆம் நூற்றுண்டில் கண்டியரசராகவிருந்த இரண்டாம் ராஜ சிங்கனின் (Raja Simha II) பொன் முடியொன்று ஓர் தனியறையில் காட்சியளிக்கின்றது. பண்டைய அரசர்களின் முடிகலன்கள் எத்துணைச் சிறப்புடையதாக இருந்திருக்கலாம் என்பதை நன்கு உணர்த்தற்கு இக் கலனே சான்றும். கதிர் வீசும் ஒளி மணிகளை இடந் தெரிந்து இழைத்துள்ள தொழிற்றிறம் மிகவும் பாராட்டற்குரியது என்னலாம். இத்துடன் பொற் சிங்காதனமும், பொன் வாளும் பொலிவுற்று விளங்குகின்றன.

இலங்கையில் காணப்பெற்ற பழைய பொருள்களும் புதிய பொருள்களும், அங்கு இடம் பெற்றுள்ளன. கைத் தொழில் மேம்பாடுற்ற கலன்களும், ஆயுதங்களும், எண்ணிக்கையின்றிக் காணப்படுகின்றன. பொன், வெள்ளி, தந்தம், மரம் முதலானவைகளில் செய்யப்பட்டுள்ள பொருள்களில் கண்டியாரின் கைத்திறனை நன்கு காணலாம்.

மண்டபங்களும், மாளிகைகளும், மன்னர் இல்லங்களும், மணிக் கோயில்களும் அளிக்கும் காட்சியின் மத்தியில் ஓர் விஷ்ணு ஆலயமும் காணப்படுகின்றது. இக்

கோயிலைப் பௌத்தர்கள் **மகாதேவலி** (Maha Davale) என்று கூறுகின்றனர். கண்டியிலுள்ள இப் பரந்தாமன் கோயில் அங்குள்ள பௌத்தர்களால் போற்றப்பட்டும் வணங்கப்பட்டும் வருகின்றது. அம்மூர்த்தியை இலங்கைப் பாதுகாவலன் என்றும் அவர்கள் அழைக்கின்றனர். யானை மீது அமர்ந்துள்ள விஷ்ணுவை வந்து வணங்கிய பின்னரே பௌத்தர்கள் தங்கள் வழக்குகளைத் தீர்த்துக்கொள்ளுகின்றனர். இம் முறையாலேதான் பரகேரா (Parahera) என்ற பற்கோயில் விழாவிற்குச் செல்லும் யானைகள் முதன் முதலாக இவ் விஷ்ணு கோயிலின் முன் சென்று தாழ்ந்து வணங்கியபின் விழாவிற்குச் செல்லுகின்றனவாம். விழா முடிந்த பின்னரும் அந்த யானைகள் யானை மீதமர்ந்த விஷ்ணுவை வழிபட்டுச் செல்கின்றனவாம். எனவே, இக் கண்டிமா நகரின் சமய வாழ்வுகள் வேறுபட்டுத் தோன்றிய போதினும் மெய்ம்மையில் மாறுபட்டுக் காணுமாறில்லை என்பது தெள்ளிதிற் புலனும்.

---

7. பரதேனியாவும் சர்வகலாசாலையும் (Peradeniya)

பரதேனியா கண்டி நகரத்திற்கு 5 மைல் தூரத்திலும் கொழும்பு நகரத்திற்கு 68 மைல் தூரத்திலும் உள்ளது. ஒரு காலத்தில் இவ்வூர் இராஜ நகரமாக விளங்கியதுண்டு. இங்குதான் அரசாங்கத்தாரின் தாவரத் தோட்டம் அழகுற அமைந்துள்ளது. ஏறக்குறைய 150 ஏக்கரா நிலப்பரப்புக் கொண்டதும், உஷ்ணப் பிரதேசங்களில் காணப்படும் பல விதத் தாவரப் பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ளதும், இலங்கைத் தீவின் எழில்மிகு மலர்களையும் செடிகளையும், ஓரிடத்திற் சேமிக்கப் பெற்றுள்ளதுமாகிய இப்பூம்

பொழில் சிறந்து விளங்குகின்றது. சுமார் 1600 அடி உயரமுள்ள நிலவரையில் சம சீதோஷ்ண நிலையுடன் அமர்ந்திருக்கும் பரதேனியாவைக் கண்டு களிக்காதார்



[Photo : M. D. Gunasena & Co., Ltd.

படம் 4. பரதேனியா பூம்பொழிலின் கோடை விடுதி

கண்கள் கண்களாகா! இச்சோலையினுள் 5 மைல் தூரம் நடமாடுவதற்குப் போதிய வழிகளும் பாதைகளும், இரு மருங்கிலும் அமர்ந்துள்ள இள மரக்காக்களும், மலர் செறிந்து விளங்கும் மரஞ் செடிகொடிகளும், மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றன. உலாவி வருவதற்குச் செல்லும் ஒருவன் மாவலிகங்கை ஆற்றின் ஓரங்களிற் காணப்படும் மூங்கில் மரங்களின் ஒழுங்கான முறை அமைப்பை முதன் முதலில் காண நேரிடும். இலங்கையிற் செல்லும் பல ஆறுகளில் இம்மாவலி கங்கையே பெரியாறுகும். இப்பூம் பொழிலில் பழுத்துத் தூங்கும் பழத் தோட்டத்தைப் பார்க்கலாம் ஓர்பால்; மற்றோர்பால் நெருங்கிப் பூத்து

விளங்கும் இளமரக்காவின் பலவித நீலப்பூச் செடிகளையும் காணலாம். இன்னும் சிறிது செல்வோமாயின் கிழங்கு வகைகளும் காய்கறி வகைகளும் உற்பத்தி செய்யப்படும் பண்ணைகளைக் கண்டு களிக்கலாம். வேறோர் பக்கம் சென்று பார்ப்போமாயின் மருத்துச் செடிகள் நன்கு பயிரிடப் படுகின்ற காட்சி, மக்கள் வாழ்விற்கு இடையூறு விளைக்கும் நோய்களைக் கொன்று ஒழிப்பேன், என்று பறை சாற்றுவது போல் தோன்றும். சிற்சில இடங்களில் காதலர்கள் களித்து விளையாடுவதற்கான கானற் சோலைகளைக் கண்ணுறலாம். வண்ணக் கிண்ணங்களைப் பதித்து வைத்தாற் போன்ற அழகிய மலர்கள் வீறுற்று நிற்கும் நற்காட்சியை அங்குள்ள மணிவாவிகளில் பார்த்து இன்புறலாம். இடையிடையே மெல்லிய புல்லடர்ந்த சமவெளி மேடைகளைக் கண்டு இனிதிருந்துச் சற்று இளைப்பாறலாம். பல் வகையினும் மேம்பட்டு விளங்கும் இத்தாவரப் பொழிலை எழுதிக் காண்பித்தல் இயலாது தொன்றும். மைசூர் சமஸ்தானத்தி லுள்ள லால் பார்க்கைப் பார்த்த கண்களும், ஜெயப்பூர் சமஸ்தானத்திலுள்ள அரசாங்கத் தோட்டத்தைப் பார்த்த கண்களும் பரதேனியாத் தாவரத் தோட்டத்தைப் பார்த்த பின்னர்தான் இலங்கை எழிலின் தன்மையை நன்கு அறிதல் கூடும்.

ஆற்றங்கரைமீது அமர்ந்துள்ள பரதேனியாவின் காட்சி இன்பம் சிந்தித்து இன்புறற் பாலதெனின், அது மிகையாகாது. அரசாங்க விவசாயப் பண்ணை ஆற்றின் மறுகரையில் அமர்ந்துள்ளது. அதைக் கடந்து செல்வதற்கான தொங்கு பாலம் ஒன்றை (Suspension bridge) அரசாங்கத்தார் ஏற்படுத்தியுள்ளார்கள். தொங்கு பாலத்தில் மனிதர்கள் செல்லலாமேயன்றி வண்டிகள் செல்லுதற்கு இயலா. பாலம் அமைந்திருக்கும் ஒழுங்கும் அழகும் ஆர்வம் விளை

விப்பனவாம். சமீபத்தில் நடந்த இரண்டாம் யுத்தத்தில் இப் பரதேனியாவே மௌண்ட்பாட்டன் துரைமகனுருக்குத் தங்கும் தலைநகரமாக இருந்தது.

சர்வகலாசாலை :—பரதேனியாவின் இயற்கை வனப்பைக் கூறியபின் அதனின் செயற்கை வனப்பையும் கூறுதலை முறையுடைத்தாம். இலங்கைச் சர்வகலாசாலை நீண்ட காலமாகக் கொழும்பு தலைநகரில் இருந்து வந்தது. கல்வி வளர்ச்சிக்கும் கல்வி மேம்பாட்டிற்கும் போதிய இடவசதியும் சூழ்நிலையும் வேண்டிய அளவில் அமைந்திராவிடின் மக்கள் பண்பாட்டின் நிலையில் சிறிது தளர்ச்சி ஏற்படுமாகையால் இலங்கை அரசாங்கத்தார் நன்கு இதனை எண்ணிப் பார்த்து இப்பரதேனியாவே சர்வகலாசாலைக்கு ஏற்ற இடமாகும் என்று தீர்மானித்தனர் போலும்! இலங்கைத் தீவிற்கு மத்திய இடம் கண்டிமாநகரே. திருமாலின் அகலத்தில் விளங்கும் கௌஸ்துப மணியைப்போன்று விளங்கும் கண்டிமா நகருக்கு அணித்தான பரதேனியா சர்வகலாசாலை ஓங்கி வளர்ச்சியுறுவதற்குப் பொருத்தமான இடமன்றோ!

காசி சர்வகலாசாலை கங்கைக் கரையில் அமைக்கப்பட்டுள்ள இனிமையை அறிந்தோர்கள் மாவலி கங்கைக்கரையில் அமைந்து வரும் இலங்கைச் சர்வ கலாசாலையைப் போற்றிப் புகழாது இரார். இலட்சக்கணக்கானப் பொருட் செல்வத்தைக் கலைச் செல்வத்தின் வளர்ச்சிக்காக அரசாங்கத்தார் செலவழித்து வருகின்றனர். கட்டிட அமைப்புக்கள் புதிய முறையிலும், இலங்கைத் தேசியத் தொழில் முறையிலும், நாகரிக முறையிலும் நிறுவப்பட்டு வருகின்றன. எழிலரசியான பார்வதி இனிது விளங்கும் இன்ப மாளிகையான பரதேனியாவில் கலையரசியான வெண்டாமரை மகள் கலந்து வாழ்வது இன்பத்தினும் இன்பமன்றோ! இச்சர்வகலா

சாலைக் கட்டிட அமைப்பானது லண்டன்மா நகரைத்திட்டஞ் செய்து கட்டிய சர் பாட்ரிக் அபர்கிராம்பி (Sir Patrick Abercrombie) என்ற மயனால் திட்டஞ் செய்யப்பட்டுள்ளது.

கதிர்காமக் காட்சி :—

கதிர்காமக் காட்சியினைக் கண்டுகளிக்கு முன்னர் அத்திருப்பதியின் பெருமையினைச் சிறிது சரித்திரவாயிலாகவும், சமயவாயிலாகவும் தெரிந்து கொள்வது ஏற்புடைத்தாம். தேவாரப்பாடல்கள் பெற்ற ஈழநாட்டுத் திருப்பதிகளாகிய திருக்கோணமலையும், திருக்கேதீச்சரமும் சைவ மக்களுக்குக் காணிபாட்சியாக இருப்பதுடன், கதிர்காமம் என்ற புனிதமாநகரும், முருகதாசர்களாகிய சிவனடியார்களுக்குப் பெரும் புண்ணியத்தலமாகத் திகழ்கின்றது. சிவஸ்தலங்களையே பாடிப்போந்த சைவசமய குரவர்கள் குமரன் திருப்பதிகளைப் பாடிப்போதல் மரபின்மையான் அக்காலத்தி லெழுந்த தேவாரப் பகுதிகளில் கதிர்காமத்தைப்பற்றிய செய்திகள் புலப்படுமாறில்லை. நமக்கு, மிக்க ஆதாரமாகக் கிடைக்கக்கூடிய பாடல்கள் 'வாக்கிற் கருணகிரி' என்ற கந்தரனுபூதிமானின் திருப்புகழ்ப் பாடல்களேயாம். திருவருணையிற் பிறந்து இல்லற வாழ்க்கையிலீடுபட்டு மனைவி மக்கட் செல்வத்தோடு விளங்கிய அருணகிரியார் தனக்கு இடையிடையே ஏற்பட்ட சிந்தாகுலத்தாலும் ஆற்றொணா நோயாலும் இவ்வுலக வாழ்வைப் பொருட்படுத்தாது பரவாழ்க்கையையே நாடி நின்றனர். அங்ஙனமே பரமன் திருமகனான முருகப் பெருமானிடம் மிக்க அன்பு கொண்டவராகி, 36000 பாடல்கள் பாடினரென்பதும் அன்னார் பாடிய பாடல்கள் எல்லாம் திருச்செந்தூர்ப் பெருமானால் கேட்டு ஆனந்திக்கப்பட்டதென்றும், பின்னர் 1400 அளவாகிய சில பாடல்களே உலக மக்கள் உய்யும் பொருட்

டுக் கொடுக்கப்பட்டன வென்றும் அருணகிரி புராணம் கூறு கின்றது. பல படியாக முருகனைப் புகழ்ந்துபாடிய அருண கிரியார் பாடல்களில் செவ்வேளின் ஆறுபடை வீடுகளும், மற்றுமுள்ள திருப்பதிகளும் எடுத்தாளப்பட்டுள்ளன. அங்ஙனம் பெரிதும் புகழ்ந்துபாடப்பட்ட திருப்பதிகளில் கதிர்காமம் ஒன்று என்பதாம்.

அருணகிரியார் தனது திருவகுப்பில் 4வது பாடலில் கதிர்காமத்தைச் சுட்டியுள்ளார்கள். அவ்வடிகள் வருமாறு:-

"மாடமதில் சுற்றியத்ரி கூடகிரியிற் கதிர் செய்
மாநகரியிற்கடவு......ளாயக் காரனும்"

முருகப்பெருமானுக்கென்று பாடிய திருவகுப்பில் கதிர்காமமும் இடம் பெற்றுள்ளதை நோக்குங்கால் அத் திருப்பதியின் பெருமையை நன்கு அறிந்தே அருணகிரியார் ஓதியுள்ளார் என்பது வெளிப்படை. இதுவுமன்றியில் திருப்புகழ்ப் பாடல்களில் கதிர்காமத்தைப்பற்றிய குறிப்புகள் 25 பாடல்களில் காணப்பெறுகின்றன. சில பாடல்களில் கதிர்காமம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மற்றும் சில பாடல்கள் தனித் தன்மையில் கதிர்காமத்தைப் பற்றியே பாடப்பெற்றுள்ளன. சில தனிப்பாடல்களில் அந்நகரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள அருணகிரியார் மணிவாக்குகளையே ஈண்டு குறிப்பிடுதல் சாலும் என்று தோற்றுகிறது.

எதிரிலாத பத்தி தனை மேவி
இனிய தாணினைப்பை....இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி
எனது ளேசி றக்க....அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே
கனக மேரு ஒத்த....புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே
வழுதி கூனி மிர்த்த....பெருமாளே

(திருப்புகழ் பாடல்–276)

எழுமலைகள் அடர்ந்துள்ள காட்டில் இம்மாநகர் அமர்ந் திருப்பதென்பது உண்மையாதலால் "கதிர்காம வெற்பி லுறைவோனே" என்றார் ஆசிரியர். மற்றோர் இடத்தில் தமிழ்த் தெய்வமாகிய முருகக் கடவுளை அன்னார் நன்கு வாழ்த்தி வணங்குந்திறன் மனதிற்கு மிக்க உவகையைச் செய்கின்றது. அது வருமாறு:—

கடலிடை சூரப் படை பொடியாகக்
கருதல ரோடப்....பொரும் வேலா
கதிர் வேலைக் கதிரினில் மேவிக்
கலைபல தேர்முத்....தமிழ் நாடா.

(திருப்புகழ் பாடல்—521)

திருவேரகம் தென்பழனி முதலான படை வீடுகளுக்கு நிகரான தெய்வப்பதி கதிர்காமம் என்ற கருத்துத் தோற் றும்வண்ணம் கீழே கண்டுள்ள பாடலடிகள் காட்டுகின்றன.

திருமருவு புயனயனு டையிரா வதக்குரிசில்
அடிபரவு பழநிமலை கதிர்காம முற்றுவளர்
சிவசமய அறுமுகவ திருவேர கத்திலுறை பெருமாளே

(திருப்புகழ்—529)

பெரியோர்களுக்கு இடபேதம் காலபேதம் இல்லா திருப்பது உண்மையேயாயினும், ஓர் பகுதியைக் கூறவேண் டிய காலத்து அதனுடன் தோன்றி விளங்கும் சிறப்பியல்பு களைக் கூறுதுபோதல் இழுக்குடைத்தாதலால் கதிர்காமத் தின் பெருஞ்சிறப்பை நன்கு உணர்ந்திருந்த அருணகிரி வள்ளல் தென்பழனிக்கும் திருவேகரத்திற்கும் அதனை ஒப்பிட்டுக் காட்டினர்போலும். ஈழச் சைவர்களுக்குக் கதிர்காமம் நன்கு தெரிந்ததொன்றும். தென்னாட்டுத் தமிழ்ச் சைவர்களுக்கு பழனியம்பதி நன்கு தெரிந்த தொன்றும். ஈழச்சைவரும் தென்னாட்டுச் சைவரும், கதிர் காமத்தையும் தென்பழநியையும் (பொதினி என்பது

பழநியின் பெயர்) ஒருங்கேவைத்து வணங்குதல் வேண்டு மென்ற ஓர் குறிப்பை இவ்வடிகள் உணர்த்துவதுபோல் உள்ளன.

சைவந்தழைக்கவந்த ஞானசம்பந்தப் பெருமானை ஆறுமுகப் பெருமானின் அவதாரம் என்று தனது பாடல்களில் குறிப்பிடுதல் அருணகிரியாரின் அருஞ்செயலாகப் பலவிடங்களிலும் காணப்படுகின்றது. அக்கருத்தைக் கதிர்காமப் பாடலிலும் கண்டுகொள்ளும்படிக் காட்சியளித்துள்ளார்கள். அவ்வடிகள் வருமாறு :—

" அமரர்சிறை மீள்விக்க அமர்செய்துப்ர தாபிக்கு
மதிக வித சாமர்த்ய . . . . கவிராஜராஜனே.
அழுதுலகை வாழ்வித்த கவுணிய குலாதித்த
அரிய கதிர் காமத்தில் உரியாபிராமனே

(திருப்புகழ்—641)

அடுத்தபடியாக, கதிர்காமக் காட்சி யின்பத்தை அருணகிரிவள்ளல் கூறிப்போந்த முறையில் சிறிது அறிந்துகொள்வோம். இயற்கையன்னையின் எழில்தவழ் காட்சிகள் சில ஈண்டு கொடுக்கப்பட்டுள்ளன.

" புரளவேல் தொட்டகைக் குமரமேன்மைத்திருப்
புகழையோ தற்கெனக்..கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக்
கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூழ் தெற்றிசைப் பயிலுமீழத்தினிற்
கதிரகா மக்கிரிப் பெருமாளே

(திருப்புகழ்—650)

மணிதரளம் வீசி அணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள்காண்

(திருப்புகழ்—803)

"சோதி சிவ ஞானக் குமரேசா
தோமில் கதிர் காமப் பெருமாளே"

(திருப்புகழ்—1138)

கதிர்காம மாநகர்க்கு ளெதிரிலாத வேல்தரித்த
கடவுளேக லாபசித்ர......மயில் வீரா

(திருப்புகழ்—1178)

கதிர்காமக் காட்சியின்பத்தையும் கதிர்வேலின் பெருமையையும் அருணகிரியார் பாடிப் போந்த முறை மனதை உருக்குகின்றதென்னலாம்.

கதிர்காமத்தின் சரித்திர வரலாற்றை நன்குணர்தற்கு வேண்டிய சான்றுகள் கிடைக்காது போயினும், அத் திருப்பதி அன்பு கனிந்த வேடன் ஒருவனால் வணங்கி வழிப்பட்டதென்றும், வழிபாட்டினால் முத்தியின்பம் கிடைத்ததென்றும் ஒருவாறு தெரிகின்றது. அருணகிரியார் வாழ்ந்த காலமாகிய பிரபுட தேவராசன் காலம் 15-வது நூற்றாண்டாகையால், கதிர்காமம் என்ற முருகப்பதி அருணகிரியார் காலத்துக்கு முற்பட்டதாகும் என்பது வெள்ளிடைமலே. இலங்கையிலுள்ள சைவ மக்கள் கதிர் காமஞ் செல்ல இயலாதபோது சின்ன கதிர்காமம் என் றழைக்கப்படும் ஒரு சிற்றூர் கோயிலுக்குச் சென்று வருவதும் ஈண்டு அறியக் கிடக்கின்றது. ஆகவே கதிர்காமக் கோயில் ஏறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும் என்று கூறுதல் இழுக்குடைத்தன்றும்.

இங்ஙனம், பழைமையும் சிறப்பும் பல்கி விளங்கும் கதிர் காமத்தைப்பற்றிச்சிறிது மேலும் கூறுவாம். கண்ணுழையாக் காடுகளும், ஏழு மலைகளும் கலந்துவிளங்கும் ஓர் சிற்றூர் நாப்பண் கதிர்காமக் கோயில் அமர்ந்துள்ளது. திசைமாரா என்ற நகரத்திலிருந்து சுமார் 15 மைல் தூரத்திலுள்ளது.

கொழும்பு தலைநகரிலிருந்து 175 மைல் தூரத்திலுள்ளது. பண்டைக் காலங்களில் கதிர்காமத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் தனியாக ஏகமாட்டார்கள். பெருங் குழுவினராகத் தான் திசைமாரா என்ற ஊரிலிருந்து நடந்து செல்ல வேண்டியதிருந்தது. தற்பொழுது அரசாங்கத்தாரின் பேருதவியால் புதிய சாலை ஒன்று நன்கு அமைக்கப்பட்டுள்ளது. அதன் வழியாகக் கால் நடை வண்டிகளும் மோட்டார் வண்டிகளும், கதிர்காமத்தின் அருகே உள்ள மாணிக்க கங்கை என்ற சிற்றாறு வரையிலும் செல்லுகின்றன. பிரயாணிகளுக்கு அதிகக் கஷ்டமில்லாதபடி வாடகை மோட்டார் வண்டிகளும் தினந்தோறும் ஒருமுறை சென்று வருகின்றன. இக்காலங்களிலும் பகற் காலத்தில் வண்டிகளில் ஏறிச் செல்லும் வசதியைக் கொண்டுள்ள பிரயாணிகள் இப்பதினைந்து மைல்கள் செல்வதற்குள் பல கரிமாக்களையும், மரைமாக்களையும் இரு மருங்கிலும் எளிதாகக் காணலாம். அங்குள்ள வண்டிக்காரர்கள் யானைகளுக்குத் தான் அதிகமாக அஞ்சுகின்றனர். காரணம், காட்டானைகளின் மதச் செருக்கேயாம். மாணிக்க கங்கை என்பது ஓர் அழகிய நீராருச் சிற்றாறு எனக் கொள்க. அந்நதியில் விளையாடும் மீன்கள் மிக்க எளிய அன்புடையன. மக்கள் யாவரும் தங்களைத் துன்புறுத்தாரென்பது உறுதியாதலின் மிக்க நட்போடு நீராடுபவர்களைக் காதலிக்கின்றன. கோயிற் சுனைகளிற் பிறக்கும் மீன்கள் பிறப்பால் இழிந்ததாயினும் தலத்தால் உயர்ந்தன என்ப! இதைக் கருதியே தான் "திருவேங்கட மலைமேல் மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே" என்று ஆழ்வாரும் கூறிப் போந்தார் போலும்!

இவ்வரிய நதியைக் கடப்பதற்கு ஒரு தொங்கு பாலம் அமைத்துள்ளார்கள். நதிக்கரையின் மீதுதான் உள்ளது கதிர்காமம் என்ற சிற்றூர். ஏறக்குறைய 100 இல்லங்கள்

இருக்கலாம். வீதிகள் ஒழுங்கான முறையில் அமைந் தில்லை. அரசாங்க அஞ்சல் அலுவலகம் அங்கு ஒன்று உளது. பக்தர்கள் பூசைக்கென வேண்டற்பாலனவாகிய தேங்காய், பழம், கருப்பூரம், ஊதுபத்தி, திருநீறு முதலான பொருள்கள் சில கடைகளில் விற்கப்படுகின்றன. தூய நீராடியபின் பெருமானைத் தொழுது செல்லும் அடியார்கள் சிறிது தூரம் சென்றபின் காண்பது ஓடுகள் வேய்ந்த ஓர் மண்டபமாகும். அதுதான் சிவபெருமான் திருமகனார் வீற்றிருக்கும் புனித இடம். இச்சிறு மண்டபத்தின் முப்புறங்களும் கற்சுவரால் கட்டப்பெற்றுள்ளன. மண்டபத் தின் முன்புறத்தில் வழிபாடியற்றும் அன்பர்கள் தங்க வேண்டும். திருக்கோயிலின் பின்னிடம் ஆறுமுகப் பெருமான் திருவுருவம் எழுதப்பெற்றுள்ள ஓர் பெரிய அழகிய திரையால் மூடப்பட்டுள்ளது. முருகப் பெருமான் தனது ஆறுமுகங்களும் பொலிந்து தோன்ற இச்சா சக்தி, கிரியா சக்திகளாகிய வள்ளி, தெய்வயானையர் இரு புறமும் அமர்ந்திருக்க மயில்மீது வீற்றிருக்கும் காட்சி மனதைக் கொள்ளை கொள்கின்றது. புலமை மிக்குடையான் ஒருவனே அவ்வுயிர் ஓவியத்தை வரைந்திருத்தல் கூடும். இச்சித்திரத்தைக் கண்டு வாழ்த்தி வணங்குவதே கதிர் காமக் காட்சியின் முதற்கூறு என்று உணர்க. இத்திரைக் குப்பின் ஓர் அழகிய பெட்டியில் கதிர்வேல் அமர்ந்துள்ளது. ஆண்டுதோறும் நடைபெறும் விழாக்காலத்திற்றான் யானை மீது அணிவித்து உலாவி வரும் அக்கதிர்வேல் பெட்டியை அன்பர்கள் கண்டு வணங்கலாமேயன்றி மற்றை நாட்களில் காண்பதரிது. இப் பெட்டியே அத்திரைக்குப்பின் பூசை யில் வைக்கப்பட்டுள்ளது. அப்பெட்டியின் பின்னர் உள்ள ஓர் அறையானது பூட்டப்பட்டுள்ளது. எக்காரணத்தால் அவ்வறை பூட்டப்பட்டதென்று எழக்கூடிய வினா

விற்குத் தகுந்த விடை கொடுப்பார் யாரும் அவண் இல்லை. தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வருமிடமாகிய அவ்வூரில் வயது முதிர்ந்த பெரியோர்களாகிய உண்மையன்பர்களும் தங்கள் அறியாமையைப் பணிவுடன் தெரிவிக்கின்றனரேயன்றி வேறொன்றில்லை. ஒரு சிலர், அங்குப் பூட்டப்பட்டுள்ள அறையில் ஆறுமுகப் பெருமான் தனது தேவிமார்களுடன் விளங்கும் திருவுருவக் காட்சியின்பம் இருப்பதாகக் கூறுகின்றனர். உள்ளே அமர்ந்துள்ள மூர்த்தியின் எழிலுருவமே திரை உருவத்தில் பொறிக்கப்பட்டுள்ளதென்றும் இயம்புகின்றனர். இங்ஙனம் அமைந்துள்ள கதிர்காமக் கடவுளின் பூசைக்குரிய அருச்சகர் ஓர் சிங்களவராவர். பரம்பரையாகச் சிங்களவர்களே இக்கோயிலில் பூசை செய்து வருகின்றனராம். அப்பூசாரியும் சட்டை, தலைப்பாகை அணிந்தவண்ணமாகத்தான் பூசை செய்து வருகின்றார். அவருக்குத் தமிழ் நன்கு தெரியாது. சிங்கள மொழிதான் பேசுவார். செல்லுகின்ற அடியார்கள் சிங்கள மொழியைத் தெரிந்திருப்பின் சற்று உரையாடலாம்; இல்லையேல் அவர் அளிக்கும் கருப்பூரப் புகையையும், திருநீற்றையும் நன்கொடையாகப் பெற்று அமரலாம்.

பூசை முறை:—பக்தர்கள் கொண்டுசெல்லும் வாசனைப் பத்திகளை மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள தூண்களில் எரியவிடலாம். நெய் முதலான எண்ணெய் வகைகளைத் தீபங்கள் ஏற்றி ஒளிபெருக்கலாம். கையுறையாகக் கொண்டு சென்ற பழம், தேங்காய், கருப்பூரம் முதலானவைகளை அப் பூசாரியார் தட்டிலிட்டுத் தட்சணையையும் சேர்ப்பித்த பின்னர், அப்பெருமகனார் திரைக்குப் பின் சென்று மறைகின்றார். தேங்காய் உடைக்கும் ஓசையும், மணி அடிக்கும் நாதமும் நம் செவிகட்கு இன்பமளிக்கின்றன. 'ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே' என்ற தேவாரம் நினைவிற்கு வருகிறது.

கண்ணிற்கு இன்பந்தருவது ஆறுமுகப் பிரானின் திரைச் சீலைத் திருவுருமே! பின்னர் பூசாரியார் கருப்பூரப் புகை யோடு வெளிவந்த பின் அப்புகையை நம்முன்னர் போற்றிக் காட்டி, பூவையும், தேங்காயையும், திருநீற்றையும் அளிக் கின்றூர். இதுவேதான் கதிர்காமத்தில் பூசை இயற்றும் வழிபாட்டு முறையென்க.

சிதம்பர இரகசியம் என்று கூறப்படுவது உலகில் ஓர் வழக்கு. இவ்வழக்குகதிர்காமத்திலும்இல்லாமற்போகவில்லை. இதன் அடிப்படையான கருத்துதான் என்னை? என்று ஆழ்ந்து சிந்தித்தாலன்றி உண்மை வெளிப்படாதல்லவா! யாதும் பற்றுக்கோடின்றி, அநாதியாய், உருவாயும், அருவா யும் அரு உருவாயும், நிற்கின்ற ஆண்டவனைக் காணும் முறைகள் பல திறத்தின. மூர்த்தி தலம் தீர்த்த விசேட மாகக் காணப்படும் இடங்கள் பல உளவாயின. மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனுகிய பரம்பொருள் தனது அருட் சக்தியால் உலகத்தை இயற்றுதல் முதலான ஐந் தொழில்களைச் செய்து வருகின்ற உண்மைத் தத்துவத்தைக் காட்டக்கூடிய இடங்கள் நம் நாட்டில் பல உள்ளன. சித்தே அம்பரமாகிய சிதம்பரம் இவ்விடங்களிலொன்று. பரமன், சக்தியின் மயமாய் விளங்கும் கதிர்வேலினிடத்தும் விளங்கு தல் உண்டு. எனவே, அருவாய் நிற்கும் ஓர் பொருளை உருவாய் நிற்கும் கதிர்வேலானது காட்டுங்கால், அச் சக்தி யின் உருவொளித் தோற்றத்தைத் தன்னளவில் வெளிப் படையாகத் தோற்றினும் மறைத்தே அருளுகின்றது. இக் குறிப்பைச் சிறிது மனத்துள் புலப்படுத்திக்கொண்டா லன்றிக் கதிர்காமக் கதிர்வேலின் காட்சியின்பம் கண்டு கொள்ள முடியாததொன்றும். இதைக் குறித்தே அருணகிரிநாதரும் தனது கந்தர் அநுபூதியில்,

"உருவன் றருவன் றுளதன் றிலதன்
றிருளன் றொளியன் றெனநின் றதுவே"

—(கந்தர் அநுபூதி 13—செய்யுள்.)

"செவ்வான் உருவில் திகழ்வேலவன் அன்
றொவ்வா ததென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

—(கந்தர் அநுபூதி 30—செய்யுள்)

என்று கூறிப் போந்தாரென்று உணர்க.

---

8. தொப்பித் தோட்டமும்—சிவனடி பாதமும். (Hatton and Adam's Peak)

தொப்பித் தோட்டம் என்று வழங்கப்படும் ஓர் சிறிய நகரம் கண்டிமா நகரத்திலிருந்து 46 மைல் தூரத்திலுள்ளது. செல்லும் வழியானது மலைகளின்மீது அமைக்கப்பட்டுள்ள சாலையாகும். ஏறி இறங்கிச்செல்லும் வழியுடையதும் வளைந்து வளைந்து செல்லும் நெறியுடையதுமான கடின பாதை. செல்லும்பொழுது மலையடிவாரங்களில் காணப்படும் தேயிலைத் தோட்டங்களின் அளவும் அழகும் கணக்கிடுமாறு இல்லை. நெருங்கிய பள்ளத்தாக்குகளில் செழுமையாகக் காணப்படும் தாவர வர்க்கங்களின் பெருமையை அறுதியிட்டுக் கூறுதல் அமையாத தொன்றும். இம்மலைச் சாரல்களில் உற்பத்தியாகும் லட்சக்கணக்கான டன் நிறையுள்ள தேயிலையைச் செப்பனிட்டு வெளிநாடுகளுக்கும் உள் நாடுகளுக்கும் அனுப்பவேண்டிய சாதனங்கள் அமைந்துள்ள பெரிய ஆலைகள் (**Hatton**) தொப்பித் தோட்டம் என்ற

ளரில் அமைக்கப்பட்டுள்ளன. ஹாட் என்பது தொப்பி யானதால் Hatton என்பது தொப்பித் தோட்டம் என்ருயிற்று என்று அங்குள்ளார் கூறுகின்றனர். இவ்வூர் வாசிகளில் மிகுதியானவர்கள் தமிழ் மக்களே. அங்கு வசிக்கக்கூடிய தோட்டத் தொழிலாளிகளுக்கு வேண்டிய உணவு உடை உறையுள் முதலானவைகளுக்கும், இன்ப விளையாட்டுகளுக்கும் கல்வி வளர்ச்சிக்கும், வேண்டிய சாதனங்கள் நன்கு அமைந்துள்ளன. பெரிய வணிகரிற் சிலர் தமிழ் மகம்மதியர்களாகவும், தமிழ் இந்துக்களாகவும் உள்ளார்கள். மலைகளின் வழியாகவே அநேக மைல்கள் பிரயாணஞ்செய்து வரக்கூடிய பிரயாணிகளின் களைப்பைத் தீர்த்தற்கான இட வசதிகளும், சிற்றுண்டிச் சாலைகளும், அரசாங்க விடுதிகளும், ஏற்படுத்தப்பட்டுள்ளன. தொழில் முன்னேற்றத்தை வளர்க்கக்கூடிய இடமாகவும், மத உணர்ச்சியையும், ஆன்ம உணர்ச்சியையும் எழுப்பக்கூடிய இடமாகவும், அமைந்துள்ளது இத்தொப்பித் தோட்டமே.

சிவனடிபாதம் :—தொப்பித் தோட்டத்திற் சிறிது தூரத்திலுள்ளதுதான் சிவனடிபாதம் என்று வழங்கப்படும் ஆதம் மலை (**Adam's peak**). இம்மலையை இந்துக்களும், பௌத்தர்களும், மகம்மதியர்களும், கிருஸ்தவர்களும் "ஸ்ரீ பாதம்" என்று கூறுகின்றனர். எல்லா சமயிகளுக்கும் பொது மன்றமாக விளங்கும் இப்பெரும்புகழ் வரையின் மீதுள்ளது ஓர் அழகிய பாதச்சுவடாகும். இச்சிகரமானது பூமி மட்டத்திற்கு 7360 அடி உயரத்திலுள்ளது. இம்மலை மீது நின்று பார்ப்பின், இலங்கைத்தீவின் நாற்கடல் வனப்பும், கலங்கள் நிற்கும் துறைமுகங்களும், மணியாறுகள் தவழ்ந்து செல்லும் மந்தக் காட்சியும், மலைகள் ஒன்றன்பின் ஒன்ருய்த் தலைக்காட்டி நிற்கும் கம்பீரமும், மனதைக் கொள்ளை கொள்கின்றன. கலங்களிற் செல்லும் மாலுமி

களும் பிரயாணிகளும் அநேகமைல் தூரத்திற்கப்பாலிருந்து காணும் காட்சியை இம்மலை பெற்றுள்ளது என்பது மிகை

[Photo: M. D. Gunasena & Co., Ltd.

படம் 5. சிவனடி பாதம்

யாகாது. அநேக நூற்றாண்டுகளாக இப்புண்ணியமலை ஓர் பொருட்காட்சிச் சாலையாகவே இருந்து வருகிறது என்னலாம்.

பௌத்தர்கள் தங்கள் புத்ததேவனின் அழகிய திருப்பாதம் அங்கு பட்டுள்ளது என்று கூறித் தொழுது வருகின்றனர். மகம்மதியர்களோ தங்கள் நபிநாயகத்தின் இரண்டு பாதங்களில் ஒன்று மக்காவிலும், மற்றொன்று இம் மலையிலும் பதிந்துள்ளது என்று நம்புகின்றனர்.

இந்துக்களோ இப்பாதம் உமையாள் பங்கனின் உத்தமபாதம் என்கின்றனர். கிருஸ்துவர்கள் இதனை ஆதம்மலை என்று அன்புடன் அழைக்கின்றனர். எல்லார்க்கும் பொதுவில் நடம் இடுக்கின்ற ஈசன் எந்நாட்டவற்கும் இறைவன் தன் நாட்டவற்கும் தலைவன் ஆதலால் இப்பாதத்தை ஈண்டு காட்டுவித்து அருளினன் போலும். உதயகாலத்தில் இம் மலையில் ஞாயிறு அளிக்கும் காட்சிதான் அற்புதக் காட்சி யாகும். மலைகளடர்ந்த இருட்பிழம்பின் மத்தியில் செம் பருதி தோன்றுவது பார்ப்போர் கண்ணிற்கு உவமையற்ற எழில் தோற்றத்தை அளிக்கின்றது. பருதி ஏறிக் கொண்டே இருப்பினும் மலைகள் மத்தியில் காணப்படும் அதன் தோற்றம் ஏறுவதுபோலும் பின்னர் இறங்குவது போலும் பின்னர் ஏறுவதுபோலும் தோன்றிக்கொண்டே யிருக்கும். மேலும், பருதியின் ஒளியலையால் பக்கங்களிற் காணப்படும் சராசரங்கள் எல்லாம் உள்ளத்திற்கு உதய ராகத்தை எழுப்பி உற்சாக மூட்டுகின்றன. இறைவன் இல்லையென்று கூறும் மாயை நிறைந்த மனதையுடையார் ஆங்கு செல்வாரெனின் மனமது செம்மையாகி இறைவனது எழில் உருவத்தைக்கண்டு வியப்பும் ஞானமும் பெறுவர். இக்காட்சியானது உலகக் காட்சிகளில் ஒரு பெருங்காட்சி என்றே திண்ணமாகக் கூறலாம்.

ஓடைகளிலும் இலைகளிலும் எழுதப்பட்டுள்ள எழுத் துக்கள் மெய்யறிவுடையார்க்கே தோன்றுதல்போல சிவனடி பாதமலையில் நாற்புறங்களிலும் தோன்றும் உதயகாலப் பொருள்கள் யாவையும் இறைவன் உண்டு, உண்டு என் பதைப் பறைசாற்றுகின்றன. பல நூற்றுண்டுகளுக்கு முன் புண்ணியமூர்த்தியாகிய ஒருவன் இத்துணை எழிலுடைய மலைச் சிகரத்தை நன்கு அறிந்தே புனிதமாக்கி இருத்தலும் கூடும். ஆசியாக் கண்டத்தின் சரித்திரப் பகுதியிலே ஆதம்

மலை ஓர் தொடர்புடையதாக உள்ளது. மகா அலெக்சாந்தர் இம் மலையின்மீது ஏறிச்சென்று பார்த்ததாகச் சில சரித்திரக் காரர்கள் துணிகின்றனர். அது ஒருபுறமிருக்க, 5-ஆம் நூற்றாண்டில் சீனதேசத்து யாத்திரிகர்களான பாகியானும் (Fa-hien) மார்க்கோ போலோ (Marco Polo)வும் இம்மலை மீது ஏறிச்சென்றதாக நம்புவதற்கேற்ற சில ஆதாரங்கள் உள்ளன. இம்மலைமீது செல்வதற்குப் பொருத்தமான மாதங்கள் டிசம்பர், ஏப்ரல் மாதங்களே. தொப்பித் தோட்டத்தினின்றும் ரெத்தினபுரா என்ற இடத்தினின்றும், இம் மலைக்குச் செல்லலாம். எளிதாகவும் அண்மையிலுள்ளதாகவும் உள்ள வழி தொப்பித் தோட்டத்தின் வழியே யாகும்.

---

9. ஏழு கன்னிகைகள்

திருக்கோணமலை நகரிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ள ஏழு வெந்நீர்க் கிணறுகளையே ஏழு கன்னிகைகளென்றும் சப்த கன்னிகாவென்றும் அழைக்கின்றனர். நகரத்திலிருந்து அங்குச் செல்வதற்கான வழி நன்கு அமைக்கப்பட்டுள்ளது. காடுகள் நிறைந்த மலைத் தொடர்களின் கவானில் விளங்கும் இக்கிணறுகளை வெந்நீர் தரும் ஊற்றுக்காலென்றே சொல்லலாம். உற்சாகமாகச் செல்லும் மக்கள் அங்குச் சென்று சிறிது நீராடிக் களித்து இளைப்பாறுகின்றனர். மலைச்சாரலில் அமைந்துள்ள இவ்வூற்றுகளுக்குச் செல்ல வேண்டுமாயின் தனியாகச் செல்லுதல் அபாயகரமானதே. ஏனெனில் பகற்காலங்களிலும் பக்க மலைகளில் நடமாடும் கொடிய விலங்குகள் அவ்விடத்திற்கு நீரருந்துவதற்கு வருதலுண்டாம். அம்மலைகளில் அதிகமாகக் காணப்படும்

விலங்கினம் சிறுத்தைப் புலியாம். ஆனல் வந்த பிரயாணி கள் தொந்தரவின்றித் தங்குவதற்கென நற்காவல் அமைந் திருத்தலோடு கிணற்றுப் பக்கலிலே ஓர் சிறிய சிற்றுண்டிச் சாலையும் ஏற்பட்டுள்ளது. மிருகங்களும் எளிதில் நெருங்க முடியாத உயர்தரமான கட்டிடத்திற்றன் அச்சிற்றுண்டி சாலை அமர்ந்துள்ளது.

ஏழு கன்னிகைகள் அமர்ந்துள்ள இடம் நாற்புறமும் நல்ல சுவர்களால் கட்டப்பட்டிருக்கின்றது. ஊற்றுக்களி னின்றும் ஊறும் வெந்நீரானது பலவகையான தட்பத்துடன் இருப்பதினல் செல்லும் மனிதர்கள் அவரவர்களின் உடல் நிலைக்கேற்றவாறு உள்ள வெந்நீர் ஊற்றில் நீராடலாம். சிறிய பாத்திரங்களின் உதவியால் எடுக்கப்பட்ட நீரை உபயோகிக்க வேண்டுமென்ற விதி அங்குள்ள காவலாளிகளால் தெரிவிக்கப்படுகின்றது. இவ்வூற்றுக்களின் நீரானது அள்ள அள்ளக் குறையாமலும், தன் தட்ப நிலையி னின்றும் சிறிதும் தப்பாமலும் இருக்கும் காரணம்பற்றியே தான் இக்கிணறுகளைக் கன்னிப் பெண்களாகக் கருதினர் போலும்! தனது எழிலிலும் இயல்பிலும் மாருத தன்மை யைப்பெற்ற ஒரு பெண்ணைத்தான் கன்னியென்றழைப்பது மரபாகும். நீரைப் பெண்ணுகப் பாவித்தலும் ஒன்று. எனவே சப்த கன்னிகா என்ற இடத்திற்சென்று கன்னி நீராடிவந்தால், உடலிலுள்ள பல நோய்கள் நீங்குவதுடன் உடல் வலிமையையும் அழகையும் பெருமாம் என்பது துணிபு. அருச்சுனன் குமரவேள் முதலான தெய்வப் பிறப்புகளும், ஓரோ விடங்களில் கன்னி நீராடிய வரலாறு கள் புராணங்களில் சுவைதோன்றக் கூறப்பட்டுள்ளன என்பதை ஈண்டு சிந்தித்து உவகையுறலாம்.

ஏழு கன்னிகைகளிடம் ஏற்பட்டுள்ள இன்ப நீராட்டில் திளைத்த பின்னர் சுமார் 50 கஜ தூரத்தில் உள்ள நன்னீர்

ஊற்றுகிய தண்ணீர் ஊற்றில் பின்னர் நீராடுதலும் உண்டு. நிலமகள் நயந்து கொடுக்கும் இந்நீர் விளையாட்டிடங்களில் இலங்கைத்தீவில் அமர்ந்துள்ளது போல் நமது நாட்டிலும் வங்காள தேசத்தில் ஒன்று உள்ளது. யாழ்ப்பாணவாசிகள் தங்கள் நகருக்கு அருகே உள்ள கீரிமலைக் கடற்கரையில் அமைந்துள்ள தண்ணீர் ஊற்றைக் கொண்டாடி மகிழ்வது போல் திருக்கோணமலை வாசிகளும் இக்கன்னிப் பெண் களாகிய எழுவரையும் நன்கு பாராட்டி மகிழ்கின்றனர்.

இவ்வூற்றுக்களைப் பற்றிய கதைகள் பலவாம். அவற்றில் ஒன்று முக்கியமானது. இராவணன் இராமன் மனைவியாகிய சீதா பிராட்டியாரை இலங்கையில் வைத்திருந்தபோது அமர்த்திய எழு கன்னிகைகளே எழு ஊற்றுக்களாக மாறினர் என்றும், சீதையினுடைய கற்பின் பெருமைக்கு இக் கன்னி ஊற்றுக்களே நற்சாட்சியாகுமென்றும் நல்ல ஓர் கதை சொல்லப்படுகின்றது.

---

10. நுவரயேலியா—மலையரசி (Nuvara Eliya)

நுவரயேலியா என்ற மலையரசி கொழும்பு நகரத்திலிருந்து 135 மைல் தூரத்திலுள்ளதாம். மணமிக்க தேயிலை இங்கு பயிராகின்றது. இம்மலைக்குத்தான் பல நாட்டவர்களும் இலங்கை வாசிகளும் அக்டோபர் அல்லது மே மாதத்தில் நல்ல காற்றுக்காக வந்து தங்குகின்றனர். இம்மலை பூமி மட்டத்திற்கு 5400 அடி உயரத்திலிருப்பது. இந்திய நாட்டின் மலையரசியாக விளங்கும் நீலகிரியைப்போல் (Ooty) இலங்கைத் தீவில் மலையரசியாக விளங்கும் கானல் மலை நுவரயேலியாவாகும். உலகத்திலுள்ள உற்சாகமானக் கண்

கவர் இடங்களில் இது ஒன்று என்று அறிதல் வேண்டும். ஆசியாக் கண்டத்தில் ஐரோப்பிய நாடு புன்முறுவல் பூக்குமிடம் இதுதான் என்னலாம். இங்கிலாந்து தேயத்தில் வைகறையாமத்தில் பூக்கும் வண்ணப் பன்மலர்களையும், இனிய இசையோடு செல்லும் நீரருவிகளையும், வானின்றிழியும் அழகிய நீர் வீழ்ச்சிகளையும், சுவிட்சர்லாந்து நாட்டிற் காணப்படும் சில அரிய காட்சியிடங்களையும், இம்மலையரசியினிடம் ஒருங்கே காணலாம் என்பர். வேட்டைத் தொழிற்கும், விளையாட்டுத் தொழிற்கும், மீன்பிடித்தற்றொழிற்கும், மிசையேறுந் தொழிற்கும் பொருந்திய இடம் இவ்விடமேயாகும். கடுகண்ணவா என்ற மலைக்கணவாய் வழியாகச் செல்லவேண்டிய இடம் இதுவாகையால் அநேக அற்புதக் காட்சிகளைத் தன்னிடத்தே கொண்டுள்ளது. பசுமையடர்ந்த பக்கங்களும் நெற்கதிர் பழுத்துத் தலை சாய்ந்து நிற்கும் சாரற் பழனங்களும், கண்ணைக் களிக்கச் செய்கின்றன.

நுவரயேலியாவிலுள்ள இளமரக்காவில் அநேகமணி நேரம் காலத்தைக் கழிக்கலாம். மலர்களின் வண்ணங்களும், வகைகளும் எண்ணிக்கையில் அடங்கா. இம்மலையில் மீன் பிடிக்கும் இடங்கள் பல உள்ளன. இலங்கையாரின் மீன் பிடிப்பாளர் சங்கம் என்று ஒன்று அங்கு உள்ளது. சைவ உணவும், மற்றவகையான உணவுகளும் அளித்து அமரச் செய்யும் உணவுச்சாலைகள் பலவுள்ளன. பிரயாணிகள் யாதொரு வருத்தமுமின்றித் தங்கி உற்சாகமாகக் காலத்தைக் கழிப்பதற்குண்டான சாதனங்களை நல்ல முறையில் மேலை நாட்டார்க்கும், கீழை நாட்டார்க்கும் அங்குள்ளார் அமைத்துள்ளார்கள். தமிழ் மக்களில் அநேகர் இக்கானல் மலையில் பலவித வாணிகத்தைச் செய்து வாழ்ந்து வருகின்றனர். நியூசிலாந்தின் கடற்கரையில் அகப்படும் ஒருவித

மான வானவில் (Rainbow) மீன்கள் நுவரெலியாவில் கிடைப்பதாகச் சொல்லப்படுகின்றது.

மக்கள் நடந்து சென்று காணக்கூடிய இடங்கள் பல ஆங்கு உள்ளன. காடுகள் வழியாகவும், புற்றரை வழியாக வும், மலைச்சாரல்கள் வழியாகவும் செல்லக்கூடிய பாதைகள் அநேகம் அங்குக் காணப்படுகின்றன. அழகிய ஏரி ஒன்று அம்மலையில் இருப்பது அம்மலைக்கு மிக்க பெருமையைத் தருகின்றது. அதன் பெயர் கிரகரி (Lake Gregory) என்பதாம். அவ்வேரி வானத்தையும் காட்டையும் வடித்துக் காட்டும் ஆடி என்று சொல்லுதல் மிகையாகாது. நிலா வெளிகள் (Moon Plains) என்ற வனப்புமிக்க இடங் களைக் கடந்து சென்றபின் பிதிருத்தலகாலா என்ற மலை காணப்படுகின்றது. அம்மலையில் ஏறிச் செல்ல வேண்டுமாயின் சுமார் 3 மணி நேரம் வேண்டும். அழகான இயற்கைக் காட்சிகள் அநேகம் அங்கு உள்ளன. மனிதனை மோகிக்கச் செய்யும் எழில் வண்ணக் கலைமாடம் என்றே அதனைக் கூறலாம். சேய்மையில் சிறுத்தை முதலான மிருகங்களின் ஒலிக்குரல் கேட்கப்படுவதால், வேட்டையாடு வார்க்கன்றி மற்றையோர்க்கு இம்மலைப் பகுதிகள் அஞ்சத் தகுந்த இடங்களாமென்று கூறுதலே அமையும். எனினும், சேண்மையினின்று பார்க்கின்ற காலையில் அம்மலையின் தோற்றப் பொலிவுகள் குறைந்த தன்மையிற் காணப்பட வில்லை. செல்லுகின்ற திக்கெல்லாம், காடுகளும், சமவெளி களும், மலைக்கூட்டங்களும் காணப்படுகின்றன. மலையின் வீழ் அருவிகள் பச்சைமா மலைகளினின்றும் இழிகின்ற தோற் றம் முத்தாரங்கள் முகிழ்ப்பன போன்ற தோற்றப் பொலி வினை உடையனவாம். சாந்தமே குடிகொண்ட அம்மலையரசி யின் மங்காத இனிய கானம், மலையினின்று இழிதரும் நீர்

வீழ்ச்சிகளில் எழுப்பப்படுகின்றது. இம்மலைமாதின் யாழ் நரம்புகள் நீர்வீழ்ச்சிகளே போலும்!

எல்க் மலைச்சாரல்கள் நுவரயேலியாவில் ஓர் அழகிய இடம். அங்கு வேட்டையாடுவதற்குரிய சாதனங்கள் விரும்பிய அளவில் அமைந்துள்ளன.

மற்றுமுள்ள அல்லி மலர்த் தோட்டம் (**Lily Gardens**) அம் மலைக்குப் போகின்றவர்களால் பாராமல் வருவதற்கு முடியாததொன்றும். தூய்மையான இளந் தென்றலும், குளிர்ச்சியான வண்டறைப் பொய்கையும் "ஈசன் எந்தை இணையடி நிழல்போல்" இனிக்கின்றன.

நுவரயேலியா சூழ்நிலையில் உள்ள ஹகாலா தோட்டம் (**Hakgala**) 6 மைல் தூரத்திலுள்ளது. காதல் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் செழுமையும் இனிமையும், இத் தோட்டத்தில் குடிகொண்டுள்ளது என்னலாம். போகின்ற வழியில் இருமருங்கிலும் காணப்படும் அல்லி மலர்களின் அழகுத்திறம் மனதை ஈர்ப்பதாகும். ஹகாலா சிகரமானது 7000 அடி உயரத்திலுள்ளது. ஹகாலா தோட்டம் சுமார் 5000 அடி உயரத்தில் அமைந்துள்ளது. இத் தோட்டத்தில் ரோஜா மலர் வனம் ஒன்றும், அணைக்கமுடியாத பெரிய மரச்செறிவுகளும், சின்னஞ்சிறு குன்றுகள் நெருங்கியுள்ள குன்றுத் தோட்டங்களும், அழகிய குட்டைகளும், குளங்களும், அணிகலன் அமைந்தாற்போன்ற கொடிக்குவைகளும் காணப்படுகின்றன. இவ்வணிதிகழ் வனத்தைக் கண்டு களிக்காதார் இல்லையென்றே கூறலாம்.

11. அசோகவனம் (Sita Eliya)

அசோகவனம் அல்லது அசோக வனிதை என்று கூறப்படும் அழகிய சோலை ஹகாலா தோட்டத்திற்குப் போகும் வழியில் உள்ளது. நுவரயேலியாவுக்குக் கிழக்கே மூன்று மைல் தூரத்தில் இருப்பது. இச்சோலையை சீதாயேலியா என்றும் அழைக்கின்றனர். இந்திய நாட்டின் இதிகாசமாகிய இராமாயணக் கதையின் இரு திருப்பு மையங்களில் இலங்கை ஒன்றாதலின் இவ்வனிதைக்கு உண்டான சிறப்பையும் பழமை நலத்தையும், விவரித்துக் கூற வேண்டா. வால்மீகி முனிவர் வகுத்த அசோக வனத்தின் அழகும் கவிச் சக்ரவர்த்தியாகிய கம்பநாடன் தனது தமிழ்க் காவியத்தில் அசோகவனத்தைத் தீட்டிய காவியச் சித்திர அமைப்பையும் கவனிக்குங்கால், இக்காலத்துக் காணப்படும் அசோக வனிதையின் இலக்கணங்கள் சில குறைந்தும் இருக்கலாம். எனினும், கவிஞன் தன் மனக் கண்ணால் தீட்டியுள்ள எழிற் சித்திரங்கள் இங்கு காணப்படாது போயினும் இழுக்காமாறு இல்லை. வல்லான் வகுத்த வழியே காவியத்தின் வழியானதால், அவ்விலக்கணங்களிற் சிறிது பிறழ்ந்தும், உறழ்ந்தும் விளங்கக்கூடிய இவ்வசோக வனிதையைப் பிராட்டியார் தங்குவதற்குரிய பேரில்லமாக இலங்கேசன் அக்காலத்து அமைத்து வைத்திருக்கலாம் என்று எண்ணுவதற்குரிய சில சான்றுகள் இம்மாவிருஞ் சோலையில் காணப்படுகின்றன.

55 ஏக்கரா நிலப் பரப்புள்ள இடத்தில் அசோக வனிதையானது நின்று காட்சியளிக்கின்றது. கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்ற நால்வகைப் பூக்களும் பல் வண்ணங்களுடன் விளங்கும் இடங்கள் பல. நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு, கனிகொய்தல், உந்தீ பறத்தல்

தெள்ளேணம் கொட்டல், பந்தாடுதல், அம்மானை ஆடுதல் முதலான மகளிர் விளையாட்டுகளுக்கு உறைவிடமாக அமர்ந்துள்ளது இவ்வசோக வனிதை என்னலாம். மலர் வனங்கள் ஓர்பால், கனி மலர்ச்சோலைகள் ஓர்பால், களிவண்டார்க்கும் கழனிகள் ஓர்பால்; கனி மரச்சோலைகள் ஓர்பால், தண்டாமரைகள் தழைத்து நிற்கும் தடாகங்கள் ஓர்பால்; முல்லை, மல்லிகை, சண்பகம், குரவம் முளைத்துள்ள இடங்கள் ஓர்பால்; மான் மரைக்கன்றுகள் மகிழ்ந்து விளையாடும் ஓர்பால்; மனமுவந்த காதலர்கள் மாறியாடும் இடங்கள் ஓர்பால்; அன்னப்பேடையும் ஆண் மயிலும் அமர்ந்து நிற்கும் ஓர்பால்; தேன் கதலிப் பழந்தின்னும் மட மந்திகள் ஓர்பால் என்றெல்லாம் இசைத்துக் கூறுவதற்கேற்க எழில் கனிந்த இடமே அசோக வனிதை என்க. முற்காலங்களில் இவ்வனம் பெரிய வனமாக இருந்திருப்பினும் இருக்கும் என்று யூகிப்பதற்கும் இடமுண்டு. ஹகாலா தோட்டம், அசோக வனிதை, நுவரயேலியா முதலிய இடங்களை ஒன்று சேர்த்துப் பார்ப்போமாயின், கம்பன் கவிதையில் காணப்படும், சுந்தர காண்டத்தின் அசோக வனக் காட்சி நம் கட்புலனுக்கு அதிக சேய்மையிலுள்ளதாகத் தோற்றவில்லை. பல நூறுண்டுகளுக்குப் பின் காலவசத்தால் பொருள்கள் தங்கள் இயற்கை எழிலினின்றும் சிதைந்து போதல் உண்மையாதலாலும், இராம இராவண யுத்தத்தின் அதிர்ச்சியால் அவ்வனிதையின் முகமண்டலம் சிதைவுற்று ஒளியிழந்து நிற்கக்கூடுமென்றதாலும், அநுமன் தன்வாலில் ஏற்பட்ட அழலால் அநேக இடங்களைச் சுட்டு நீறுக்கிய நிகழ்ச்சியாலும், பிராட்டியார் வதிந்து வந்த அசோக வனிதை தனது இடம் குறைந்து எழில் குறைந்து வளம் குறைந்து இத்தன்மையளவில் நிற்கின்றுள் என்று எண்ணிக்கொள்வதும் பொருத்தமேயாம்.

மேலும் அநுமனது தீயால் சுடப்பட்ட நிலமே கரிந்து விட்டது என்பர். இவ்வனிதையில் காணப்படும் மண் ஓர் அடியளவு அகழ்ந்து பார்த்த போதிலும் கருத்திருப்பது கண்கூடு. கருத்திருப்பதற்குக் காரணம் எத்தன்மைத்தாயினும் மாபெரும் வனமாகிய இவ்வசோக வனிதை தன்னியல்பு அழிந்து குறைந்துள்ள தன்மையை நன்கு புலப்படுத்தாமலில்லை.

அடுத்த காட்சியாகக் காணப்பெறுவது சீதாபிராட்டியாருக்குண்டான திருக்கோயிலாகும். ஓர் மைல் தூரத்திலுள்ள பிராட்டியார் கோயில் அங்குள்ள இந்துக்களால் இன்றும் வழிபாடியற்றப்பெற்று வருகின்றது.

கற்பின் கொழுந்தாகிய ஜானகி சிறைப்பட்டுக் கிடந்த இடமேதான் கோயில்கொண்ட இடமாகும் என்று அங்குள்ள பெரியோர்கள் கூறுகின்றனர். கோயில் பக்கங்களிலுள்ள மரங்களிலும், அசோக வனிதைப் பூங்காவிலும் அநுமனின் வம்சத்தார் அளவில் மகிழ்ச்சியோடு ஆடி வருவதை இன்றும் காணலாம். கற்றளியின் அருகாமையில் இருக்கும் ஓர் ஊற்று நீரை அள்ளிக்கொள்வோமானால், அதன் சீதளத் தன்மையை அறுதியிட்டுக் கூறுதல் இயலாது. சாதாரணமாகவே மலையருவிகளில் கிடைக்கும் நன்னீரானது, மிகக் குளிர்ச்சியுடையதாயினும் இச் சீதா பிராட்டியார் கோயில் முன்னணியில் உள்ள ஊற்றுநீர் தனிச் சிறப்பைப் பெற்றுள்ளது என்னலாம். இதனைப்பற்றிக் கூறப்படும் செய்தி வருமாறு:—

அசோகவனம் பெருந்தீயால் அழிந்து வந்த காலத்து பிராட்டியாரின் நாவுலரவே, தனது தாகவிடாயைத் தீர்த்துக் கொள்ளுவான்வேண்டித் தனது பாதத்தால் மலையைத் தாக்கித் தீண்டவே, கங்கைப் பிரவாகம் ஏற்பட்டதென்றும்,

பிராட்டியார் தனது விடாய் தீர்ந்துத் தணிந்தாளென்றும் கதை வழங்குகின்றது. இச்சுனை நீரே இந்து மக்களால் சிறந்த தீர்த்தமாக இன்றும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

---

12. பொலனருவா கலைச் செல்வம்

இப்பழைய ராஜதானி நகரம் கொழும்பிலிருந்து 134 மைல் தூரத்தில் உள்ளது. பழைய அரச நகரமாகவிருந்துப் பின்னர் பாழ்பட்டதாயினும் தற்காலத்தில் மக்களில் பலர் உடலோம்பலின் காரணமாக அங்குச் செல்கின்றனர். அரசாங்கத்தார் முயற்சியால் அநேக நூற்றுண்டுகளாகக் கண் காணிக்கப்படாமலிருந்த அத் தலைநகர் சிறிது சிறிதாகத் தனது எழிலைக் கைப்பற்றி வருகின்றது என்னலாம்.

காடுகளின் மத்தியில் ஏற்பட்டிருந்த இம் மாநகர் 11-வது நூற்றுண்டில் அரசாண்ட **பராக்கிரமபாகு** என்ற பேரரசனுல் நிர்மாணிக்கப்பட்டதென்பர். இரண்டு நூற்றுண்டுகள் வரையில் இம்மாநகரமே இலங்கையின் தலை நகரமாக விளங்கியது என்பது சரித்திர உண்மையாகும். அந்நகரைச் சுற்றிப் பார்த்து வருங்கால் ஒருவனுக்கு அதன் பழம் பெருமை நன்கு விளங்கித் தோன்றும். விஜயநகரத்தை ஆண்டுவந்த அரசர்களில் நாயகமணியாக விளங்கும் கிருஷ்ணதேவ ராயரால் ஏற்படுத்தப்பெற்ற ஹம்பி நகரத்தின் சின்னங்கள் போன்ற அநேக சின்னங்கள் அங்குக் காணப்படுகின்றன. மேலும் அந்நகரைத் தனது தாயகமாகக்கொண்ட பராக்கிரம பாகுவின் குணாதிசயங்கள் மேன்மையுற்றனவாகும். இலங்கைச் சரித்திரத்தில் பராக்கிரமன்தான் முதலிடம் பெறும் பாக்கியம் பெற்றுள்ளார்.

வீரமுடைமையும், தத்துவஞான முடைமையும், பாண்டித்துவமுடைமையும், பண்புடைமையும் ஒருங்கே அவரிடம் அமையப்பெற்றிருந்தன. பொலனருவா நகரத்தில் சோலையிடங்களும், அரண்களும், மஞ்சு தவழ் மதில்களும், மாண்புடை மாளிகைகளும் அவரால் கட்டப்பட்டவையே ஆகும். நகர்ப்புறத்தில் காணப்படும் ஓர் ஏரி கடல் போன்றதாகத் தெரிகின்றது. அதன் கரையின் நீளம் 12 மைல். அவ் ஏரியிலிருந்துதான் நகரத்திற்கு வேண்டிய நீர் அளிக்கப்பட்டதென்றும், அந்நீர் வருவதற்கான வழிகள் குழாய்களென்றும் அறியக் கிடக்கின்றது. நீர்ப்பாசன வசதிகளுக்கும் அவ்வேரியே உபயோகப்படுத்தப்பட்டதாம். வீர சோழனல் வெட்டப்பட்டுள்ள வீராணத்தேரி என்பது தென்னுற்காடு ஜில்லாவில் இருக்கின்ற முறையைக் கவனிக்குங்கால் பராக்கிரம பாகுவால் வெட்டப்பட்ட பொலனருவா ஏரியானது எவ்வகையிலும் குறைவுடையதாகத் தெரியவில்லை.

கடல் போன்று கிடக்கும் ஏரிக் கரையில் பராக்கிரமனின் திருவுருவம் நின்று அழகு செய்கின்றது. எட்டு நூற்றுண்டுகளுக்குப் பின்னும் அத்திருவுருவம் தனது எழில் சிதையாது நிற்பதைக் காணுங்கால் அவர் சிற்பியின் தொழிற் கலை வல்லமையை எங்ஙனம் தேர்தல்கூடும்? தனது கையில் பழைய சுவடியைத் தாங்கி, தான் தந்த தண்ணீர்க் கடலை நோக்கி நிற்கும் அவரது உருவச் சிலையைக் கேவலம் அரசச் சிலையாகக் கொள்ளுமாறு இல்லை. அருள் பொழியும் ஆன்ம உணர்ச்சியுடைய உருவாகவே கொள்ளுதல் அமையும் என்க.

இரண்டாவதாகக் காணப்படும் அவரது நாளோலக்க மண்டபம் (Audience Hall) களிறுகள் தாங்கி நிற்கும் கற்றளியாகும். கூரை நீங்கப்பெற்ற அம்மண்டபம் நேர்த்தி

யான முறையில் அமைக்கப்பெற்றிருப்பதும், பல நாட்டுத் தூதுவர்களும், அரசர்களும், பெருமக்களும், துறவிகளும், தங்கி உரையாடற்குப் போதிய அளவுள்ளதாகக் கட்டப்பட்டிருப்பதும் அவ்வரசனின் சிறப்பை நன்கு உணர்த்துகின்றது. அரசனது மாளிகையோவெனில் 25 ஏக்கரா நில எல்லைக்குள் அமைந்திருந்ததாம். எனவே, அரச இல்லத்தின் அழகும், சிறப்பும் சிந்தித்தே உணர்தற்பாலதாம். சிதைந்துள்ள அரசமாளிகையின் சின்னங்களைக்கொண்டு ஒருவாறு அதன் சிறப்பை உணர்தற்கும் இடமுண்டு. நீண்ட பெரிய உத்தரங்களால் அமைக்கப்பட்ட விதானங்களும், பல மாடங்களின் அடுக்கு வரிசைகளும் சென்ற காலத்தின் சிறப்பைத் தெரிவிக்கின்றன. ஆழ்ந்து அகன்ற சுவர்களால் கட்டப்பட்டுள்ள கோட்டையின் மீது அரச இல்லத்தினர் விளையாடும் நீர் மாடங்கள் அமைந்திருந்தனவாம்.

சிங்களவர்களின் அக்கால வாழ்க்கைத் திறத்தை இச்சிற்பக் கலை நுட்பங்கள் நன்கு தெரிவிக்கின்றன என்பது போதரும். நகரத்தின் வடக்குத் திக்கில் ஓர் அலர்ந்த தாமரை வடிவாக அமைந்துள்ள நீராடும் இடம் அமர்ந்துள்ளது.

நகரத்தின் மத்தியில் வட்ட வடிவமான புத்ததேவனின் கற்கோயில் ஒன்றை அவர் அமைத்திருந்தார். நான்கு வாயில்கள் அமைந்த அக்கோயிலில் புத்த தேவனின் திருவுருவம் என்றும் காணுமாறுபோல் வைக்கப்பட்டிருக்கிறது. இக் கோயிலே சுற்று வட்டாரங்களிலுள்ள கோயில்களுக்கு நடுநாயகமாம். கோயிலின் விதானமானது அழகிய முறையில் கட்டப்பட்டுள்ளது. விதானத்திலும், விதானத்தைத் தாங்கி நிற்குங் கற்றூண்களிலும், கொடிகள் படர்ந்து செல்லுவதுபோல், கல்லால் செதுக்கப்

பட்டுள்ள கொடிகள் அழகாகப் படர்ந்து செல்லுகின்றன. சிற்பத்தின் நுட்பத்தைக் கண்டு களிக்கும் இடங்களில் இது வொன்றாகும். இம் மண்டபத்தைக் "கொடி மண்டபம்" என்று இக்காலத்தார் கூறுகின்றனர்.

பொலனருவாவில் வாழ்ந்து வந்த மக்களைப் பற்றிய செய்திகள் நமக்கு நன்கு தெரியாதிருப்பினும் அங்கு வதிந்த பௌத்த சன்னியாசிகளைப் பற்றிச் சிறிது கூறலாம். சுமார் 45 அடி உயரத்தில் நிற்கும் புத்த தேவனின் சிலையின் முன் காணப்படும் மகா மண்டபத்தில் (கோயிலில்) அன்றாடம் பூசைக்கெனக் குழுமிய பௌத்த சமயத்தார் கீழே விரிக்கப்பட்டுள்ள பட்டுப் பாய்களின் மீது இருந்து, மலர்களைக் கொண்டும், கற்பூரம், ஊதுபத்தி முதலான புகைகளைக் கொண்டும், தங்கள் வேதத்தை ஓதி வந்தனரென்று கேள்விப்படுகிறோம். சங்குகளை ஒலித்துப் பிரணவ நாதத்தை எழுப்புதல் பௌத்தர்கள் கையாண்ட செயல்களில் ஒன்றாகும். முரசு அடித்தலும், எக்காளங்களை ஊதுதலும் அன்னோர் பழக்கமாகக் கையாண்ட முறைகள் என்று உணர்தல் வேண்டும்.

இப்புத்த தேவனின் உருவச்சிலையினின்றும் சிறிது தூரத்திற் காணப்படும் கால் விகாரம் (Gal Vihara) என்பது சிற்பத் தொழிலில் சிறந்து விளங்கும் சின்னம் என்னலாம். அரிதுயிலில் அமர்ந்துள்ள பெரிய புத்த விக்கிரகத்தின் பக்கலில் நிற்கக்கூடிய ஓர் அழகிய உருவச் சிலையை, புத்த தேவனின் சிஷ்யரான **ஆனந்தர்** என்கின்றனர். தன் குருவாகிய புத்த தேவன் காலஞ்சென்றதைக் குறித்து ஆனந்தர் அடங்காத் துயரத்தில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. கட்டிய கைகளோடும் தளர்ச்சியான மனத்தோடும், வாடிய முகத்தோடும் நிற்கும் அச்சிலையின் அழகை என்னென்று சொல்லலாம்!

மனித உணர்ச்சியைத் தெற்றெனக் காட்டும் முறையில் சிற்பிகள் செய்துள்ள வேலைப்பாட்டின் திறம் பெரிதும் வியத்தற்குரியது. மற்றொரு விகாரமானது ஓர் காட்டின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ளது. அக்கோயிலின் சுவர்களில் புத்த தேவனின் பிறப்பு, இளமை முதலான நிகழ்ச்சிகள் நன்கு காட்டப்பட்டுள்ளதுடன், தேவனின் முற் பிறப்புக் களின் வரலாறுகளும் குறிக்கப்பட்டுள்ளன.

பிரயாணிகள் தங்கும் விடுதிகளுக்குச் சமீபத்தில் அர சர்களின் சபாமண்டபங்களும், நாளோலக்கமண்டபங்களும், அரசன் வீற்றிருக்கும் பெரிய கற்சிங்காதனமும் காணப்படு கின்றன. ஏரிக் கரையின் மறுபுறத்தில் இரண்டு பெரிய விகாரங்கள் உள்ளன. ஓர் விகாரத்தின் பெயர் "இலங்கை யின் அணி" (Jewel of Lanka) என்பதாம். இவ் விகாரம் மிக்க வேலைப்பாடுடையதாக அமைந்துள்ளது. புராதன காலங்களில் இவ்விகாரமே மிக்கப் புகழ்பெற்ற புத்த மதக் கோயிலாக இருந்திருக்கலாம் என்று யூகிக்கப்படுகிறது.

பொலனருவாவில் சிற்பக் கலைச் செல்வங்கள் மலிந் திருப்பதன்றிப் பொருட்செல்வம்பெருகுவதற்கும் வேண்டிய சாதனங்கள் அமைந்து உள்ளன. தற்கால இலங்கை அரசாங் கத்தார் அப்பிரதேசத்தின் செழுமையை நோக்கி விவசாய முன்னேற்றத்திற்கான முயற்சிகளைச் செய்து வருகின்றனர். நூற்றுக் கணக்கான ஏக்கரா பூமி உழவு தொழிலில் ஈடுபட் டுள்ளது. பராக்கிரம பாகுவின் பேரேரியின் நீரே அரசாங் கத்தாரின் நன்முயற்சிக்குக் காரணமாகும். விவசாயப் பண்ணை ஒன்றை அங்கு அமைத்திருப்பதும், அதன் வாயி லாகப் பண்ணைத் தொழிலை விருத்தி செய்து வருவதுமாகிய அரசாங்கத்தார் பெரு முயற்சி கூர்ந்து கவனிக்கத்தக்க தாகும். எனவே, பொலனருவா என்னுமிடம் கலைச் செல்வ

மன்றி நிலச் செல்வமும் கொழிக்கும் மேன்மை தங்கியது என்று கொள்வோமாக.

இங்ஙனம் பொலனருவா கோயிற் பணிகள் மேன்மையுற்று விளங்குவதற்குக் காரணம் சோழ அரசர்களின் கூட்டுறவுதான் என்று சில சரித்திரக்காரர்கள் எண்ணுகின்றனர். கோயிற்பணியில் சிறந்தவர்களான ராஜராஜன், ராஜேந்திரன், கங்கைகொண்ட சோழன் முதலானவர்கள் காலத்தில் ஈழநாட்டிற்கும் தமிழ் நாட்டிற்கும் தொடர்பு நன்கு இருந்தமையால் ஒருவாறு இவ்வபிப்பிராயத்தை அங்கீகரித்தற்கு இடமுண்டு. இச் செய்தி ஆராய்ச்சிக் குரியதொன்றும்.

13. திருக்கேதீச்சரத் தேவாரம்

ஈழ நாட்டில் பாடல் பெற்றுள்ள திருப்பதிகள் மூன்று. ஒன்று கதிர்காமம். மற்ற இரண்டும் திருக்கோணமலையும், திருக்கேதீச்சரமுமாம். முன்னதாகிய கதிர்காமம் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள மேன்மையுடைத்தாகி, திருப்புகழ் மணியாகிய அருணகிரிநாதரால் சிறப்பித்துப் பாடப் பெற்றதென்பதை முன்னரே விளக்கியுள்ளோம். திருக்கோணமலையும், திருக்கேதீச்சரமும் சிவபெருமான் எழுந்தருளியுள்ள பெருமைபெற்ற இடங்களாகும். திருக்கோணமலையைப்பற்றிய தேவாரம் காழியர்கோன் சம்பந்தனால் பாடப் பெற்றுள்ளது. ஆனால் திருக்கேதீச்சரச் சிவபெருமான் கோயில் ஆளுடைய பிள்ளையாலும் ஆளுடைய நம்பியாலும் பாடப்பெற்ற சீருடையதென்னலாம்.

இத் திருப்பதிக்குச் செல்ல வேண்டுமானால் கொழும்பிலிருந்து செல்லக்கூடும். ஆனால் செல்லும் வழிகள் எளிதாக

அமைந்துள்ளனவல்ல. மாதோட்ட மாநகரின் கடற்கரையின்மீது அமர்ந்துள்ள மங்கையோர் பங்கனர் திருக்கோயில் ஈழச் சைவர்களுக்குச் சிறந்த ஞானச் செல்வமாகத் திகழ்கின்றது. அடர்ந்த பொழில்களும், முத்துச் சிப்பிகளைக் கரையில் ஒதுக்கும் பேரலைகளோடு விளங்கும் அகன்ற கடலும், முக்கனிகளைக் கொள்ளையாக அள்ளிக்கொடுக்கும் மரவகைகளும், பொழிலார் மந்திகள் குந்தி விளையாடும் அரிய காட்சிகளும் ஒருங்கே பெற்றுள்ள திருக்கேதீச்சரம் சிந்தை மகிழ்விக்கும் சீரியதென்க.

இவ்வாலயத்திலுள்ள சிவலிங்கப் பெருமானின் திருநாமம் கேதீச்சுவரர். அம்மையார் திருநாமம் கௌரியம்பிகை. பிருகு முனிவர் இத்திருப்பதியில் வந்து பூசித்த பெருமையுடையதென அத்தலபுராணம் கூறுகின்றது. மேலும் மாலியவான் என்னும் அசுரன் இப்பெருங் கோயிலை வழிபட்டுப் பேறு பெற்றுள்ளான் என்பதும் ஒன்று. மாலியவான் இலங்கேசனை இராவணனின் மந்திரத் தலைவர்களில் ஒருவன் என்பது இராமாயணத்தினின்றும் அறியப்படும் ஓர் செய்தி. திருக்கோணமலைச் சிவபிரான் இராவணனல் பூஜிக்கப்பட்டதுமான சரித்திரத்தையும், திருக்கேதீச்சரச் சிவனர் மாலியவானல் வணங்கப்பட்டதுமாகிய வரலாற்றுப் பகுதிகளையும் சிந்தித்துப் பார்த்து, இப்பெருந் திருப்பதிகளைப்பற்றிய மான்மியங்களை நன்கு தெளிந்து உணர்க. வேணுபுரத்தரசனகிய தமிழ் ஞானசம்பந்தர் இத்திருப்பதியைப்பற்றிக் கூறிய பாடல்களில் சிலவற்றை ஈண்டு உற்று நோக்குவாம்.

" ஈடமாவது இருங்கடற் கரையினில் எழில்திகழ் மாதோட்டம்,
கேடிலாத கேதீச்சரந் தொழுதெழக் கெடுமிடர் வினைதானே "

(சம்பந்தர் தேவாரம்)

ஆருவது நூற்றுண்டில் சம்பந்தப் பெருமான் அருளிய பாடலில் "கேடிலாத கேதீச்சரந் தொழ" என்று குறிக்கப் பட்டுள்ளது. இன்று காரும் இம்மாதோட்ட மாநகரும் திருக்கேதீச்சரக் கோயிலும் யாதும் சிதையாமல் எழிலுடன் விளங்குவது பெரியோர் வாக்கின் பயனே என்று கண்டு கொள்க.

"வாழையம் பொழில் மந்திகள் களிப்புற மருவிய மாதோட்டம்
கேழல் வெண்மருப் பணிந்தநீள் மார்பர்கே தீச்சரம் பிரியாரே"

(சம்பந்தர்—தேவாரம்)

"மாவும் பூகமும் கதலியும் நெடுங்குமா தோட்டநன் னகர்மன்னித்
தேவி தன்னெடுந் திருந்துகே தீச்சரத் திருந்தஎம் பெருமானே"

(சம்பந்தர்—தேவாரம்)

இயற்கை எழிலைச் சிறப்புறப் பாடி இன்பத்தை ஊட்டும் ஆற்றல் ஞானக் குழந்தையாகிய சம்பந்தனிடம் அதிகம் உண்டு. தமிழ் மொழியின் செவ்வியும், திறமும், இனிமை யும் எழிலும் காழியர்கோன் வாக்கில் என்றும் கலந்து நிற் பனவாம். மேலே அப்பெரியோரால் கூறப்பட்டுள்ள வாக்கு கள் மாதோட்ட மாநகரின் சிறப்பை நன்கு புலப்படுத்து கின்றன என்பதோடு, பக்திச் சுவையையும் தட்டி எழுப்பு கின்றது. வண்டுகள் ரீங்காரம் செய்யும் மாமலர்ப் பொழில் களில் மஞ்ஞைகள் தங்கள் கலாபங்களை விரித்து நடமாடும் காட்சிகள் இன்பக் காட்சிகளாகும். பொன்னும் மணியும் மாமுத்துகளும் பொருந்திய மாதோட்ட மாநகரின் கடல் வளம் மறத்தற்குரியது அன்று.

எழில் தவழ் மாதோட்ட மாநகரைப் பாடிய திருஞான சம்பந்தர் தனது 11-வது பாடலில் கேதீச்சரத்தடிகளைப் "பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே" என்று முடிக் குந் திறன் வியப்பினும் வியப்பன்றே!

இனி, தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திகள் தன்னுடைய பாடலில் திருக்கேதீச்சரத் திருவாளனைப் பாடியுள்ள முறையைச் சிறிது நோக்குவோம். சுந்தரர் இராமேச்சுரத்துக்கு எழுந்தருளியபோது, அங்கிருந்து கொண்டே ஈழ நாட்டின் திருப்பதியாகிய கேதீச்சரத்தையும், திருக்கோணமலையையும் வணங்கி, திருப்பதிகம் பாடியதாகத் தெரிகிறது. திருக்கோணமலையைப் பற்றிய சுந்தரரின் தேவாரப் பாடல் அடங்கன் முறையில் காணப்படவில்லையாயினும், திருக்கோணமலையை வணங்கிய முகத்தானே திருக்கேதீச்சரத்தைப் பாடியருளினரென்று கொள்ளக் கிடக்கின்றது.

"நயத்துக்குச் சுந்தரனர்" என்று பெரியோர் அருளியபடி அவரது பதிகத்தில் காணப்படும் பத்துப்பாடல்களும் நயம் சுரந்தே விளங்குகின்றன. ஈண்டு சில அடிகளையே உதாரணமாகக் கொள்வோம். நட்டபாடை என்ற பண்ணில் இப் பதிகம் பாடப்பட்டுள்ளது.

அங்கம் மொழியன்ன ரவரமரர் தொழுதேத்த
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரிற்
பங்கஞ் செய்தபிறை சூடினன் பாலாவியின் கரைமேற்
செங்கண்ணர விசைத்தான் றிருக் கேதீச்சரத்தானே.

(சுந்தரர்—தேவாரம்)

"வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகரிற்" என்று பாடியுள்ள சொற்றொடர் இன்றும் பொருத்தமாயினும், அப்பெரியார் பாடிய காலத்தில் அத் துறைமுகம் சிறந்து விளங்கிய முறையில் இருந்திருக்கலாமென்றும், எனவே அம்முறையில் பாடியருளினர் என்றும் கொள்ளுதலே ஏற்புடைத்தாம்.

பங்கஞ் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேற்
றெங்கம் பொழில் சூழ்ந்ததிருக் கேதீச்சரத் தானே. (பாடல் 5)

மூவரென விருவரென முக்கண்ணுடை மூர்த்தி
மாவின்கனி தூங்கும்பொழில் மாதோட்டநன் னகரிற்
பாவம்வினை யறுப்பார் பயில் பாலாவியின் கரைமேற்
றேவன்னெனை யாள்வான்றிருக் கேதீச்சரத் தானே.

(சுந்தரர் தேவாரம், பாடல் 9)

அநேக பாடல்களில் வையமலிகின்ற கடலென்றும், வானத்துறுமலியுங் கடலென்றும், வங்கம் மலிகின்ற கடலென்றும் சுந்தரர் கூறிப் போதல், அக்காலத்திருந்த அத்துறைமுகத்தின் பெருமையை நன்கு விளக்குகின்றதென்னலாம். மாதோட்ட நன்னகர் ஒவ்வொரு பாடலிலும் சிறப்பாகக் கூறப்படுவது அதிக நயம் பயப்பதாகும். அரிய சிறை வண்டியாழ் செயுங் மாதோட்டமென்றும், மட்டுண்டு வண்டாலும் பொழில் மாதோட்டமென்றும், மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்டமென்றும், சுந்தரர் அருளிச் செய்தல், அந்நகரின் இயற்கை வளத்தையும் செழுமையையும் தெற்றென விளக்குவனவாம். இக் காலங்களில் வாணிகத் தன்மையில் இத்துறைமுகப்பட்டினம் சிறிது பின்வாங்கியுள்ளதெனினும், கடல் வளத்திலும் நில வளத்திலும் யாதும் குறைந்து காட்டவில்லை.

பதிகத்தை முடிக்கும் கடைசிப் பாடலில் சுந்தரமூர்த்திகளின் நயமான வாக்கைத் தெளிந்து உணரலாம். அது வருமாறு :—

கரையார் கடல் சூழ்ந்த கழிமாதோட்டநன் னகருள்
சிறையார் பொழில் வண்டியாழ் செயுங் கேதீச்சரத்தானை
மறையார் புகழூரன் னடித் தொண்டன்னுரை செய்த
குறையாத் தமிழ்ப்பத்துஞ் சொலக் கூடாகொடு வினையே.

(சுந்தரர் தேவாரம், பாடல் 10)

14. சிகிரியாவில் - அஜந்தா ஒளி (Sigiriya)

சிகிரியா என்ற மலைக்கோட்டை நகர் திருக்கோணமலையிலிருந்து 60 மைல் தூரத்திலுள்ளது. கொழும்பிலிருந்து 105 மைலில் உள்ளது என்னலாம். 400 அடி உயரத்தில் அமைந்துள்ள இக் கோட்டையானது பக்கங்களில் உள்ள காட்டுச் செறிவால், செல்லும் பிரயாணிகளுக்கு எளிதிற் புலப்படுவதில்லை. அருகே சென்றவுடன் காணப்படும் செங்குத்தான குன்றே சிகிரியாவாகும். 5-வது நூற்றுண்டிலும் 6-வது நூற்றுண்டிலும் இம் மலையின் மீதுள்ள கோட்டையில் காசியப்பன் என்ற ஓர் அரசனும் மொக்கலானு என்ற ஓர் அரசனும் இருந்து அரசாண்டதாகச் சரித்திர வரலாறுகள் கூறுகின்றன. மேலும், இத்துணை உயரத்தில் மக்கள் நெருங்கமுடியாத செங்குத்தான மலையின் மீது அரசர்கள் இருந்து அரசாண்டு வந்ததற்குரிய காரணங்கள் நன்கு புலப்படுமாறில்லை. எனினும், இம் மலைக்கோட்டை ஏற்பட்ட காரணத்தை ஓர் கதையின் மூலமாக அங்குள்ளோர் தெரிவிக்கின்றனர். அக் கதை வருமாறு:—

பல நூற்றுண்டுகளுக்கு முன் இருந்த ஓர் அரசனுக்கு இரு மனைவியர் இருந்தனர். இருவர்க்கும் இரு குமாரர்களும் ஓர் பெண்ணும் பிறந்து வளர்ந்து வந்தனர். அரசனின் இரு குமாரர்களில் ஒருவன் மிக்க அழகுடையவனுகவும் அடக்கமற்றவனுகவும் இருந்தான். மற்றையோன் அழகற்றவனுகவும் புத்திமானுகவும் இருந்தான். தனது அருமைப் புத்திரியானவள் பேரெழில் பெற்ற நங்கையாக இருந்ததால் அவளிடம் அரசன் மிக்க அன்பு காட்டினன். தக்க பருவம் வந்த காலத்தில் தன் அருமைச் செல்வியைத் தனது படைகளுக்குத் தலைவனுன ஓர் வீரனுக்கு மணமாலை சூட்டினன். அப்பெண்ணின் அத்தையானவள் (கணவனின்

தாய்) அவ்வரச குமாரியைத் துன்புறுத்தி வரவே அரசன் மனவேதனையுற்று அவ்வன்பிலா அத்தையாரை விண்ணுலகுக் கேற்றினான். தனது தாயார் இறந்துபோன தர்மமற்ற முறையை நினைந்து வாடிய தந்திரத் தலைவன் அரசனைப் பழிக்குப் பழிவாங்க முனைந்து நின்றான். அரசனின் புத்திரர்களில் ஒருவனான காசியப்பனே அழகில் மிகுந்தவன். இவன் தன் தகப்பன் அரசாட்சியைத் தான் கைக்கொள்ளும் பொருட்டுத் தளகர்த்தனுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தான். சூழ்ச்சியின் காரணமாக அரசன் கொலையுண்டான். காசியப்பன் தனது சகோதரன் புத்திமானுகையால் தன்னை முறியடித்துத் துரத்திவிடுவான் என்ற எண்ணத்தினால் தன்னைத் தப்புவித்துக்கொள்ளும் பொருட்டு மனிதர் அணுகவொண்ணுத இம்மலையில் ஒளிந்துகொண்டான். பின்னர் கோட்டைச் சுவர்களை நன்கு அமைத்தும், அரசமாளிகைகளை ஏற்படுத்தியும், தளவாடங்களைப் பெருக்கியும், தனது செங்கோலைச் செலுத்தி வந்தான். காசியப்பனின் ஒழுங்கீன வாழ்க்கையையும் கருணையற்ற செயலையும் பொருத மொக்கலான (**Moggallana**) இந்தியாவிற்குச் சென்று அங்குள்ள பேரரசர்களின் உதவியால் பெரும்படை திரட்டி வந்து காசியப்பனை முறியடித்து முடி சூட்டிக்கொண்டான். இந்நிகழ்ச்சியின் காலம் 5-வது நூற்றாண்டு என்று கேட்கப்படுகின்றது. கதையின் உண்மை எவ்வாறாயினும் காசியப்பனும், மொக்கலானவும் சிகிரியாக் கோட்டையின்மீது இருந்து நீதி செலுத்தியது சரித்திர உண்மையாகும். சிங்கா என்பதிலிருந்து சிகிரியா என்ற பெயர் பிறந்துள்ளது. சிங்கா (**Sinha**) என்பது மிருக ராஜனாகிய அரியேற்றைக் குறிக்கும்.

சிகிரியாவில் ஏறிச் செல்லும்பொழுது காணப்படும் படிக்கட்டுகள் விநோதமானவை. கூடம் கூடங்களாக

அமைக்கப்பெற்றுள்ள இடங்களில் படிக்கட்டுகள் நின்று விடுகின்றன. பின்னர் கூடங்களின் மேல் அமைக்கப்பட்டுள்ள மாடங்கள் மலிவாகக் காணப்படுகின்றன. பாம்பு போல் வளைந்து செல்லும் வழிகள் சிறிது அச்சத்தைத் தருகின்றன. சிறிது தூரம் ஏறிச் சென்றவுடன் காணப்படும் பளிங்குபோன்ற மலைச் சுவர்களில் பலவித கவிதைகள் பழைய முறைகளில் வரையப்பட்டுள்ளன. அவ்விலக்கியப் பகுதியில் காணப்படும் பொருள்களை நாம் அறிந்துகொள்வது அசாத்தியமாயினும் அது இலங்கைத் தீவின் புராதன இலக்கியம் என்பதாகக் கொள்ளுதலே பொருத்தமுடைத்து. இச் சாசன முறைபோன்ற இலக்கியப் பாடல்கள் 5-வது நூற்றுண்டைச் சேர்ந்தனவென்பதாம்.

காசியப்பனின் சபா மண்டபமும், சித்திர மண்டபமும் மலையின் மத்தியில் உள்ள சுரங்க வழியில் அமைந்துள்ளன. இவ்வழிகளைத் தாண்டிச் சென்றபின் காணப்படும் செங்குத்தான மலைச் சிகரத்தில் ஏறிச் செல்லும் வழியாக அமைக்கப்பட்டுள்ளது ஓர் ஏணியாகும். சாதாரண மனிதர்கள் சிறிது கவனமில்லாமல் ஏற நேரின் அபாயமே அன்றி வேறில்லை. இரு மருங்கிலும் நல்ல பிடிப்புகளுடன் அவ் ஏணியானது இருந்தபோதிலும் ஏறிச் செல்வதென்பது மிகவும் கடினமே.

மலைச் சுரங்கமான இடத்தில் காணப்படும் அரிய சித்திரங்களே இலங்கை எழிலை மேன்மைப்படுத்திக் காட்டுகின்றன என்னலாம். இங்கு உயிர் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ள 21 பெண்கள் வடிவமே அஜந்தாவின் சித்திரக் கலையின் ஒளியைப் பெற்றிருக்கின்றன என்று துணிந்து கூறலாம். அஜந்தாக் குகைகளின் அருமைச் சித்திரங்களைக் கண்டு நுகர்ந்த கண்கள் சிகிரியாவின் சித்திரக் கலையைக்

காணுங்கால் இத்திருவுருவங்கள் அஜாந்தாவினின்றும் பெயர்த்தெடுக்கப்பட்டனவோ என்று ஐயுறலாம். சித்திரக் கலையின் நுட்ப திட்பத்தைக் காட்டும் இவ்வோவியங்கள் மனித அளவுடையனவாகக் காணப்படுகின்றன. காமஞ் சான்ற கருத்துரைகளை இனியமுறையில் இயம்புதல்போன்று எழுதப்பட்டுள்ளன. வரிசை வரிசையாகக் காணப்படும் பெண்களின் வடிவங்களைப்பற்றிய ஆராய்ச்சிகள் பலதிறத்தன. சிலர் இப் பெண்கள் திருக் கோயிலுக்குச் செல்லும் காட்சியுடையது என்றும், சிலர் காசியப்பனின் காமக் கிழத்தியர் திருவுருவங்களென்றும், இன்னும் சிலர் இப் பெண்கள் தேவ மாதர்களான கன்னிகைகள் நீராடுவதற்குச் செல்லும் காட்சியை உடையது என்றும் கூறு நிற்பர்.

இருவர் இருவராகச் சேர்ந்து நிற்கும் தோற்றமும் தங்கள் மலர்க் கரங்களில் மலர் மாலைகளை ஏந்தி நிற்கின்ற எழிலும், மென்மையான உடைதரித்து உணர்ச்சியோடு நோக்குகின்ற நோக்கும், கண்ணைக் கவருகின்றன. அநேக நூற்றுண்டுகளாயினும் சித்திரங்களின் எழில் சிதைவுறுது நிற்கும் தன்மையைக் காணுங்கால் இவ்விடம் அஜந்தாவின் ஒளிப்பகுதியே என்று கருதுவது இழுக்குடைத்தன்று எனக் கொள்க.

இக் கலாமண்டபத்தைக் கடந்து சிறிது தூரம் செல்வோமானல் ஓர் பலகணி காணப்படுகின்றது. அப் பலகணியில் நின்று நாற்புறமும் கண்களைச் சுழற்றிப் பார்க்கில் அழகிய இடமகன்ற மேடையில் இயற்கை அன்னை தனது எழில்தோன்ற நடமாடும் ஆனந்த நாடகமோ என்று எண்ண நேரிடுகின்றது. இப் பலகணியின் பக்கத்தில் அமைந்துள்ளது மற்றோர் ஏணியாகும். மலையின் உச்சிக்குச் செல்வதற்கு இவ் ஏணியே உறு துணையாவது. வளைந்தும் மறைந்தும்

வான் நோக்கிச் செல்லும் இவ் ஏணியே மிகவும் அபாய கரமானது. பைய ஏறிச் சென்று மேலே பார்ப்போமானால் அரிய காட்சிகள் தோற்றுகின்றன. காசியப்பனின் 3 ஏக்கரா அளவுள்ள மாளிகையும், மாளிகைக்கு நீரளிக்கும் ஓர் மணி வாவியும், நீர் நிலையினின்று செல்லும் கரந்து படைகளும் (Drainage) மனதிற்கு இன்பமளிக்கின்றன. கற்சிங்காத னமும், நீர்த்தொட்டிகளும், காவலர்களின் உறைவிடங்களும், மக்கள் வாழ்விற்கேற்ற சிற்றில்லங்களும், அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

சிகிரியா நகரத்தின் கோட்டைச் சுவர்கள் சுமார் 30 அடி உயரத்தில் கட்டப்பட்டுள்ளன என்னலாம். நகரத்தின் உள்ளே செல்ல வேண்டியவர்கள் பெரிய வாயில்கள் அமைந் துள்ள் பாலத்தின் வழியேதான் செல்லவேண்டும்.

இத்துணைச் சீரும் சிறப்பும் வாய்ந்த சிகிரியா மலைக் கோட்டை நகரைக் காணும் பொருட்டு வரும் பல மேல் நாட்டுக் கலைஞர்களும், கீழ்நாட்டு மதிவாணர்களும் தங்குவ தற்கான ஓர் அழகிய விடுதியை இலங்கை அரசாங்கத்தார் அமைத்திருப்பதோடு சிகிரியா மலைக்கோட்டை நகரில் ஏற் பட்டுள்ள கலைச் செல்வங்களையும் நன்கு பாதுகாத்தும் புதுப் பித்தும் வருகிறார்கள். இச் செயல் பெரிதும் போற்றத் தக்கதாகும். கலைகளைக் கண் காணிப்பதும் போற்றுவதும் நனி நாகரிகத்தின் பண்புடைமையன்றோ !

15. மகிந்தலை, (Mihintale) அப்புத்தலை (Haputale) பண்டாரவேலை (Bandarawela)

மகிந்தலை என்னும் பெயர்பூண்ட திருநகரம் அநுராத புரத்திலிருந்து 6 மைல் தூரத்தில் உள்ளது. இக்காலத்தார் மகிந்தலை என்பதை மீந்தலை என்று மருவி வழங்குகின்றனர். புத்த தேவனின் பொன் மொழிகளை உலக மக்கள் அறிந்து நிர்வாணப் பேற்றை அடையும்படிச் செய்த மங்காப் புகழ்பூண்ட அசோகச் சக்கரவர்த்தியின் அருமைக் குமாரனான மகிந்தன் இங்கு வந்திருந்துதான் தன் சீரிய பணியைச் செய்துள்ளார். சைனா, திபெத், இலங்கை முதலான இடங்களுக்குச் சென்ற புத்த மதப் போதகர்கள் தங்களுக்கு ஏற்பட்ட தொண்டை நன்கு ஆற்றியுள்ளார்கள் என்பது சரித்திர உண்மை. இலங்கைக்கு அனுப்பப்பட்ட மகிந்தன் முதன் முதலில் அக்காலத்து அரச குமாரனான **தேவனும்பியதிசா** (Devanampiyatissa) என்பவரையும், அவரது மனைவியையும் புத்த மதத்தைத் தழுவிக் கொள்ளும்படிச் செய்தார். பின்னர், அரச இல்லத்திலுள்ளவர்களும், மற்றுமுள்ள நகர மக்களும் புத்த தேவனையே தங்கட்கு வழிகாட்டும் வான் பொருளாகக் கொண்டனர்.

மகிந்தன் வதிந்துவந்த மலை நகரமே இக்காலத்தில் மீந்தலை என்று கூறப்படுகின்றது. அழுத்தமான மலைப் பாறையில் சுமார் 2,000 படிக்கட்டுகள் செதுக்கப்பட்டுள்ளன. விசாலித்த மண்டபங்களும் விகாரங்களும் சிற்ப நலங்கனிந்த சித்திரங்களும், மகிந்தனுக்கென்று அளிக்கப்பட்ட ஞாபகச் சின்னங்களாகும். மதத்தூதனாகவந்த அம்மன்ன குமாரனின் மலையின்மேல் ஐந்து தலை நாகம் படமெடுத்ததுபோன்ற சிற்ப வேலைக் காட்சி கண்காட்சியாகவே இருந்து வருகிறது.

மதத்தைப்பற்றிய நல்லுரைகளை வழங்குவதற்கென ஓர் பெரிய மண்டபம் கட்டப்பட்டுள்ளது. அம் மண்டபத்தில் தலைவர் அழகுடன் வீற்றிருக்கும் ஓர் கல்லாசன மேடையும் காணப்படுகின்றது. பல அறைகளில் அழகிய விக்கிரகங்களும் காணப்படுகின்றன. மலையின் மீது காணப்பெறும் இவைகளன்றி தியான அறைகள், ஆதுவசாலைகள், சிங்க வாவிகள் முதலானவைகளும் அமைந்துள்ளன. புத்த சமய சங்க வாழ்க்கைக்கு வேண்டிய பலவித சாதனங்களும் அம் மலையின் மீது அமைந்திருந்தன போலும்!

பௌத்த சன்னியாசிகள் வதிந்து வந்த குகைகளின் பக்கலில் மகிந்த மன்னன் கற்பள்ளி ஒன்று உள்ளது. அதன் பக்கலில் அமைந்துள்ள ஓர் அழகிய கோயிலில் வனப்பு வாய்ந்த சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இச்சிற்பத்தின் காலம் 2-வது நூற்றுண்டு என்னலாம்.

இம் மலையின் சரிவில் அமைந்துள்ள அழகிய இள மரக்கா ஒன்று உண்டு. அதற்குச் செல்லும் வழி வேறு. இக்காவில் காணப்படும் பூக்கள் பல திறத்தன. இளைப்பாறுவதற்கேற்ற கல்லாசனங்களும் காணப்படுகின்றன. மகிந்த மலைக்குச் சென்று வருபவர்கள் இம் மலர்க்காவைக் கண்டு களிக்காமல் வருவதில்லை என்னலாம்.

அப்புத்தளை :—அப்புத்தளை என்ற சிற்றூர் கொழும்பிலிருந்து 110 மைல் தூரத்திலுள்ளது. சுமார் 5,000 அடி உயரத்திலுள்ள மலைக் கணவாய் இடமே அப்புத்தளையாகும். இக் கணவாயினின்றும் காணப்படும் காட்சியே உலக இயற்கைக் காட்சிகளில் ஒன்று என்னலாம். இந் நகரமானது அடுக்குத் தொடராக அமைந்துள்ள மலைக்கூட்டங்களைப் பிரித்துக் காட்டுவதுடன் தன் முன்னர்த் தோன்றும் விரிந்த சமவெளியிடங்களையும் பிரித்துக் காட்டுகின்றது.

கண்ணிற்கு முன்னர் எட்டிய தூரம் காணப்படும் அகன்ற சமவெளியும், கண்ணிற்குப் பின்னே நிற்கும் மலைக்கூட்டங்களின் தோற்றப் பொலிவும் மனதைக் குளிர்விக்கின்றன. சில சமயங்களில் 40 மைல் தூரத்திலுள்ள அம்மன் தோட்டக் கடற்கரைக் காட்சியும், ஐந்து மலைகள் சங்கிலி கோத்தாற் போன்று நிற்கும் கதிர்காமக் காட்சியும் கட்புலனுக்குத் தெரிவதுண்டு.

இக் கணவாயினின்றும் மற்றோர் திக்கில் காணப்படும் சிறிய சிற்றில்களும், தண்டலைகளும், மலையின் வீழ் அருவிகளும், மிக்க இனிய காட்சியை உடையன. அப்புத்தளையிலிருந்து சிறிது தூரத்திலுள்ள தியாலுமா (**Diyaluma falls**) நீர் வீழ்ச்சியானது, இலங்கையில் காணப்படும் எல்லா நீர் வீழ்ச்சிகளிலும் முதன்மையானது. இதன் உயரம் சுமார் 620 அடியாகும். செங்குத்தான கற்பாறையினின்றும் விழக்கூடிய இவ் வீழ்ச்சியைப் பார்த்துக் களிப்பதே பிரயாணிகளுக்கு ஓர் நல்ல வாய்ப்பாக உள்ளது. அப்புத்தளை சிறிய ஊராக இருந்த போதிலும் அங்கு வசித்தற்குரிய சாதனங்கள் பல உள்ளன. தமிழ் மக்கள் மிகுதியாக இங்குக் காணப்படுகின்றனர். பிரயாணிகள் நன்கு தங்குவதற்கேற்ற அரசாங்க விடுதியொன்று அமைந்துள்ளது. பால் மிகுதியாகக் கிடைப்பதுடன் சிற்றுண்டிச்சாலைகளும், நெருங்கிய கடை வீதிகளும் பலவாக உள்ளன. தேயிலைத் தொழிலாளிகள் மிகுந்துள்ள இடங்களில் இது ஒன்று என்று கொள்க.

பண்டாரவேளை :—அப்புத்தளைக்குச் சமீபத்திலுள்ள பண்டாரவேளை என்பது உடல் உறுதிக்கு எற்றதான இடம். இவ்வூர் அப்புத்தளையிலிருந்து 6 மைல் தூரத்திலுள்ளது. இச்சிற்றூரும் சுமார் பூமி மட்டத்திற்கு 4,000 அடி உயரத்திலுள்ளது. நோய்வாய்ப்பட்டு நலமிழிந்த மக்கள் நுவரயேலி

யாவுக்குச் செல்வதுபோலப் பண்டாரவேளைக்கும் வருகிறார்கள். நுவரயேலியாவில் சில சமயங்களில் ஏற்படும் மந்தமான வெப்பக் காற்று இவ்வூரில் காணப்படவில்லை. எந்நாளும் இவ் வட்டாரங்களில் அடிக்கும் காற்று மென்மையானதாகவும் தூய்மையானதாகவும் இருப்பதுடன் சமமான தட்பவெப்ப நிலையுடையதாகவும் அமைந்துள்ளது. மேலும் பொருள் வருவாய் மிகுந்தில்லாதவர்களும் இவ்வூரில் வந்து சிலகாலம் தங்குவதற்குரிய எளிய வாழ்க்கைத் திறனுடையதாகவும் காணப்படுகின்றது. பல்வகைத் தாவரங்களைக் கொண்ட மலைகளினின்றும் வீசும் இளங்காற்றானது மக்களுக்கு ஏற்பட்டுள்ள சில கொடிய நோய்களைத் தணிக்கின்றது என்று கூறுகின்றனர். இவ்விடத்திலும் தமிழன்பர்கள் அதிகமாகக் காணப்படுகின்றனர். தமிழர் சங்கமொன்று ஏற்படுத்தப்பட்டுத் தமிழ்ப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நன்கு படிக்கப்பட்டு வருகின்றன என்றும் கேள்விப்படுகிறோம். அப்புத்தளையைப் போன்றே இவ்வூரில் இருப்பவர்களில் பெரும்பாலோர் தேயிலைத் தோட்டத்தில் தொழிலாற்றுபவர்களாக உள்ளார்கள். சுமார் 30 மைல் தூரச் சுற்றளவிற்கு அவ்வூர் இனிய மலைக் காட்சியைப் பெற்றுள்ளது என்னலாம். இப் பண்டாரவேளையில் நடந்து செல்லக்கூடிய மலை வழிகளும் ஊர்தி வழிகளும் பொருத்தமாக ஏற்பட்டுள்ளன. எனவே, இலங்கையில் அமைந்துள்ள நுவரயேலியா வென்ற மலையரச மங்கைக்கு இப்பண்டாரவேளை என்ற நங்கையை ஓர் இளந் தங்கையாகக் கொள்ளுதல் ஏற்புடைத்தாம்.

16. மாணிக்க நிலம்

கொழும்பு நகரத்திலிருந்து சுமார் 50 மைல் தூரத்தி லுள்ள இரத்தினபுரம் என்பதை நாம் இங்கு மாணிக்க நிலம் என்றே அழைப்போம். கெலானி மலைச்சாரல்களில் அமைந் துள்ள தோட்டங்களிலும், வயலிடங்களிலும் காணப்படும் நவமணிக் கற்களைக் கொண்டுள்ளதான இடமே இரத்தினபுர மாயிற்று. நிலமாமகள் தன் கரத்தினல் வழங்கும் இலங் கைச் செல்வங்கள் ஒருபுறமிருக்க அவ்வெழிலுடை நங்கை தன்னிடம் முயற்சி செய்து வருவோர்களுக்கு வேண்டிய நிதித்திரளைத் தன் மார்பகத்து விளங்கும் மணிப்பெட்டகங் களைத் திறந்து வேண்டியார் வேண்டியாங்கு ஈவதுபோல் தோற்றுகிறது. தமிழ் நூல்களில் மாணிக்க நிலமென்றும் வைடூரிய நிலமென்றும் கூறப்படும் கருத்துரைகளை நாம் படித்துள்ளோம். குறுந்தொகை என்னும் எட்டுத்தொகை நூலுள் காணப்படும் செய்யுளொன்றில் மேற்கு மலைத் தொடர்ப் பக்கங்களில் அழகிய கற்கள் எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. மலையில் கிழங்கு அகழ்வதற்குச் செல்லும் கான வன் கிழங்குக் குழிகளை அகழ்ந்தெடுக்கும் காலத்துத் தூய மணிக் கற்களையும் பெறுவான் என்ற கருத்துத் தோன்றும் கீழ்வரும் அடிகளை நினைந்து இன்புறுவோமாக.

.........குன்றத்துப்
பழங்குழி யகழ்ந்த கானவன் கிழங்கினெடு
கண்ணகல் தூமணி பெறூஉம்'' (குறுந்தொகை)

இக் கருத்தை வலியுறுத்துவதற்காக வந்துள்ள ஓர் அக நானூற்றுச் செய்யுளையும் ஆழ்ந்து நோக்குவோம். அது வருமாறு:—

'' பொருது தொலை யானை வெண்கோடு கொண்டு
நீர் திகழ் சிலம்பின் நன்பொன் அகழ்வோன்
கண்பொரு திமைக்கும் திண்மணி கிளர்ப்ப (அகநானூறு)

மலையினிடத்துக் கிடைக்கும் பொருள்கள் பலவாயினதென்பதும், அதிலும் விலையுயர்ந்த பொன்னும், மாணிக்கமும், மதிக்கத் தக்கனதென்பதும், வெள்ளிடைமலை. இலங்கையில் காணப்படும் மலைச் செல்வங்கள் பலவுள்ளும் நவமணிக் கற்கள் கிடைப்பதுமாகிய நிகழ்ச்சி அந்நாட்டிற்கு மிக்க பெருமையினை விளைவிக்கின்றதன்றோ!

பல நூற்றாண்டுகளாக மணிக்கற்களை எடுக்குந் தொழிலில் இலங்கை நாட்டார் ஈடுபட்டிருந்தனர் என்பது வெளிப்படை. சரித்திர காலங்களில் இலங்கையினின்றும் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டதான நவமணிகள் மிகவும் பெயர் பெற்றனவாம். கடலினின்று கொள்ளும் பருமுத்துக்களன்றி நிலத்தினின்று எடுக்கப்படும் நன்மாணிக்கக் கற்களும், வைடூரியம், கோமேதகம் முதலான கற்களும் இலங்கைச் செல்வத்தைக் கொழித்துக் காட்டுகின்றன என்னலாம். இரத்தினபுரத்தின் மருத நில வயல்களிலும் சதுப்பு நிலங்களிலும் பள்ளத்தாக்கான இடங்களிலும், நான்கு அடி ஆழத்திலிருந்து இருபது அடி ஆழம் வரையிலும் அகழ்ந்து பார்க்க அநேக வகையான கற்கள் அகப்படுகின்றன. "இல்லம்" என்று சொல்லப்படுகின்ற செக்கர் நிலப் பாறையில் மாணிக்கக் கற்கள் மலிவாகக் கிடைக்கின்றன. சுரங்க வேலை செய்வோர் பெருங் குழிகளைத் தோண்டிய பின்னர் பக்கங்களிலுள்ள நிலப் பகுதியானது பெயர்ந்து விழாவண்ணம் அழுத்தமான கம்புகளை ஊன்றி வைக்கின்றனர். தோண்டி எடுக்கப்பட்ட மண்ணை முக்கோண வடிவமுள்ள கூடைகளிலிட்டுக் கழுவுகின்றனர். மண் நீங்கியபின் சிறிய கற்களே அக்கூடையில் தங்குகின்றன. தங்கியுள்ளவைகளில் சாதாரண கற்களும் சிவந்த கற்களும் கலந்துள்ளன. சிவந்த நிறமுள்ள கற்களை எடுத்துப் பார்த்துச் சோதித்த பின்னர் மதிப்புக்குத் தகுந்த முறையில் பட்டை போடுகின்றனர்.

மாணிக்கக் கற்கள் எடுக்கும் முறையை ஈண்டு இங்ஙனம் எளிதாகக் கொள்ளுதல் ஒருவாறு வியப்புடைத்தாயினும், அதுவே உண்மையாகும். மைசூர் சமஸ்தானத்தில் கோலார் தங்கச் சுரங்கங்களில் வேலை செய்துப் பொன் எடுக்கும் முறையைப்போன்று இத்தொழில் அவ்வளவு விரிவாகவும் செலவுள்ளதாகவும் தோற்றவில்லை. நாடா வளத்தையுடைய தல்லவோ நாடாகும்?

இரத்தினபுரமாகிய மாணிக்க நிலத்திற் காணப்படும் கற்களில் மிக்க விலையுள்ளதானவை சிலவே இருக்கின்றதென்று அங்குள்ளார் அறிவிக்கின்றனர். எனினும், இலங்கைத் தாயின் வயிற்றினுள் கிடக்கும் நிதிக்குவியலை யாவர் மதிக்க வல்லார்? இலங்கை அரசாங்கத்தார் நவ மணிகள் எடுக்கும் தொழில் முறையில் இக்காலத்தில் அதிகம் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. தகுந்த பணியாளர்களை நியமித்தும், மேற்பார்வையிட்டும் அங்நிலப் பகுதியாகிய இரத்தினபுரத்தைக் காத்தும் வருகின்றனர். அங்குச் சென்று வருவதென்பது அரசாங்கத்தாரின் உத்தரவன்னியில் இயலாததொன்றும்.

நிற்க, இரத்தினபுரியானது தோட்ட வேலைத் தொழிலிலும் விருத்தியடைந்துள்ளது. தேயிலைப் பயிர்த் தொழிலும் ரப்பர் எடுக்கும் தொழிலும் நாளுக்கு நாள் பெருகி வருகின்றதென்னலாம். அங்குச் செல்லும் பிரயாணிகளுக்குத் தங்கும் வசதிகள் நன்கு அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்க விடுதியும் ஒன்று உளது. இயற்கை எழிலோடு தொழில் மேம்பாடும் ஒருங்குகூடிய இம்மாணிக்க நகரானது செல்லுகின்றவர்களுக்கு இன்பத்தையும், மகிழ்ச்சியையும் ஊட்டுகின்றதென்னலாம்.

17. காலே துறைமுகம் (Galle)

காலே துறைமுகம் கொழும்பிலிருந்து 72 மைல் அளவில் உள்ளது. கொழும்பு தலைநகராக ஏற்படுவதற்குமுன் காலே துறைமுகமே அநேக நூற்றாண்டுகளாக முதன்மை பெற்ற கப்பற் றுறைமுகமாக விளங்கியது என்னலாம். இயற்கையாக அமைந்த பூம்புகார் இதுவேயாகும். சாலமன் என்ற அரசன் தனது கப்பல்களை இத்துறைமுகத்துக்கு அனுப்பியதாகவும், அழகிய முத்துக்களும், மணிகளும், தோகைகளும், தந்தங்களும் அவன் கலங்களில் ஏற்றி அனுப்பப்பட்டதாகவும், விவிலிய நூல் சாற்றுகின்றது. சாலமனின் இராசமாதேவியான ஷீபா அரசியின் அணிகலன்களுக்கு இலங்கையினின்றும் கொண்டுவரப்பட்ட நவமணிகளே மிக்க பயன்பட்டனவாம் என்பர். முதன்மைபெற்று விளங்கிய இத்துறைமுகப் பட்டினத்திற்குப் பழைய காலங்களில் வந்துபோன பல நாட்டவர்களில் டச்சுக்காரர்களே இவ்விடத்தில் அதிக காலம் தங்கியிருந்தார்களென்றும், நகரமும், துறைமுகப்பட்டினமும் அவர்களால் சீர்பெறச் செய்யப்பட்டதென்றும் அறிகின்றோம். அங்கு ஆவண வீதிகள் அணிவகுத்த முறையில் அமைந்துள்ளன. இல்லங்கள் பெரியனவாயும், உயர்வாயும் கட்டப்பட்டுள்ளன. அழகிய மாடங்களோடு காணப்படும் இல்லங்களின் முன் அணியில் நிழல் கனிந்த மண்டபங்கள் நின்று காட்சியளிக்கின்றன. குளிர்ச்சியை உடையனவாயும், இருப்பதற்கு இனியவையாயும் அமைக்கப்பட்டுள்ள இம்மண்டபங்களோடு விளங்கும் தெருக்கள் பார்ப்பதற்கு மிக்க இனிமையானவை என்னலாம்.

கடற்றுறைக் காட்சியின் தன்மையைக் கூறுமிடத்து முதன்மையாக நிற்கும் அழகுடைய பொருளானது நீலக்

கடல் நீராகும். கரையின் கண்ணே நிற்கும் கற்பாறை களில் வெள்ளிய பேரலைகள் விசையுடன் மோதியெழுகின்ற தோற்றம் இதயத்தைக் களிப்புறச் செய்கின்றது. மலைப் பாறைகளின் பசுமையான தோற்றத்துடன் வெண் திறை கள் விளையாடி ஓடும் நிகழ்ச்சி வியப்பைத் தருகின்றதென்ன லாம்.

எகிப்து, அரேபியா, பாரசீகம், இந்தியா, ஜாவா, சைனு முதலான நாடுகளுடன் அநேக நூற்ருண்டு களுக்குமுன் வாணிகம் செய்துவந்த காலே துறைமுகம் ஆங்கிலேயர் ஆட்சிக்குப்பின் தனது நற்பெருமையை இழந்து நிற்கின்றது என்னலாம். இயல்பாக அமைந்துள்ள புகாராதலின் இதன் செழுமையையும் சிறப்பையும் அக் காலத்தார் நன்கு மதித்திருந்தனர். அரசியல் மாறுதல்களால் ஏற்பட்ட காரணத்தால் கொழும்புத் துறைமுகம் பிற்காலத் தில் முதன்மையான இடத்தைப் பெற்றது போலும். ஆயி னும் இத்துறைமுகம் இயற்கையாக அமைந்துள்ள தொன் றன்று என்றே கொள்ளல் வேண்டும்.

காலே துறைமுகத்திற் காணப்படும் காட்சிகளில் நீலக் கடல் நீர் முதன்மையானது என்று முன்னர்க் கூறினேம். இரண்டாவதாகக் காணப்படுவது போர்ச்சுகல் நாட்டாரால் கட்டப்பட்டுள்ள ஓர் பெரிய சுவரும், மூன்று தளவாடங்களு மாம். அழுத்தமாகக் கட்டப்பட்டுள்ள கோட்டையின் சீர்திருத்த வேலைகளில் பின்னர் வந்துள்ளவர்களான டச்சுக் காரர்கள் அதிகம் ஈடுபட்டதாகத் தெரிகின்றது. டச்சுக்காரர் களால் கட்டப்பட்டுள்ள கோட்டையின் பெருமையும், மதிற் சுவர்களின் திட்பமும் அந்நகரத்திற்குச் சிறப்பைத் தரு கின்றன.

நகரமானது அநேக முறையில் நவீன வாழ்க்கையைப் பெற்றிருந்தபோதிலும், அதன் இயல்பானத்தோற்றம் மிகப் பழமையைப் புலப்படுத்துவதுபோலவே அமைந்துள்ளது. நகரத்தின் முன்வாயிலில் கல்லாற் செதுக்கப்பட்டுள்ள ஓர் கேடயம் வைக்கப்பட்டிருக்கின்றது. அதில் (V. O. C.) என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அதன் பொருள் ஐக்கியக் கிழக்கு இந்தியக் கம்பெனி என்பதாம். அவ்வெழுத்துக்கள் பொறிக்கப்பட்ட காலம் 1669-ஆம் ஆண்டு என்பதாம். அந்நகரத்தில் மிகவும் நேர்த்தியாகக் கட்டப்பட்ட ஏசுநாதர் கோயில் ஒன்று உள்ளது. அதற்கென உபயோகித்திருக்கும் கற்கள் சலவைக் கற்களேயாம். மேலும் டச்சுக்காரர்களால் ஏற்படுத்தப்பட்ட ஓர் கால்வாய் அந்நகரத்தின் இடையே சென்று கடலோடு கலக்கின்றது. இந்நகரக் கடற்கரையில் நீராடுதல் மிக்க இன்பந்தரும்.

இந்நகரை விட்டுக் கொழும்புக்குச் செல்லவேண்டிய சாலையின் தூரம் 72 மைல் என்னலாம். கடற்கரையின் சமீபத்திற் செல்லும் இப்பெரிய சாலையின் இருமருங்கிலும் கண்ணிற்கு இனிய காட்சிகள் அமைந்துள்ளன. நாம், அடர்ந்த தென்னை மரச் சோலைகளின் மத்தியிற் செல்ல நேரிடும் பொழுது, இடப்புறம் கனைத்தெழுங் கடலையும், வலப்புறம் வளைந்து வளைந்து செல்லும் இருப்புப் பாதையையும் வண்டித் தொடர்களையும், தென்னை மரங்களில் காணப்படும் மரமேறிகள் மரத்திற்கு மரம் கயிறு பாலம் அமைத்துக் கடந்து செல்லும் அரிய காட்சிகளையும் அநேக மைல் தூரம் கண்டு களித்தே செல்லலாம். ஆங்காங்குக் காணப்படும் சிற்றூர்கள் ஜன நெருக்கமுள்ள இடங்களாகத் திகழ்கின்றன. கொழும்பு தலைநகரத்துக்கு அருகாமையிலிருந்தே சாலையின் இரு புறங்களிலும் அமைந்துள்ள அழகிய இல்லங்கள் இரவில் கார்த்திகைத் தீபங்கள் கண்ணைக் கவருமாபோல் கவருகின்

றன. தலைநகரத்தை நாம் நெருங்குவோமானால் பரபரப்பான மக்கட் குழுவினையும், விரைவாகச் செல்லும் ஊர்திகளையும், பல வகையான முறையில் உடைதரித்துள்ள மாந்தர்களையும் மிகுதியாகக் காணலாம். கொழும்பு தலைநகரின் உள்ளே புகுந்தபின் அறியவேண்டியனவும், காணவேண்டியனவுமான பொருள்கள் பல திறத்தன.

---

18. கொழும்பு தலைநகர் (Colombo)

இலங்கைத் தீவின் வாழ்க்கை அமைப்பில் கொழும்பு நகரமே நடு நரம்பாகும். அரசியற்றுறையிலும், வாணிகத் துறையிலும், பிறநாட்டுத் தொடர்பிலும், சமூக வாழ்விலும் நடுநாயகமாக விளங்கக்கூடியது இம் மாநகரமேயாம். நகரத்தின் சில பாகங்கள் கீழ்நாட்டு முறையிலும், சில பாகங்கள் மேல்நாட்டுமுறையிலும் அமைக்கப்பட்டுள்ளன. பொதுவாக நோக்குமிடத்து இந்நகர் வாழ்வின் இயல்புகள் மேல்நாட்டு முறைகளையே பெரிதும் கைப்பற்றியுள்ளதென்னலாம். இந் நகரத்தைப் புதிய முறையில் கட்டியமைத்தவர் லண்டன் மாநகரத்தைக் கட்டிக் காண்பித்த சர் பேட்ரிக் அபர்கிராம்பி என்ற பெரியாராவர். இம் மாநகருக்குச் சிறிய லண்டன் என்ற பெயர் வழங்கப்படுவதும் அறியத் தக்கதே. இங்கு அழகிய நீண்ட தெருக்கள் விரிந்தும் தூய்மையுடனும் வரிசையான மலர் மரங்களை அணிவிளங்கக் கொண்டும் செல்லும் காட்சி போற்றத் தக்கதாம்.

துறைமுகத்தின் சிறப்பை அங்கு வந்து தங்கி நிற்கும் பல நாட்டாரின் மரக்கலங்களின் கொடிகளே நன்கு புலப்படுத்துகின்றன. உலகத்திலுள்ள பெயர்போன

துறைமுகப்பட்டினங்களில் கொழும்புத் துறைமுகப்பட்டினமும் ஒன்று என்பது யாரும் அறிந்ததொன்றும். லக்ஷக் கணக்கான பொருளைச் செலவழித்துக் கட்டிய இத்துறைமுகம் பார்க்கத் தக்கதேயாம். பிரயாணிகள் அதிக இன்னலுக்காளாகாதபடி கலங்களில் ஏறிச் செல்லுவதற்கும் இறங்குவதற்கும் இன்றியமையாத சாதனங்களை இலங்கை அரசாங்கம் அளித்துள்ளது. நாள்தோறும் வரும் கப்பல்களினின்று எடுக்கப்படும் அரிய பொருள்களை எடுப்பதும், பிறநாடுகளுக்குச் செல்லும் கப்பல்களில் இலங்கைத் தீவின் பல்வகையான பொருள்களை ஏற்றிச் செலுத்துவதுமான தொழிலில் ஆயிரக்கணக்கான மக்கள் ஈடுபட்டிருக்கின்றனர். தகுந்த கூலியும் பெறுகின்றனர். துறைமுகத்திலேயே பிரயாணிகளின் நன்மைக்காகச் சில காரியாலயங்கள் நிறுவப்பட்டுள்ளன. புதிதாய் அங்கு வருகிறவர்களுக்குத் தேவையான செய்திகளைச் சொல்லிக் காட்டும் நிலையம் ஒன்றும் உள்ளது.

வான மார்க்கமாய் வருகின்ற பிரயாணிகள் இறங்கும் இடங்கள் இரண்டு. ஒன்று இரத்தினமாலா என்ற இடம். இது கொழும்பிலிருந்து 10 மைல் தூரத்திலுள்ளது. மற்றொன்று காடுநாயகா. இது 20 மைல் தூரத்திலுள்ளது. வெகு தூரத்திலிருந்து இலங்கைக்கு வரும் பிரயாணிகள் ஆகாய மார்க்கமாகவே வருவது இக்காலங்களில் இயல்பாதலின் இவ்விரு இடங்களிலும் அரசாங்க விடுதிகளும், சாதனங்களும் அமைந்துள்ளன. கொழும்பு நகரின் சரிதத்தைச் சிறிது ஈண்டு தெரிந்துகொள்வது இன்றியமையாததாதலின் அதனைப்பற்றிச் சிறிது கூறுவோம். 16-ஆம் நூற்றாண்டிலிருந்து இந்நகரம் போர்ச்சுகீசியர் கையில் இருந்து வந்ததென்றும், பின்னர் டச்சுக்காரர்கள் ஆளத் தலைப்பட்டனர் என்றும், பின்னர் 18-ஆம் நூற்றாண்டி

லிருந்து ஆங்கிலேயர் அரசு செலுத்தினரென்றும் அறியக் கிடக்கின்றது. கொழும்பு சுங்கச் சாவடியைக் கடந்து சென்றபின் கொழும்புக் கோட்டை என்ற பெயர் வழங்கப்படுகிறது. மேல் நாட்டாரால் அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னிருந்து ஆளப்பட்டக் கொழும்புக் கோட்டையானது தற்பொழுது காணப்படவில்லை. இதன் காரணம் சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் இக்கோட்டைச் சுவர்கள் அழிக்கப்பட்டதென்றும் அதன் பொருள்களை துறைமுகத்திற்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் அக்கால அரசாங்கத்தார் உபயோகப்படுத்தியுள்ளார்களென்றும் கேள்விப்படுகிறோம்.

இனி, கொழும்பு நகரிலுள்ள சில முக்கியமான இடங்களைப்பற்றித் தெரிந்துகொள்வோமாக. துறைமுகத்திலிருந்து சிறிது தொலைவில் **அரசி இல்லம்** (Queen's House) என்ற இடத்தில் தற்காலத்து கவர்னர் ஜெனரல்கள் வசித்து வருகின்றனர். இதற்கு அருகாமையிலுள்ள தோட்டத்தில் டச்சுக்காரர்களின் நடு கற்கள் (Tomb stones) காணப்படுகின்றன. இன்னும் சிறிது தூரம் சென்றபின் காணப்படும் அழகிய பெரிய மாளிகைக் கட்டிடங்களில், பாராளுமன்றமும், செனட் சபைகளும் செயலாற்றி வருகின்றன. இவைகளுக்கு அணித்தான இடங்களில் கலங்கரை விளக்கமும், மணிக்கூண்டும், அஞ்சல் பொது நிலையமும் அமைந்துள்ளன.

இளவரசர் வீதி (Prince Street) என்று அழைக்கப்படும் ஆவண வீதியே கொழும்பில் மிகவும் பரபரப்பான வாணிகம் நடைபெறும் இடமாகும். மக்கள் எளிதில் நடந்துபோக முடியாதபடிச் செல்லும் மோட்டார் வண்டிகளும், டிராம் வண்டிகளும் கணக்கில் அடங்காதன.

நெருக்கமாகச் செல்லும் மக்கள் குழுவினரும் அளவில் அடங்கார். பல வகையான வாணிபம் அவ் வீதியில் நடந்து வருகின்றது. மற்ருேரிடத்தில் இலங்கைப் பொருள் களை ஒருங்கே சேமித்து வைத்திருக்கும் காட்சியைக் காணலாம். இலங்கை அரசாங்கத்தார் இந்நிலயத்தை ஏற் படுத்தியுள்ளார்கள். இங்கு இலங்கை மக்களின் தொழிற் றிறமையையும், பொருள்களில் வேலே செய்யும் கை வளத் தையும் நன்கு கண்டு கொள்ளலாம். பேட்டை என்ற பெயர்கொண்ட இடம் ஓர் பெரிய வணிக மன்றமேயாகும். கிழக்கு நாட்டார்கள் விரும்பும் பொருள்களே அங்கு மிகுதியாகக் காணப்படுகின்றன. மிகுதியான தொகையில் தமிழ் மக்களே அங்கு வியாபாரிகளாக வீற்றிருக்கின்றனர். நல்ல முறையில் வியாபாரம் செய்கின்றனர் என்றே துணிந்து கூறலாம். பிறர் பொருளேத் தன் பொருளா கப் போற்றிக் குறைந்த லாபத்தில் நல்ல சாமான்களே நயமாகப் பேசி விற்கின்றனர். மனிதனுக்கு இப்பேட்டை யில் கிடைக்காத பொருள் இல்லேயென்றே சொல்லலாம்.

அடுத்தபடியாக முத்வால் என்ற இடத்திற் காணப் பெறும் கடற்கரைத் தோற்றம் மிக்க எழில் வாய்ந்தது. மாலேக் காலங்களில் பரதவர் தங்களுடைய சிறு படகுக ளுடன் கரை நோக்கி வருகின்றனர். கடற் பண்ணேயில் அள்ளிக்கொண்டு வந்த பல வண்ண மீன் களேக் காட்டிக் களிப்பிக்கின்றனர். பாய்க்கட்டிக் கப்பல் களின் சிறகுகள் காற்றினுல் அலேக்கப்படுகின்ற தோற் றம் பல பட்சிகள் கூடிப் பறந்து வருவது போன்று காணப்படுகின்றது. மென்மையான மணல் மேடுகளில் இளஞ்சிருர்கள் மிக்கக் களிப்புடன் விளேயாடி மகிழ்கின் றனர். வயது முதிர்ந்த பரதவர் வலேகளேச் செப்பனிட்டுக் கொண்டே உரையாடி உற்சாகமடைகின்றனர்.

கொழும்பு நகரின் நடுவில் நகரமண்டபமும், பொருட் காட்சிச் சாலையும், விக்டோரியா நந்தவனமும், குதிரைப் பந்தய மேடையும் அணி செய்கின்றன. நகர மண்டபத்தில் பெரியோர்கள் நிகழ்த்தும் சொற்பொழிவுகளும் நல்ல வர வேற்புகளும் நடைபெறுகின்றன. பொருட்காட்சிச்சாலையில் இலங்கைத்தீவின் பட்சி வகைகளும், உலோகப் பொருள் களும், மணிக்கற்களும், விலையுயர்ந்த அணிவகைகளும் அழகிய சித்திரங்களும் சிற்பப்பொருள்களும் இனிய காட்சி அளிக்கின்றன. இப்பொருட் காட்சிச்சாலையைக் கூர்ந்து கவனித்துவர வேண்டுமானல் அநேகமணி நேரம் அங்கு இருத்தல் வேண்டும்.

இந்நகரில் அமைந்துள்ள மிருகக்காட்சிச்சாலை, மிகவும் பெயர் பெற்றதாகும். அரசாங்கத்தார் இங்குள்ள மிருகங் களை நன்கு பேணிவருவதோடு காவல் முறையையும் கண் காணித்து வருகின்றனர். குறிஞ்சியும் முல்லையும் குறை யாமல் செழித்து ஓங்கும் இலங்கைத்தீவின் அரிய மிருகங் களை இங்குக் கண்டு மகிழ்ச்சியுறலாம். யானை, துருவக்கரடி, கங்காரு, குரங்கு, காட்டு மனிதன், மான், மாடு, வரிக் குதிரை, சிங்கம், சிறுத்தை முதலான பிராணிகளில் அழ குள்ளதாயும், ஆற்றல் மிகுந்ததாயும் அமைந்துள்ள உயிர் வருக்கங்களே இங்குக் காணப்படுகின்றன. மற்றுமுள்ள நடப்பன, பறப்பன, நீர்வாழ்வனவாகிய பொருள்களுள் ளும் மேன்மையுடைத்தான நல்ல பொருள்களையே இவ்வர சாங்கத்தார் அன்புகாட்டி ஆதரிக்கின்றனர். முக்கியமான இந்நகர்க் காட்சிகளில் ஒன்றான மிருகசாலைக்காட்சி பார்ப் போர்க்கு அதிக வியப்பையும், ஆர்வத்தையும் ஊட்டுகின்ற தென்னலாம்.

லவேனியா:—(Lavinia) கொழும்பு நகரின் அழகிய விளையாட்டிடம் லவேனியா என்பது. சுமார் 7 மைல்

தூரத்திலுள்ள கடற்கரைச் சிற்றூராகும் இது. நகரத்தில் வாழும் செல்வந்தர்களும் மேல் நாட்டார்களும் இவ்விடத்திற்குக் கடலாடுதற் பொருட்டு வருகின்றனர். இரண்டு மைல் தூரம்வரை அழகாக அமைந்துள்ள இக்கடற்கரையில் தென்னந்தோப்புகள் அடர்ந்து நின்று தண்ணிழல் தருகின்றன. கடலில் வாழும் அபாயகரமான மீன்கள் இங்கு வெகு தூரம் வரையிலும் காணப்படாமையாலும், அலைகள் அமைந்ததன்மையில் அடிக்கின்றமையாலும் மக்கள் இவ்விடத்தை அதிகமாகவே நேசிக்கின்றனர்.

கெலேனியா :—கெலேனியா என்பது புத்ததேவனின் கோயிலாகும். அது நகரத்திற்கு வடக்கேயுள்ளது. புத்ததேவன் இங்குப் போந்ததாகக் கூறப்படுவதால், அவ்விடம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகப் போற்றப்பட்டு வருகிறது. கோயில் கட்டப்பட்டுள்ள முறையானது நெற்போர் குவித்தாற்போன்ற வடிவத்தைக் கொண்டுள்ளது. அங்கு நவமணிகள் பதிந்துள்ள ஓர் அமளியில் புத்ததேவன் அமர்ந்திருந்ததாகக் கூறப்படுகின்றது. அதனையே இக்காலப் பௌத்தர்கள் வணங்கி வருகிறார்கள். வைகாசிப் பௌர்ணமி தினத்தன்று இக்கோயிலுக்குத் தரிசனம் செய்ய வருகின்றவர்களின் திரள் எண்ணிக்கையில் அடங்கா என்னலாம்.

ஜிந்துப்பிட்டி :—ஜிந்துப்பிட்டி என்ற இடத்தில் தக்ஷிணத்தாரால் நிறுமிக்கப்பட்ட சுப்பிரமணியர் கோயில் ஒன்று உள்ளது. அங்கு நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெறுவதுடன் ஞாயிற்றுக்கிழமை மாலைதோறும் கூட்டுப்பிரார்த்தனையும் கல்விமான்களின் உதவியால் அரிய சொற்பொழிவுகளும் இன்றும் நடைபெற்று வருகின்றன. இதுவுமன்னியில் ஓர் அழகிய சிவன்கோயிலும் கொழும்பு நகரத்தை அணி செய்கின்றது. பல மக்கள் இக்கோயிலுக்குச் சென்று

நன்முறையில் வழிபாடியற்றி வருகின்றனர். இது நம்ம ஞேர்க்கு மிக்க மகிழ்ச்சியைத் தருவதாகும்.

---

19. இயற்கை எழிலும் தோட்டத் தொழிலும்

இலங்கை அரசியின் எழிலுடைத் தோற்றத்தைப் பல் வேறிடங்களிற் காண்பது இயல்பாயினும், அவ்வரசியின் பேரெழிற்றிறம் கனிந்து காணப்படும் இடங்கள் மலைச்சாரல்

[*Photo : M. D. Gunasena & Co., Ltd.*

படம் 6. ஓர் வீதித் தோற்றம்—ராணி வீதி, கொழும்பு

களிலும், வண்டார்சோலைகளிலும், தண்பணைமருதத்திலும், மலிகடல் தோட்டங்களிலும், என்று கொள்ளுதலே ஏற்

புடைத்தாம். இலங்கைத்தீவு, காட்சி மிகுந்த இடமாக அமைந்திருப்பினும், அத்தீவின் மத்தியபாகமே மிக்கச்செல்வங்கொழிக்கும் சீரிய மலைத்தொடர்புகளை உடையது. மத்தியபாகம் அதிகம் உயர்ந்தும் பக்கநிலப்பகுதிகள் சிறிது தாழ்ந்தும் சரிந்தும் இருக்கின்றமையான் தோட்டத்தொழில் மிகுந்து விளங்கும் இடங்கள் இலங்கையின் மத்தியமாகாணப் பிரதேசங்களாகும். இவ்விடத்து நாம் இந்தியநாட்டின் எழில் தோற்றத்தைச் சிறிது சிந்தித்துப் பார்க்குங்கால் மேற்குக்கரையோரங்களும், கிழக்குக்கரையோரங்களும், அஸ்ஸாம் மலைச்சாரற் பக்கங்களும் அழகு மிக்குடையனவாகக் காணப்படினும் மத்திய இந்தியாவில் காணப்பெறும் இயற்கைக் காட்சிகளுக்கு ஈடாமாறு இல்லையென்றே சொல்லலாம். அதுபோலவே அமைந்துள்ள இலங்கைத்தீவின் மத்திய பிரதேசங்களே இலங்கைச் செல்வத்தை ஈட்டிப் பெருக்குகின்றன. இந்நாட்டின் செல்வம் ஓங்குவதற்குக் காரணம் இந்நாட்டின் செழுமையான நிலங்களும், தள்ளா விளைச்சலுமாம். இலங்கைநாட்டின் செல்வம் தேயிலை, ரப்பர், தென்னை, கமுகு முதலான பொருள்களின் வழியாகத்தான் வளர்க்கப்படுகின்றது. வாணிகத்துறையிலேதான் அவ்வளம் வளருமேயன்றி வேறில்லை. முதன்மையான பொருளாகிய தேயிலை அநேகக் கோடிக்கணக்கான பொருளளவில் உற்பத்தி செய்யப்பெற்று உள்நாட்டில் உபயோகப்படுவதன்றி வெளிநாடுகளுக்கும் கலங்களில் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இலங்கைத் தேயிலையின் மணமும் குணமும் மிகவும் புகழ்தற்குரியன. இரண்டாவதாகக் கருதப்படும் தென்னை அந்நாட்டின் மழை வளத்தால் அதிக முயற்சியின்றி ஓங்கி வளர்கின்றது. பருமனும் இனிய சுவையும் கலந்துள்ள தேங்காய்களை அந்நாட்டார் தங்கள் உணவுப் பொருள்களில் வாட்டமின்றி வழங்குகின்றனர்.

பெரும்பாலும் இத்தேங்காய்களை இந்திய நாட்டாரே ஏற்றுக் கொள்கின்றனர். மூன்றாவதாகக் கருதப்படும் செல்வக் கொடைப்பொருள் கமுகாகும். இலங்கைத்தீவில் தம்பலம் தின்னும் ஒருவன் சாதாரணமாகக் கிராமங்களிலும், நகரங் களிலும் உபயோகிப்பது பச்சைப் பாக்கேயாம். தென்னிந் திய நாட்டார் இக்கமுகின் மேன்மையை நன்கு உணர்ந்தோ ராதலின் ஆண்டுதோறும் இலங்கையிலிருந்து உலர்த்திய கமுகை ஏராளமாக வாங்கிக் கொள்கின்றனர். எனவே, இலங்கைச் செல்வமானது பெரும்பாலும் தோட்டங்களிலே குடிகொண்டுள்ளது என்பது பெற்றாம்.

செல்வங்கொழிக்கும் அழகிய தோட்டங்கள் நூற்றுக் கணக்கான ஏக்கரா நிலமாக அமைந்துள்ளன. அப்புத்தளை, பண்டாரவேளை, வெள்ளவாயா, நுவரஎலியா, தொப்பித் தோட்டம் முதலான இடங்களில் காணப்பெறும் தேயிலைச் சாலைகள் ஆயிரக்கணக்கான டன் எடையுள்ள தேயிலையை மாதந்தோறும் தயார் செய்யக் கூடியவையாகத் தெரிகின் றன. இலங்கைத்தீவில் பெரும்பாலும் மேலைநாட்டார்களே இவ்வகையானத் தோட்டங்களுக்கு முற்காலங்களில் உரிமை யாளர்களாக இருந்து வந்தார்கள். தற்பொழுது சிலரே இருந்து வருகின்றனர். சுதந்திரமடைந்த இலங்கை மக்கள் இப்பெரிய தாவரச் சுரங்கங்களை விலைகொடுத்து வாங்கித் தங்கள் உரிமைப் பொருளாகக்கொண்டு வாழ்கிறார்கள். நிற்க, இத்தேயிலைத் தோட்டங்களுக்கும் ரப்பர் தோட்டங் களுக்கும் அணித்தான ஆலைகளில் வேலை செய்யும் மக்கள் பெரும்பாலும் இந்தியர்களே. தோட்டங்களில் அன்றாடம் வேலை செய்துத் தொழில் வளர்ச்சியைப் பெருக்குகின்றவர் கள் இந்தியர்களேயாவர். இலங்கைத் தீவின் ஜனத்தொகை யாகிய 70 லட்சம் மக்களுள்ளே சுமார் ஆறில் ஒருபங்கு இருக்கக்கூடியவர் இந்திய மக்களேயாவர். இத்தொகை

யினரோடு அநேக நூற்றாண்டுகளாக அங்குக்குடியேறி வாழ்கின்றவர்களும், பல தலைமுறைகளாக வாணிபத் துறையிலும், தோட்டத் தொழிலிலும், அரசாங்கத் தொழிலிலும் ஈடுபட்டவர்களும் பல லட்சம் உண்டு. ஈண்டு கவனிக்க வேண்டிய குறிப்பு, தோட்டத்தில் வேலை செய்து வாழும் மக்களின் வாழ்க்கைத் திறனேயாகும்.

தோட்டக்காட்டில் வாழ்ந்து வரும் பெரும்பாலான மக்கள் தென்னிந்திய நாட்டவரே எனக்கொள்ளுங்கால் அவர்களில் பெரும்பாலார் தமிழ் மக்களே என்று கொள்ளுதலே ஏற்புடைத்தாம். ஆண்மக்களும், பெண்மக்களும், வாலிபர்களும் வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை நீங்கலான மற்றை நாட்களில் தேயிலைத் தோட்டத்திலும், ரப்பர் தோட்டத்திலும் பணியாற்றி வருகின்றனர். காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணி வரையிலும் தோட்டத்தில் இருப்பது உண்டாம். ஞாயிற்றுக்கிழமையில் பணியாற்ற விரும்புவோர் உளராயின் அன்றைய தினசரிச் சம்பள விகிதம் அவர்களுக்கு மிகுதியாகக் கொடுக்கப்படுமாம். சாதாரணமாக ஆண்மகனுக்கு அளிக்கப்படும் தினசரிக்கூலி ரூ. 2—8—0. பெண்ணிற்குக் கிடைக்கும் கூலி ரூ. 2—0—0. வாலிபர்களுக்குக் கிடைக்கும் ஊதியம் ரூ. 1—8—0. தேயிலைத் தோட்டத்தில் பெண்கள் பணியாற்றும் முறை கண்டு அறியத்தக்கது. முக்கோண வடிவமான கூடைகளைத் தங்கள் முதுகிற்றூங்கிய வண்ணம், தலைமூடித் துகிலை நீக்காமலேயே தேயிலைச் செடியில் விளைந்துள்ள சிறிய இலைகளைப் பறித்துப் பறித்துப் பின்புறம் வீசுகின்றனர். தொடர்ச்சியாக வந்த பழக்கத்தால் அவர்களால் வீசப்படும் இலைக்கொத்துக்கள் சிறிதும் குறிதப்பாமல் கூடையில் விழுகின்றன. இம்முறையில் பறித்துக்கொள்ளும் இலைகள் மாலைக்காலத்தில் ஆலைக்காரர்களிடம் கொடுக்கப்படும். பறித்த இலைகளின் நிறை

யைக் கண்டுகொண்ட பின்னர்தான் அத்தொழிலாளியின் சம்பளம் நிச்சயிக்கப்படும் என்று கேள்விப்படுகிறோம். எனவே, அன்றாடச் சம்பளத்திற்கென்று அறுதியிடப்பட்ட அளவுள்ள தேயிலையைப் பறித்தே தீரவேண்டுமென்பது வெளிப்படை. தேயிலைச் செடிகளுக்கு உரம்போடுதலும், பாதுகாத்தலுமாகிய தொழில்களும் இத்தொழிலாளிகளின் செயல்களே ஆகும் என்று கொள்க.

மற்றோர் தொழிலாகிய ரப்பர்த் தொழிலைச் சிறிது கவனிப்போம். ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளிகள் ரப்பர் மரத்தின் பட்டைகளைத் தங்கள் கையிலுள்ள கூரிய ஆயுதத்தால் செதுக்குகின்றனர். பால் சிறிது வெளிக் கிளம்பியதும் பால்சுரக்கும் இடத்தைப் பார்த்துத் தங்கள் கையிலுள்ள அகல்போன்ற கிண்ணத்தை அவ்விடத்தில் பதித்து வைக்கின்றனர். பால் மிகுதியாகக் காணப்படும் மரங்களில் இரண்டு மூன்று கிண்ணங்களையும் அழுத்தி வைப்பதுண்டு. இங்ஙனம் செய்து வருங்கால் முதல்நாளில் அழுத்தப்பட்ட கிண்ணங்களில் பால் நிறைந்திருப்பதைப் பார்த்தபின் தங்களிடமுள்ள ஓர் வாளிபோன்ற பாத்திரத்தில் அப்பாலை ஊற்றிக்கொள்கின்றனர். பின்னர், அம்மரத்திலேயே மேல்ப் பாகத்தில் சிறிது கீறியபின் பால் சுரக்கின்றது. அவ்விடத்தில் மறுபடியும் அக்கிண்ணியைப் பதித்து வைக்கின்றனர். இங்ஙனம் சிறிது சிறிதாகக் கொள்ளப்பட்ட பாலானது ஆலை முதலாளிகளிடம் அளந்து கொடுக்கப்படுகின்றது. பால் எடுத்த அளவிற்கேற்ப கூலியும் திட்டம் செய்யப்பட்டுள்ளது என்க. ரப்பர் மரங்களுக்கு உரங்கள் இடப்பட்டு அவைகள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன. காவலாளர்களும் அமைந்துள்ளார்கள்.

பல இடங்களிலும் சேகரிக்கப்பட்டுள்ள தேயிலையும், ரப்பர் மரத்தின் பாலும் ஆங்காங்கு உள்ள ஆலைகளில் முடிந்த

பொருள்களாகச் செப்பனிடப்படுகின்றன. தயார் செய்யப்பட்ட பொருள்களை வெளிநாடுகளுக்கும் மற்றுமுள்ள உள்நாட்டு ஊர்களுக்கும் ஏற்றிச் செல்ல வேண்டுமாகையால், இலங்கையின் இருப்புப்பாதைகள் இத்தோட்டத் தொழில் மிகுந்துள்ள இடங்களின் வழியாகவே செல்லுகின்றதென்னலாம். பெரிய தோட்டங்களின் ஆலைகள் அமர்ந்துள்ள இடங்களுக்கே சில இருப்புப் பாதைகள் செல்லுகின்றன. இலங்கைத் தீவின் இருப்புப்பாதையைப் பற்றிய இரண்டொரு குறிப்புக்களை ஈண்டுக் கூறுது போவது இயலாததொன்றும். வண்டித் தொடர்களில் அமைந்துள்ள 3 வகையான வகுப்புப் பிரிவுகளில் முதல் வகுப்பே வகுப்பாகும். மற்றைய இரண்டாம் வகுப்பும், மூன்றும் வகுப்பும் பொது மக்கள் ஏறிச்செல்வதற்கான சாதனங்களை நன்கு பெற்றிருக்கவில்லை. மேலும், புகைவண்டி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் சில இடங்களைத்தவிர மற்ற இடங்களில் பிரயாணிகளாகச் செல்லும் வேற்று நாட்டவர்களுக்கு உண்பதற்கும் பருகுவதற்கும் இன்றிமையாத பொருள்கள் சாதாரணமாக விற்கப்படவில்லை. இதன் காரணத்தை நாம் எளிதில் கண்டு கொள்ளலாம். தோட்டவேலைத் தொழிலின் மேன்மைக்காகவும், செல்வ வளர்ச்சிக்காகவும் ஏற்பட்டதான இருப்புப் பாதையும், புகைவண்டி நிலையங்களும் கூலியாட்களை ஏற்றிச் செல்லும் பொருட்டே முன்னர் அமைக்கப்பட்டதாதலின், பொதுமக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்குரிய இன்பசுகங்களை எங்ஙனம் அளித்தல் கூடும்! ஆனல் தற்காலத்து இலங்கை அரசாங்கத்தார் இக்குறைபாடுகளைச் சிறிது சிறிதாக நீக்கி வருகின்றனர். வெகுவிரைவில் தற்பொழுதுள்ள இருப்புப் பாதை வருங்காலத்தில் பொதுமக்களின் வாழ்வுக்கான வெறுப்புப் பாதையாக அமையாது நல்ல விருப்புப் பாதையாகவே அமைந்துவிடக் கூடுமென்று துணிவோமாக.

20. கல்வி நிலை

ஓர் நாட்டின் அரசியல் முன்னேற்றமும் சமூக நல்வாழ்வும், ஆன்மவளர்ச்சியும் அந்நாட்டிடையே உள்ள மக்களுக்கு வழங்கப்படும் கல்வியைப் பொறுத்துள்ளது என்னலாம். மக்கள் கல்விநலனை நன்குதுய்த்தாலன்றி, வாழ்விற்கென அமைக்கப்படும் சட்டங்களோ, திட்டங்களோ மேன்மையுறா வென்பது எக்காலத்தும் உண்மையாதலின், தமிழ் மறையைத் தந்துபோந்த செந்நாப்போதர் தனது குறள் நூலில் கல்வியென்னும் அதிகாரத்தை அரசியலில் வைத்துள்ளார். கல்வி மேம்பட்டால் அடையப்படும் பேறுகளும், கல்வி இன்மையால் விளையும் இன்னல்களும் நன்கு ஆண்டு விதந்தோதப் பெற்றுள்ளன. தக்கோரிலாத நாடு எத்துணைச் செல்வம் பெற்றிருப்பினும் சிறப்புடையதாகாது என்பது யாவரும் அறிந்த தொன்றும். நாடு நாடாகவேண்டுமாயின் அரசியல் நெறியினர் கல்வியின் மேம்பாட்டையும், அதன் பண்பாடுகளையும் எல்லாமக்கட்கும் நன்கு போதித்து தெளிவிக்க வேண்டுமென்பது முதற்கடமையாம் என்று கொள்க.

எழிலும், திருவும் ஒருங்கே அமைந்துள்ள இலங்கை மக்கள் தங்களது வாழ்வில் கல்விநலன் ஓம்புதலையே கண்ணுகக்கொண்டுள்ளனர் என்று கூறின் அது மிகையாகாது. பொதுமக்களில் பல அறிஞர்களும், அரசாங்கத்தினரும் கல்வி வளர்ச்சியில் மிக்க ஆர்வம் கொண்டுள்ளார்கள். கிருத்துவப் பாதிரிகளால் அமைக்கப்பட்டுள்ள கலாசாலைகளும் கல்லூரிகளும் இலங்கையில் காணப்பெறுவதன்றி மற்றுமுள்ள தமிழறிஞர்களாலும் சிறந்த கல்லூரிகள் அமைக்கப்பெற்றுக் கல்வித்தொண்டு ஆற்றப்பட்டு வருகின்றது. இலங்கையிலுள்ள ஒரு சிறு தொகையினரான கிருத்துவர்களன்றி, பெருந்தொகையினரான மக்களால்

பேசப்படுவதும், எழுதப்படுவதுமாகிய மொழி சிங்கள மும், தமிழுமாம். ஆங்கிலக் கல்வியின் வாயிலாகவே உயர்தரக் கல்வியானது போதிக்கப்பட்டு வருகின்ற முறை சமீபகாலங்களில் சிறிது பிறழ்ந்தும் காணப்படுகின்றது. தாய்மொழிவாயிலாகக் கல்வி கற்பித்தலே ஏற்புடைத் தாம் என்ற கொள்கையை அந்நாட்டினரும் ஆதரித்து வருகின்றனர். சிங்கள மொழியினைத் தாய்மொழியாக உடைய சிங்கள மாணவ மாணவிகளுக்கு அம்மொழியி லேயே பல கலை நுட்பங்களைத் தெரிவித்தல் வேண்டுமென்ற நோக்கம் வலியுறவே, தமிழ் மக்கட்கும் அன்னார் தமிழ் மொழி வாயிலாகவே எல்லாக்கலைகளையும் போதித்தல் இன்றியமையாதது என்றும் கருதி வருகின்றனர். வருங் கால வாழ்வில் மக்களின் மனவெழுச்சியை மதித்து நடக்கும் இலங்கை அரசாங்கம், ஆங்கில மொழிக்குரிய சிறப்பிடத்தை அளித்தபிறகு தாய்மொழியின் பெருமைக்கேற்றவாறு கல்வித்திட்டங்களை அமைத்தலும் கூடும்.

வருங்கால வாழ்விற்கென வகுக்கப்படவேண்டிய திட் டங்களை ஒருவாறு நாம் யூகிக்கலாமேயன்றி ஒன்றையும் முடி வாகக் கொள்ளுமாறில்லையாதலால், நிகழ் காலத்தின் கல்வி வளர்ச்சியானது ஆண்டு எம்முறையில் நடந்தேறுகிறது என் பதைச் சிறிது அறிந்து கொள்ளுவோமாக. அரசாங்கத் தாரின் ஆதரவில் நடைபெறும் கல்வித்திட்டமானது பெரி தும் போற்றத்தக்கது என்னலாம். முதல் வகுப்பிலிருந்து சர்வகலாசாலை வகுப்புமுடிய ஏற்பட்டிருக்கும் கல்வி முறை யானது எல்லோர்க்கும் இலவசமானது. சாதி, மதபேத மின்றி வழங்கப்படும் இலவசக் கல்வி, பால் வேற்றுமை யின்றியும் பரந்து செல்லுகின்றது. இதுவன்றோ கல்வியைப் போற்றும் முறையாம்! சிற்றூர்களிலும், நகரங்களிலும் ஏற்பட்டுள்ள ஆரம்பப்பள்ளிகளிலும், கலாசாலைகளிலும்

பிள்ளைகள் வாசித்து வருகின்றனர். பெற்றோர்கள் தங்கள் மக்களை நன்மக்களாகச் செய்யும் கடப்பாடுடைமையானும், அவயத்து முந்தியிருப்பச் செய்தலே இனிது விரும்பும் செயலாகக் கருதுவதானும் அரசாங்கத்தாருடன் ஒத்துழைக்கின்றனர் என்னலாம். படித்து வருகின்ற முறையில் சிலர் உயர்தரக் கல்வியைப் பெறவேண்டிய தகுதியைப் பெறுமற் போயினும் போகலாம். அது வேறு. ஆரம்பக் கல்வியில் இருபாலாரான மக்களையும் பெற்றோர்கள் யாதொரு தடையுமின்றி ஈடுபடுமாறு செய்தல்வேண்டுமென்பது அரசாங்கத்தாரால் வற்புறுத்தப்படுகின்றது. ஈண்டு, தோட்டங்களில் தொழிலாற்றும் பெற்றோர்களுடைய மக்களும், ஆண்டு அமைந்துள்ள பள்ளியிற் சேர்க்கப்பட்டு கல்விபயின்று வருகின்றனர் என்ற செய்தியும் அறியற்பாலதொன்றும்.

கலாசாலைக் கல்வியில் மக்கள் எல்லோரும் இலவசமாகக் கல்வி கற்றுக் கொள்ளுதலன்றி ஏழ்மையின் காரணமாக நூல்கள் முதலானவற்றை வாங்க இயலாத பிள்ளைகள் உபகாரச் சம்பளமும் பெற்று ஊக்கமளிக்கப்படுகின்றனர். நன்முறையில் பழகி வரும் மாணவ மாணவிகள் கலாசாலை ஆசிரியர்களால் நன்கு அன்பு பாராட்டப்பெற்றுப் பெருமையுறுகின்றனர். கல்விச் சாலைகளில் நற்பணி புரியும் ஆசிரியர்கள் அரசாங்கத்தாரால் மற்றுமுள்ள அரசியல் நிர்வாகிகள் போன்று உபகாரச் சம்பளம் அளிக்கப்பட்டு உரிமைகளும் பெற்றுள்ளார்கள். சுருங்கச் சொல்லின் உபாத்திமைத் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கை ஆசிரியர்கள் அரசாங்கத்தாரால் நன்கு மதிக்கப்பட்டும் போற்றப்பட்டும்வருகின்றனர் என்பதே. ஊதியத்தை அளவிட்டுப் பார்ப்போமெனினும் அன்னார் பெற்றுவரும் மாத வருவாய் அவருடைய வாழ்க்கைக்குரிய இலட்சியங்களுக்கு ஆதாரவாக இருக்கக்கூடியதே அன்றி இன்னல் விளைத்துத் துன்பக்கேணியில்

எற்றித்தள்ளுமாறில்லை என்பதே. ஆசிரியப் பணியை அறப் பணியாகக் கருதி இயற்றுதற்கு வேண்டிய சாதனங்களும், மனப்பான்மையும் இலங்கைத் தீவில் இருந்து வருகின்றன என்பதே நாம் ஈண்டு அறியவேண்டிய முக்கியச் செய்தியாகும்.

கலாசாலையைக் கடந்து வந்த மாணவர், பின்னர்ச் சர்வகலாசாலைக் கல்லூரியிற் சேர்ந்து கற்க நேரின், ஆண்டு அவருக்கெனக் கொடுக்கப்படும் உபசரணைகளும், உபசாரங்களும் பலதிறத்தன. இலவசக் கல்வியோடு, புத்தக நிலைய சாதனங்களும், இயல்பற்ற மாணவர்களுக்கு இலவச உணவும், உறையுளும் அரசாங்கத்தாரால் அளிக்கப்படுகின்றன. மேலும் கல்வியில் மேம்பட்டு விளங்கும் பிள்ளைகளுக்குத் தங்கள் சர்வகலாசாலையில் படிக்கவேண்டிய சாதனங்களை அவ்வரசாங்கம் அளிப்பதோடு வேறு நாடுகளுக்கும் அனுப்பி அக்கலைஞர்களின் கலை வளர்ச்சியானது சிறப்படையுமாறு நன்கு ஊக்குகின்றது. கல்வி பயிலும் மாணவ மாணவிகள் இயல்பாகவே கலந்து உரையாடுதலும், அறியாத நூல் நுட்பங்களை வினவிடைகளால் விவரித்து ஐயந் தெளிந்துகொள்ளுதலும், அங்ஙனம் நெருங்கிப் பழகுவதால் ஏற்படும் பால் வேற்றுமைகள் மக்கள் ஒழுக்க நெறியில் இழுக்குறுவண்ணம் அமைத்துக்கொள்ளுதலுமாகிய நல்லிலக்கணங்கள் ஆங்கு இயற்கையாகவே காணப்படுகின்றன. சமூக வாழ்வில் நன்கு ஈடுபட்டுத் தெளிந்த அனுபவசாலிகளான மாணாக்கர்கள் அவர்களின் கல்லூரி வாழ்க்கையைக் கழித்துப் பட்டம் பெற்ற பின்னர் அரசாங்கத்தில் அவர்களின் தகுதிக்கேற்ப உத்தியோகப் பதவிகளையும் பெறுகின்றனர். இலங்கையிலுள்ள அரசாங்கம் தன் பணியாளர்களுக்கென அமைத்துள்ள வசதிகளான உபகாரச் சம்பளம், இலவசப் பிரயாணச் சீட்டு, இலவச மருத்துவம் முத

லானவைகள் புதிதாகப் பட்டம் பெற்ற மாணவனின் உத்தியோகத் துவக்கத்தினின்றும் வழங்கப்படுகின்றன. இம்முறையில் ஆதரிக்கப்படும் கல்வியும், கல்வித் திட்டமும், கல்வி நலனும் இலங்கை மக்களைப் பல்வகையிலும் சிறப்பிப்பதோடு நாட்டின் பெருமித உணர்ச்சியை அவர்களிடையே நன்கு பெருக்குகின்றது என்னலாம்.

---

21. அன்பு நெறியும் அறநெறியும்

சிற்றுயிர்க்கு உற்ற துணையான கல்வி நலனைக் கைக்கொண்டார், பிறவாழியைக் கடத்தலே பெரு நோக்கமாகக் கொண்டமையான், பிறவுயிர்கள் மாட்டு அன்புடையவராய் இருத்தலையே குறிக்கோளாகக் கொண்டு நிற்கின்றனர். கல்வி உடையாரே திருவுடையார் என்பது உண்மையன்றோ! உண்மைக்கல்வியில் ஈடுபட்டுத் தெளிந்த பின்னர், உயரிய வாழ்க்கையின் இலட்சியங்களான அன்பு நெறியும், அறநெறியும் இயல்பாக வளருவதற்கேற்ற மனப்பான்மையை அடைந்து வாழ்தல் இயற்கையாமன்றோ! நாட்டின் எழிலை வளர்க்கும் நற்பண்புடையோர் "நாமார்க்குங் குடியல்லோம் நமனையஞ்சோம்" என்ற விடத்தும், பிறமக்கள்பால் காட்டும் அருளுடைமை வியக்கத்தக்க தொன்றும்! நாட்டின் அணிகள் ஐந்தெனக் கூறிய குறளாசிரியர் இன்பத்தையும் ஓர் அணியாகக் கூறிச்சென்றார். இன்பம் வளருமாறு என்னையெனின், நல்லொழுக்கஞ் செயலமைந்த கல்வித்திறனே கற்று வல்லானொருவனை "தீ தொரீஇ நன்றின் பாலுய்த்து" அறத்தை வளர்க்கின்றது. அறமார்க்கமே இன்பவழிக்குக் காரணமதாகும். அறத்தை வளர்க்கும் அழகிய நிலன் கல்வியாதலானும் கல்வியே கற்புடைப் பெண்டிராய் நின்று

தன்னைப் பெற்றானை நன்மார்க்க நெறியிற் செலுத்தும் தரத்ததாகையானும், கல்வியுடையாரே திருவுடையாரெனக் கொள்ளக் கிடக்கின்றது. கல்வி பெற்ற கண்ணுளர் அன்பெனும் அகத்துறுப்பைத் தாங்கி விளங்கும் பண்புடைமையே மக்கள் மனவெழுச்சிக்கு உறுதுணையாவது. அறநெறி வளர்ந்து ஆன்மகோடிகள் இன்பமடையவேண்டின் அன்பே அணியாகக் கொண்ட அறிஞர் ஓர் நாட்டகத்தே மிகுந்து விளங்கவேண்டுமென்பது இன்றியமையாதது. இருதிறத்த வாழ்க்கையான இல்லறமும் துறவறமும் நன்கு நடைபெற வேண்டுமாயின் அன்புடையார்மாட்டே வளருந்தரத்தது. எனவே, சமூக வாழ்விலும், சமயவாழ்விலும் மக்கள், கல்வியின் பயனான அன்பு முதிர்ச்சியால் யாவரிடமும் ஒன்றிய மனப்பான்மையுடையவராய் வதிந்து வந்தாலன்றி வாழ்க்கையின் பயனைத் துய்த்தோராகாரெனக் கொள்க. குற்றங்களைக் குணமாகக்கொள்ளும் பண்புடையார் மாட்டே உலகம் தங்கி நிற்கின்றது. வாழும் நெறியறிந்து வாழக்கூடிய மக்கள் நிரம்பியுள்ள நாடே நன்னாடாகும். அங்ஙனம், அன்பு நெறியில் நின்று அறம் வளர்க்கும் நெறியுடையார் மிகுந்துள்ள இலங்கைத் தீவின் மேன்மையைக் கண்டவிடத்து அவ்வெழிலுறு தோற்றப் பொலிவைக் குறித்துக் கூறுதுபோதல் இழுக்குடைத்தாம்.

நிலமா மகளுடன் புலமா மகளும் பொருந்தி வாழ்கின்ற இலங்கைத் தீவில் வதிந்து வாழும் மக்கள் செயலாற்று முறையில் பல்வேறு வகைப்பட்டனரெனினும் மக்கட்பண்பில் ஒருமைப்பட்டே திகழ்கின்றனர். பல சிற்றூர்களின் வழியே சென்று பார்ப்போமாயின், இவ்வுண்மை எளிதிற் புலனாம். மக்கள் ஈட்டமாகக் கூடுகின்ற இடங்கள் இயல்பாகச் சிற்றுண்டிச் சாலைகளும், முடிதிருத்தும் சாலைகளும், ஆவண வீதிகளும், ஆலைகளும், ஆலயங்களுமாம்.

சிங்கள மொழியைத் தாய்மொழியாகக்கொண்ட பௌத்தர்களும், தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட இந்துக்களும் மகமதியர்களும், கிருத்துவர்களும் மேலே கூறப்பட்ட இடங்களில் சந்திக்குங்காலை மனமாசு இன்றி அளவளாவுகின்றனர். தமிழ்மொழியைக் கற்ற சிங்களவர்களும், சிங்கள மொழியைக் கற்ற தமிழர்களும், கலந்து உறவாடுகின்ற தன்மை பார்ப்போர்க்கு மிக்க வியப்பைத் தருகின்றது. சிற்றூர்ச் சிற்றுண்டிச்சாலைகளில் வந்து உண்டு களிக்கும் பலரும், சமூக ஒற்றுமைப் பொங்கி வழிகின்றதோ! என்று நினைக்குமாறு உரையாடுகின்றனர். இனிய இடியப்பத்தையும், தூய தேங்காய்ப்பாலையும், நறுமணங்கமழும் தேநீரையும் உண்டு களித்தபின் அவர்கள் உரையாடலில் குற்றங்குறையும் உண்டோ? கிராமக்காட்சியில் காணப்படும் இத்தோற்றப் பொலிவு சில நகரங்களில் வெளிப்படையாகக் காணப்பெறுமல் இருத்தலும் உண்டு. எனெனில், நகர மக்களிடையே அரசியற் குழப்ப உணர்ச்சிகள் அலைமோதி நிற்கின்றமையான் மக்கள் மனப்பான்மை சிறிது மாறுபட்டு இருப்பினும் இருக்கும். சிறிய குழுவினராகத் திகழும் அரசியல் வாதிகளால் அன்பு காந்து காட்டும் செயல்கள் வெளிப்படையில் வெறுப்பாகத் தோன்றினும் அது இலங்கையின் இயல்பான பண்புடைமை அன்றென்று கொள்க. கதிரவனின் கொடிய கதிர்களைக் கண்டு பொறுத கடலலைகள் பொங்கியெழுந்து கனைத்தபோதினும் அடிப்படையான கடல் நீர் அமைதியோடு இருப்பது போன்று உள்நாட்டு அரசியற் குழப்பங்களெல்லாம் ஓர் சிறிய மக்கட் பகுதியில் காணப்படுவதன்றி பெருகிய நிலப்பரப்பிற் காணுமாறு இல்லை. இத்தன்மையான ஒருமைப்பாட்டிற்குக் காரணம் இலங்கை மக்களின் அன்பு கெழுமிய உள்ளமேயாம் எனக் கொள்ளற்பாற்று.

உயரிய சமூக வாழ்விற்குத் தடையாக நிற்கக்கூடிய மதவேற்றுமை, நிறவேற்றுமை, சாதிவேற்றுமை, மொழி வேற்றுமை முதலானவைகள் இலங்கையரசியின் மக்களிடத்துப் பெரிதும் காணப்படவில்லை. சமய வேறுபாடுகள் பலவாயினும் சமயங்களால் கூறப்படும் அறநெறி ஒரு தன்மையுடைத்து என்ற உண்மையை இலங்கை வாசிகள் நன்கு அறிந்திருத்தலினுல்தான் இங்ஙனம் ஒற்றுமையோடு வாழ்கின்றனர் என்று கொள்ளலாகும். கண்டிமாநகரில் நடக்கும் பரகோரா விழாவையும், கதிர்காமத்தில் நடக்கும் விழா நியமத்தையும், மற்றுமுள்ள பௌத்த ஆலயங்களின் வழிபாட்டிற் கலந்துகொள்ளும் மக்கட் திரளையும் கூர்ந்து கவனிக்குங்கால், இலங்கைப் பௌத்தர்களும், இந்துக்களும், மற்றுள்ளாரும் ஓர் தாயின் வயிற்றுதித்த சேய்களே போல்வர் என்று உறுதியாகக் கூறலாம். சிங்களவர் தங்கள் மனைக்கு விருந்தினராக வரும் இந்து சமூகத்தினரையும் மற்றுமுள்ளோரையும் முகமன் கூறி உபசரிக்கின்ற முறை பெரிதும் போற்றத் தக்கது. ஆதம்மலை என்ற மலைக் கோயிலிலுள்ள திருப்பாதத்தைத் தரிசிக்கச் செல்லும் பௌத்தர்களும், இந்துக்களும், மகம்மதியர்களும், கிருத்துவர்களும் எண்ணிலர். எந்நாட்டவர்க்கும் இறைவனுக விளங்கி நின்ற ஆண்டவன் இந்நாட்டின்கண் எல்லோர்க்கும் தனது திருவடித் தாமரையைத் தரிசிக்குமாறு ஏற்படுத்தியருளியது சிறப்பினும் சிறப்பன்றோ!

சமய வேறுபாடின்றி சமூக வாழ்விற் கலந்து வாழும் இலங்கை வாசிகளின் செல்வ நிலைப் பெருகி வளர்தற்கு வாட்டமென்னை? கலாசாலைகளிலும் கடை வீதிகளிலும் எளிய மனப்பான்மையுடன் பழகிவரும் அம்மக்கள் கல்வித் துறையிலும் மேம்பாடுற்று விளங்குகின்றனர். அன்பின் வழியே உயிர் நிலையாதலின், அன்பு மிகுந்த வாழ்க்கையே

உண்மையான உயிர் வாழ்க்கையானதன்றி உயர் வாழ்க்கையாகவும் ஆயிற்று. அன்புடைமையே பண்புடைமையாதலானும், அன்பின் பயனே அறமாதலானும், அவ்வற நெறியே இலங்கைத் தீவில் எழிலுற்று எழுகின்றதாதலானும் இன்பம் பொழிகின்றதாம்.

இலங்கையின் அருந்தவ மக்கள் அன்பு நெறியானும், அறநெறியானும், ஆன்மச்செல்வத்தைப்போற்றி வளர்த்தும், இன்ப வாழ்க்கையைத் துய்த்துக் களித்தும், வீட்டுப் பேற்றினை விடாது முயன்றும் நிற்கின்ற சீர்மையைக் காணுங்கால் இலங்கை அரசி தன்னை "**எழிலார் இலங்கை**" என்றே கருதிப் பெருமிதங் கொள்வாளென்னும் உறுதியுடையேம்.

—

2c
18/5

BEAUTIFUL LANKA

By

P. M. SUNDARAM

Tamil] [Price Re. 1—10—0